https://www.facebook.com/VaikaraiVeliccam

Volume : 5 Issue -12

பெப்ரவரி 2013


ரபி அல் தானி 1434


# வைகறை

## வெளிச்சம்

₹20

ஆசிரியர் : மு.குலாம் முஹம்மது



அப்சல் குரு அவசர பலி..

உள்ளே


- சிலுவைப்போர்கள் – புதிய தொடர்
- நக்கீரனுக்கு மறுப்பு
- தடா ரஹீம் மற்றும் இஸ்லாமிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஹனீபா பேட்டி
- நக்கீரனுக்கு மறுப்பு
- வி.களத்தூர் கலவரம்

இன்னும் பல.......

# வைகறை வெளிச்சம்

பெப்ரவரி 2013 - ஹிஜ்ரி 1434 ரபி-அல்-தானி



*ஆசிரியர்:*

**மு.குலாம் முஹம்மது.** M.A
(Journalism & Mass Communication)

*துணை ஆசிரியர்:*

**கே.எம். இல்யாஸ் ரியாஜி**



*தனி இதழ் ரூ.20/-, ஆண்டு சந்தா உள்நாடு ரூ.240/-, வெளிநாடு ரூ.1500/- பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் வைகறை வெளிச்சம் என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.*

*எண்.52/1 மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை-1.*


பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான். உன் நடையில் (மிக வேகமோ, அதிக சாவதானமோ இல்லாமல்) நடுத்தரத்தை மேற்கொள்; உன் குரலையும் தாழ்த்திக் கொள்; குரல்களிலெல்லாம் வெறுக்கத்தக்கது நிச்சயமாக கழுதையின் குரலேயாகும். ( அல்குர்ஆன்31 : 18,19)





-05






- 15







-10


**கவர் ஸ்டோரி**




**22**





**சிலுவைப்போர்கள் புதிய தொடர் 20**

**இது தானா உங்கள் கருத்து சுதந்திரம்** - 02

**குழந்தைகளைப் பாதுகாப்போம்! அடுத்துக் கெடுப்பவர்களிடமிருந்து...** - 45

**அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள் இறை வேதமும் மனித மனமும்** - 52

**நக்கீரனுக்கு மறுப்பு** - 55

**நாம் தேடும் புதிய தலைமுறை** - 57

**கர்கரேயை கொலை செய்தது யார்?** - 59

**வி.களத்தூர் என்ற ஊரில் மதக்கலவரம்.** - 61

**அஃப்சல் குரு அவசர பலி** - 63



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai Courts. Private Circulation to promote Original Issue.

# இதுதானா உங்கள் கருத்து சுதந்திரம்...

இந்தத் திரைப்படம் பற்றிய பேச்சுக்கள் வெளிவரத் தொடங்கிய நாள் முதலே இன்னொரு சொல்லும் பேசப்பட்டுக் கொண்டேயிருந்தது.

அது, "கருத்துச் சுதந்திரம்" என்ற சொல். விஸ்வரூபம் திரைப்படத்தின் கதையோட்டத்தையும், காட்சியமைப்புக்களையும், வசனங்களையும் விமர்சிப்பதே கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானது என்று நீட்டி முழக்கினார்கள் நியாயவான்கள்?! எனப்படும் சிலர்.

அந்தத் திரைப்படத்தைத் தயாரித்து, இயக்கி, நடித்துள்ள நடிகர் கமல்ஹாசன் தன் திரைப்படத்தை எதிர்க்கும் முஸ்லிம்களை "மனப்பிரமைக்குள்ளான சிறு கூட்டம்" என்றார். இன்னும் சற்று மேலே போய் 'விஸ்வரூபம்' திரைப்படத்தைத் திரையிட விடாமல் தடுப்பது "கலாச்சார தீவிரவாதம்" என்றார் அந்த நடிகர்.

திரைப்படம் என்பது என்ன? அது ஒரு பொழுதுபோக்கும் கருவி. அன்றாட அலுவல்கள் தரும் அழுத்தங்களிலிருந்து சற்று தம்மை விடுவித்துக் கொள்ள விரும்புவோர் நாடிச் செல்லும் பல பொழுது போக்கு அம்சங்களில் திரைப்படமும் ஒன்று.

ஆனால் பொதுமக்கள் அதை வெறும் பொழுதுபோக்காக மட்டும் எடுத்துக் கொள்வதில்லை. தம் வாழ்வின் ஓர் அங்கமாகவே பார்க்கின்றார்கள். திரையில் நல்லவன் - உண்மையில் நல்லவன், திரையில் தீயவன் - தரையிலும் தீயவனே என்றே மக்கள் நம்புவதால் தான் கலைஞர், எம்ஜிஆர், ஜெயலலிதா, ஜானகி ஆகியோர் முதல்வர்களாக முடிந்தது. திமுகவை பின்னுக்குத் தள்ளிவிட்டு விஜயகாந்த் (பயங்கரவாதிகளை?! பாய்ந்து பிடிப்பதில் வல்லவர்?!) பிரதான எதிர்க்கட்சித் தலைவராக முடிகிறது.

திரையில் நடப்பதெல்லாம் தரையில் நடக்கும் யதார்த்தங்களின் மறுவடிவமே என்று நம்பும் ஒரு சமுதாயத்தில் முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகவும், ஒழுக்கங் கெட்டவர்களாகவுமே கொடூரமனம் படைத்தவர்களாகவும் சித்தரித்து (முக்கிய நடிகர், ஐம்பதாண்டு கால திரைவாழ்வின் அனுபவசாலி) ஒருவர் படம் எடுத்தால் அது எந்த மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருத்துச் சுதந்திரம் பற்றிப் பேசும் சிங்கங்கள்?! எவரும் சிந்திக்கவேயில்லை.

ஏனெனில் இந்தச் சிங்கங்களெல்லாம் முஸ்லிம்களின் கோரமுகத்தைக் கமல் இன்னும் முழுமையாகக் காட்டவில்லை என்று நம்புகின்றவர்கள். ஆர்.எஸ்.எஸ் போன்ற பயங்கரவாதிகளால் தூவப்பட்ட மதவெறி எனும் விஷ விதைகளுக்குப் போதிய அளவுக்கு கமல் தண்ணீர் ஊற்றவில்லை என்று கவலை கொள்கின்றவர்கள்.

"முஸ்லிம்கள் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானவர்கள் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத சகிப்புத் தன்மையற்றவர்கள், கலாச்சார பயங்கரவாதிகள் என்ற

எண்ணத்தை ஏற்படுத்திவிடாதா நீங்கள் விஸ்வரூபம் திரைப்படத்தை எதிர்ப்பது?" என்று சன் நியூஸ் தொலைக்காட்சி விவாதத்தில் நிகழ்ச்சியை நடத்துபவர் கேட்டபோது வக்ஃபு வாரியத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் கவிக்கோ அப்துர் ரஹ்மான் அவர்கள் "என்னைத் தாக்கினால் தாங்கிக் கொள்வேன். என் உயிரினும் மேலான இஸ்லாத்தையும், திருக்குர்ஆனையும், நபிகள் நாயகத்தையும் இழிவுபடுத்தினால் நான் பொறுத்துக் கொள்ள முடியாது" என்றார்.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்கு எதிராக தூவப்படும் விஷவிதையை நீர் ஊற்றி வளர்ப்பது பொறுப்பற்ற செயல் என்றும் கமலைச் சாடினார் கவிக்கோ.

முஸ்லிம்களுக்கு எதிராக எவ்வளவு இழிவாகப்பேசினாலும் அது கருத்துச் சுதந்திரம். தம் மீது ஏவப்படும் அவதூறுக் கணைகள் குறித்து அரசிடமும் காவல்துறைத் தலைவரிடமும் முஸ்லிம்கள் முறையிட்டால் கூட அது பயங்கரவாதம் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான தீவிரவாதம் என்ற இரட்டை நிலையை எல்லா ஊடகங்களும் மேற்கொண்டதைப் பச்சையாகவே காண முடிந்தது 'விஸ்வரூபம்' விவகாரத்தில்.

144 தடை உத்தரவு என்ற விதியின் கீழ் தமிழக அரசு விஸ்வரூபம் திரைப்படம் வெளியிடத் தடை விதித்தபின் அதை எதிர்த்து நீதிமன்றம் சென்ற கமல், "தனிமனிதன் தானே வீழ்த்திப் பார்த்து விடலாம் என்று நினைக்காதீர்கள்" என்று மிரட்டினார் பத்திரிகையாளர் சந்திப்பில்.

தனக்குப் பின்னால் இந்துத்துவ பயங்கரவாதிகளும், அமெரிக்கா எனும் பயங்கரவாத அரசும் ஆதரவாக இருப்பதாகச் சொல்லாமல் சொன்னார் கமல். ஆம் இந்துத்துவ பயங்கரவாதிகள் கமலுக்கு ஆதரவாக அறிக்கை விட்டார்கள். அமெரிக்காவில் கமலுக்கு பாராட்டு வழங்கப்பட்டதாகவும் தகவல்.

"என் திரைப்படம் வெளியிடுவதைத் தடுத்தால் வேறு நாட்டுக்குச் சென்று விடுவேன்" என்று பிதற்றினார் கமல். சல்மான் ருஷ்டி, தஸ்லீமா நஸ்ரீன் வரிசையில் கமலுக்கும் இடம் தந்திட சில நாடுகள் தயாராக இருக்கும். இதன் மூலம் கமலின் கருத்துச் சுதந்திரப்பின்னணி பளிச்செனவே தெரிகின்றது.

இந்தத் திரைப்படம் வெளிவந்தால் சமூக அமைதி கெடும். சமய நல்லுறவு பாழாகும். அமைதிப்பூங்காவான தமிழகம் அமளிக்காடாகும் என அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கூறியபோது, கமல் தரப்பு வழக்கறிஞர் "திரைப்படம் ஓடும் தியேட்டர்களுக்கு தமிழக அரசு தன் காவல் துறை மூலம் பாதுகாப்புத் தரவேண்டும் " என்றார். (இதையே பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் கூறினார்கள். இதில் எல்லா கட்சிகளும் அடங்கும்)

"படம் வெளிவராவிட்டால் எனக்கு இழப்பு, என் வீடும் என்னை விட்டுப் போய்விடும்" என்று பச்சோதாபம் தேடினார் கமல். (நடிகர் மேலும் மகாநடிகர் ஆனார்)

அதாவது தியேட்டர்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அரசு பல நூறுகோடிகள் மக்கள் வரிப்பணத்தை செலவிட வேண்டும். படத்தின் மூலம் வரும் வருமானம் கமலின் கல்லாப் பெட்டியை நிரப்ப வேண்டும். செலவு அரசுக்கு, வருமானம் கமல் என்ற தனி நபருக்கு.

கலவரம் வந்தால் உயிரிழப்பு முஸ்லிம்களுக்கு, சிறந்த நடிகர் விருது கமலுக்கு. இப்படத்தின் வருமானத்தை வைத்து இதைவிட பெரிய செலவில் "விஸ்வரூபம் - 2"

*படமெடுப்பார் கமல். (Coming Soon in India என்று தான் திரைப்படம் முடிகிறது). உயிர்களை பலி தந்திட முஸ்லிம்கள் மறுக்கக் கூடாது. (மறுத்தால் அதை கலாச்சார பயங்கரவாதம் என்பார்.)*

*இதற்கு பெயர் தான் கருத்துச் சுதந்திரம் என்றால், "உங்கள் கருத்துச் சுதந்திரத்தில் இடி விழட்டும்".*

*இப்படியொரு கதையை வைத்து இப்படி ஒரு படம் இப்போதைக்கு ஏன் தேவை? கருத்துச் சுதந்திரத்தின் பெயரால் இந்தப் படத்தை ஓட்டியே தீர வேண்டும் என வெறிக் கொண்டு அலைவது ஏன்?*

*கருத்துச் சுதந்திரத்துக்கும், சிந்தனைச் சுதந்திரத்துக்கும் எதிரானவர்கள் முஸ்லிம்கள் எனப்பேசும் கோமான்களே?! முஸ்லிம்களின் எதிர்ப்பும் கருத்துச் சுதந்திரம் தானே! அதைத் தடுப்பது கருத்துப் பயங்கரவாதமில்லையா?*

*எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்: இது உங்கள் இறைவனிடமிருந்து வந்த உண்மை(மார்க்கம்) இதை ஏற்க விரும்புவோர் ஏற்கட்டும், மறுக்க விரும்புவோர் மறுக்கட்டும் (அல்குர்ஆன் 18:29)*

*இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டு திகழும் இஸ்லாமிய அரசு தம் குடிமக்களுக்கு ஏற்கவும் மறுக்கவுமான சிந்தனைச் சுதந்திரத்தை வழங்கிற்று.*

*எந்த மதத்துக்கும் மதத்தலைவர்களுக்கும் எதிரான போக்கும், நோக்கும் அற்ற அரசாகவே இஸ்லாமிய அரசுகள் திகழ்ந்தன. கருத்துச் சுதந்திரத்தின் பெயரால் எவரும் எவர் மீதும் பாயவில்லை.*

*இதோ ஒரு வரலாறு:*

*நபி(ஸல்) அவர்கள் அமர்ந்து கொண்டிருந்தபோது யூதர் ஒருவர் வந்து "அபுல் காசிமே உங்கள் தோழர்களில் ஒருவர் என் முகத்தில் அறைந்து விட்டார்" என்று கூறினார். நபி(ஸல்)அவர்கள், (அந்த தோழர்)யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், "அன்சாரிகளில் ஒருவர்" என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள், "அவரைக் கூப்பிடுங்கள்" என்று உத்தரவிட்டார்கள். அவர் வந்து சேர்ந்தவுடன், இவரை நீர் அடித்தீரா? என்று கேட்டார்கள். அந்த அன்சாரி, "இவர் கடைவீதியில், மனிதர்கள் அனைவரையும் விட மூஸாவுக்கு மேன்மை அளித்தவன் மீது சத்தியமாக!" என்று ஆணையிட்டுக் கூறிக் கொண்டிருந்ததை நான் செவியுற்றேன். உடனே நான், தீயவனே முஹம்மதை விடவா மூஸா மேன்மை வாய்ந்தவர் என்று கேட்டேன். என்னைக் கோபம் ஆட்கொண்டுவிட, இவரது முகத்தில் அறைந்து விட்டேன் என்று கூறினார். இதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள், "நபிமார்களுக்கிடையே ஒருவரை மற்றொருவரை விட உயர்த்திப் பேசாதீர்கள்." (நூல்: புஹாரி 2412.)*

*முஸ்லிம்கள் பெருமான்மையினராகவும், யூதர்கள் சிறுபான்மையினராக வாழும் இஸ்லாமிய நாட்டில் தன் கருத்தை சொல்ல அந்த யூதனுக்கு இருந்த உரிமையைப் பறித்திட நபி(ஸல்)அவர்கள் விரும்பவில்லை என்பதோடு பெரும்பான்மையினருக்குரிய பொறுப்புணர்வையும் அங்கே நபி அவர்கள் உணர்த்தினார்கள்.*

*இப்படி கமலும், அவருக்கு ஆதரவாக வரிந்து கட்டி நிற்பவர்களும் அறிந்திட ஏராளம் இருக்கிறது இஸ்லாத்தில். அதை ஏற்கும் வழிகளும் எவராலும் அடைக்க முடியாதபடி திறந்தே இருக்கிறது.*





# தரீக்குல் குர்ஆன்

மவ்லவி K.M.இல்யாஸ் ரியாஜி

وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ إِنَّ اللَّـهَ
يَأْمُرُكُمْ أَن تَذْبَحُوا بَقَرَةً ۖ قَالُوا أَتَتَّخِذُنَا
هُزُوًا ۖ قَالَ أَعُوذُ بِاللَّـهِ أَنْ أَكُونَ مِنَ
الْجَاهِلِينَ (٦٧) قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ
يُبَيِّن لَّنَا مَا هِيَ ۚ قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ
لَّا فَارِضٌ وَلَا بِكْرٌ عَوَانٌ بَيْنَ ذَٰلِكَ ۖ
فَافْعَلُوا مَا تُؤْمَرُونَ (٦٨)

இன்னும் (இதையும் நினைவு கூறுங்கள்;) மூஸா தம் சமூகத்தாரிடம், "நீங்கள் ஒரு பசுமாட்டை அறுக்க வேண்டும் என்று நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்" என்று சொன்னபோது, அவர்கள்; "(மூஸாவே!) எங்களை பரிகாசத்திற்கு ஆளாக்குகின்றீரா?" என்று கூறினர்; (அப்பொழுது) அவர், "(அப்படிப் பரிகசிக்கும்) அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடாமல் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று கூறினார். (67)

"அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்கும்படி உம் இறைவனிடம் எங்களுக்காக வேண்டுவீராக!" என்றார்கள். "அப்பசு மாடு அதிகக் கிழடுமல்ல, கன்றுமல்ல, அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகும். எனவே 'உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்' என்று அவன் (அல்லாஹ்) கூறுவதாக" (மூஸா) கூறினார். (68)

## வசனம் 67

இஸ்ரவேல் சமுதாயத்தில் அழகான பெண் ஒருத்தி இருந்தாள். அவளை திருமணம் செய்திட ஒருவன் விரும்பினான். அதற்காக அவளின் தந்தையை அணுகி முறைப்படி பெண் கேட்டான். பெண்ணின் தந்தை இதற்கு உடன்படவில்லை. மறுத்துவிட்டார். இதனால் கோபமுற்ற அவன் அவரைக் கொலை செய்து பிணத்தை இரு ஊர்களுக்கும் பொதுவான இடத்தில் போட்டுவிட்டு யாருக்கும் தன் மீது சந்தேகம் வராதபடி போய்விட்டான்.

பொது இடத்தில் ஒரு பிணம் கிடப்பதைக் கண்ட இஸ்ரவேலர்கள் பரபரப்படைந்தனர். கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க முயன்றனர். முடியவில்லை. இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களிடம் வந்து இதுபற்றிக் கூறினர். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் ஒரு பசுமாட்டை அறுத்து அதன் ஒரு பகுதியை எடுத்து கொல்லப்பட்டவரின் பிணத்தின் மீது அடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவரே உயிர் பெற்று எழுந்து தம்மைக் கொலை செய்தவர் யார் எனக் காட்டிவிடுவார். இது அல்லாஹ்வின் கட்டளை என மூஸா (அலை) கூறினார்கள்.

**(நூல்: குர்த்துபீ)**

இந்தக் கொலை நடந்ததற்கு வேறொரு காரணம் கூறப்படுகின்றது.

இஸ்ரவேலர்களில் ஒரு பெரும் செல்வந்தர் இருந்தார். அவருக்குக் குழந்தைகள் ஏதும் இல்லை. அவருடைய சகோதரரின் மகன் ஒருவன் இருந்தான். (இவர் இறந்து விட்டால்) அவனே இவரின் வாரிசாவான். இவர் இறக்கும் வரை காத்திருக்க மனமில்லாமல் பொறுமை இழந்த அவன் சொத்துக்களை சீக்கிரம் அடையும் நோக்கத்தில் அவரைக் கொலை செய்து விட்டான். இரவோடு இரவாக அவரின் பிணத்தைத் தூக்கி வந்து இன்னொருவரின் வீட்டு வாசலில் வைத்து விட்டுப் போய்விட்டான்.

காலையில் வந்த அவன் அந்த வீட்டுக்காரர்தான் கொலை செய்துவிட்டார் என பழி சுமத்தினான். இதனால் குழப்பம் தலைதூக்கியது. ஒருவர் மற்றவரைத் தாக்கிக்கொள்ள ஆயுதம் எடுத்து மோதிக் கொண்டனர். அப்போது அவர்களில் உள்ள சிந்தனைத் திறன் பெற்ற அறிவாளிகள் அம்மக்களிடம் இதற்காக ஏன் மோதிக்கொள்கிறீர்கள். அல்லாஹ்வின் திருத்தூதர் மூஸா (அலை) அவர்களிடம் சென்று விளக்கம் கேட்கலாம்! என யோசனை கூறினர்.

இதனை ஏற்று இஸ்ரவேலர்கள் மூஸா நபியிடம் வந்தனர். நடந்தவற்றையெல்லாம் கூறினர். அதனைக் கேட்ட மூஸா (அலை) ஒரு பசுவை அறுக்கும்படி அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான் என்று கூறினார்கள். அதன் ஒரு பகுதியை எடுத்து இறந்தவரின் உடலில் அடித்தால் அவர் உயிர் பெற்று எழுந்து குற்றவாளியைக் கூறிவிடுவார் என்று கூறினார்கள்.

**(நூல்: குர்த்துபீ, இப்னு கதீர்)**

ஹழ்ரத் இக்ரிமா (ரஹ்) கூறுகின்றார்கள். "இஸ்ரவேலர்களின் பள்ளிவாசலுக்கு பன்னிரெண்டு வாசல்கள் இருக்கும். இஸ்ரவேலர்களிலுள்ள பனிரெண்டு பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவும் தனக்குரிய வாசல் வழியாகவே பள்ளிவாசலுக்குள் நுழைவர். கொலை செய்தவன் பிணத்தை அந்த வாசல்களில் ஒரு வாசலுக்கு நேரேகொண்டு வந்த போட்டுவிட்டான். அங்கே பிணத்தைக் கண்ட இஸ்ரவேலர்கள் இந்தப் பிரிவினர்தான் கொலை செய்திருப்பர் என வாதிட்டனர். அவர்கள் மறுத்தனர். மூஸா நபியிடம் விஷயம் வந்தது. குற்றவாளியை அறிந்திட ஒரு பசுவை அறுக்கும்படி அல்லாஹ் கட்டளையிடுவதாக மூஸா நபி கூறினார்கள்."

**(நூல் : குர்த்துபீ)**

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகின்றார்கள்: தம் தந்தையின் சகோதரருடைய சொத்துக்களை விரைவாக அடைந்துகொள்ள அவரைக் கொலை செய்தான். **(நூல் : குர்த்துபீ)**

இமாம் மாலிக்(ரஹ்) கூறுகின்றார்கள்: உஹைஹா பின் ஜுலாஹ் என்பவன் தம் தந்தையின் சகோதரரைக் கொலை செய்தான். ஒரு கொலையாளி அவனால் கொல்லப்பட்டவரின் சொத்துக்கு வாரிசாக முடியாது என்ற சட்டம் வருவதற்குக் காரணமே இந்த சம்பவம்தான். இஸ்ரவேலர்களின் காலத்தில் ஏற்பட்ட இச்சட்டத்தை இஸ்லாமும் உறுதி செய்து விட்டது.

**(நூல்: முஅத்தாவை மேற்கொள் காட்டி குர்த்துபீ)**

ஒரு பசுவை அறுத்திட வேண்டுமென அல்லாஹ் கட்டளையிடுகின்றான் என்று மூஸா நபி இஸ்ரவேலர்களிடம் கூறியபோது கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கும் மாட்டை அறுப்பதற்கும் என்ன சம்பந்தம் என்றே சிந்தித்தனர். அல்லாஹ்வின் கட்டளையில் உள்ள நுட்பங்களை அவர்கள் சிந்திக்கவும் இல்லை. அதை ஏற்கவும் முன்வரத் தயங்கினர்.

"எங்களை பரிகாசப் பொருளாகக் கருதி கேலி செய்கின்றீரா?" என்று மூஸா நபியிடம் இஸ்ரவேலர்கள் கேட்டனர்.

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் அம்மக்களின் தலைவர். அல்லாஹ்வின்

கட்டளைப்படியும் அவனது மேற்பார்வையிலும் அவனின் பேரருளாலும் அம்மக்களை இழிந்த வேதனையிலிருந்து காப்பற்றிய நபி. இது அவர்களின் சுய முடிவோ சொந்த அபிப்பிராயமோ அல்ல. அல்லாஹ்வின் கட்டளை என்று அவர்கள் தெளிவுபடுத்திய பின்னரும் அம்மக்கள் எங்களைப் பரிகாசம் செய்கிறீர்களா? எனக் கேட்டது மதியீனம். ஒழுங்கீனம். மேலும் அல்லாஹ்வின் கட்டளைப் பற்றிய விஷயத்தில் ஒரு சங்கை மிக்க இறைத்தூதர் கேலியும் கிண்டலுமாக பேசுவார் என்று நினைப்பதே ஒரு தீய மோசமான எண்ணம். ஒரு சாதாரண மனிதனே இப்படி நடந்து கொள்வான் என்று நினைக்க முடியாதபோது ஒரு இறைத்தூதர் அல்லாஹ்வின் கட்டளையே கேலிப் பொருளாக ஆக்குவார் என்பது அவர்மீது சொல்லப்படும் அவதூறுதான்.

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

அம்மக்கள் அப்படிக் கேட்டபோது அதற்கு மூஸா நபியவர்கள் நளினத்துடனும் நயக்கத்தக்க நாகரீகத்துடனும் அம்மக்களின் தீய கேள்வியை நாசூக்காகப் புறக்கணித்தும் பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் ஆற்றலை அறிந்திராத ஒழுக்கம் தெரியாத ஒரு மடையனால் மட்டுமே இப்படிக் கூறினார்கள் மூஸா நபி: "மடையர்களில் ஒருவனாக நான் ஆகியிருப்பதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்."

இறைத்தூதர் அவர்கள் இவ்வாறு பதிலளித்தது அம்மக்கள் தங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு தம் இறைவனை நோக்கித் திரும்பி இறைத்தூதரின் கட்டளையை செயல்படுத்திடப் போதுமானதாக இருந்தது. எனினும் அவர்கள் இஸ்ரவேலர்கள் அல்லவா? அவர்களிடம் வசதிவாய்ப்புக்கள் இருந்தன. அதனால் ஏதேனும் ஒரு மாட்டை வாங்கி அதை அறுத்து அல்லாஹ்வின் கட்டளையை செயல்படுத்தி இறைத்தூதரின் வழிகாட்டுதலை ஏற்றிருக்க முடியும்.

எனினும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களின் இயற்கை குணம் அவர்களிடம் அப்பிக் கொண்டிருந்தது.

## வசனம் 68

அவர்கள் மூஸா நபியிடம் "உம் இறைவனிடம் வேண்டுவீராக. அது எத்தகையது என்று அவன் எங்களுக்கு தெளிவுபடுத்துவான்" என்று கூறினர். இஸ்ரவேலர்கள் இவ்வாறு கூறியது மூஸா நபியவர்கள் பரிகாசம் செய்கின்றார்கள் என்ற சந்தேகம் அவர்களின் மனதிலிருந்து அகலவில்லை என்பதையே காட்டுகின்றது.

இங்கே இரு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று "உம் இறைவனிடம் வேண்டுவீராக." என்கின்றனர் இஸ்ரவேலர்கள். என்னவோ மூஸா நபிக்கு மட்டுமே அவன் இறைவன் போலவும் தங்களுக்கு அவன் இறைவன் இல்லை என்பது போலவும் இது இருக்கிறது. மேலும் இந்தக் கேள்வி மூஸா நபிக்கும் அவரின் இறைவனுக்கும் மட்டுமே அவசியம். தங்களுக்கு அது அவசியம் இல்லாத ஒன்று என்பது போலுள்ளது அவர்களின் வார்த்தை.

இரண்டாவது, அது எத்தகையது என இறைவனிடம் வேண்டித் தெரிவிக்கும் படி கேட்டுக் கொண்டனர். எந்த அடையாளமும் குறிப்பும் இன்றி ஒரு மாடு என்று கூறிய பின்னர் அது எத்தகையது ? "மாஹிய" அது என்ன? என்று கேட்பது இறைவனின் கட்டளையை கேலியும் கிண்டலும் செய்து புறக்கணிப்பதாகும்.

இந்தத் தடவையும் நாகரீகமாக நல்லதோர் பதிலையே மூஸா (அலை) கூறினார்கள். அவர்களின் கேலி கலந்த கேள்விக்கு அதே முறையில் அதே வழியில் பதில் தந்து தேவையற்ற விவாதத்தில் நுழைந்திடவில்லை அவர்கள். வீணர்களான மடையர்களைக் கொண்டு அல்லாஹ்வால் சோதிக்கப்பட்ட ஓர் ஆசான் ஒரு சீர்திருத்தவாதி எப்படி பதில் தர வேண்டுமோ அப்படி இருந்தது அவர்களின் பதில்.

அது கிழடும் அல்ல. இளங்கன்றும் அல்ல. அவற்றுக்கிடையே நடுத்தரமானது என்று தெளிவுபடுத்திய மூஸா (அலை) அவர்கள், உங்களுக்குக் கட்டளை இடப்பட்டதை செயல்படுத்துங்கள் என்று உறுதியான ஓர் உபதேசத்தையும் அழுத்தமாக வலியுறுத்தினார்கள் இஸ்ரவேலர்களிடம்.

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகின்றார். (மாட்டை அறுங்கள் என அல்லாஹ் கூறிய உடன்) ஏதேனும் ஒரு மாட்டைக் கொண்டு வந்து அறுத்திருந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். எனினும் அவர்கள் கடுமையான கேள்விகளைக் கேட்டு மூஸா நபிக்கு சிரமம் தந்தனர். அல்லாஹ்வும் இவ்விஷயத்தை அவர்களுக்குக் கடுமையாக்கி விட்டான்.

மேலும் (2:68) வசனத்தில் இடம் பெற்றுள்ள ஃபாரிள்பிக்ர், அவான் ஆகிய வார்த்தைகளுக்கு விளக்கமளித்த ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழி கூறினார்கள், கன்றே ஈனாமல் முதுமையடைந்த கிழட்டுப் பசுவே ஃபாரிள் ஆகும். ஒரே ஒரு கன்று மட்டும் ஈன்ற பசு பிக்ர் ஆகும். அவான் என்றால் ஒருபசு ஒரு கன்றை ஈன்று அது வளர்ந்து கன்று ஈன்றது. இந்தப் பாட்டிப் பசுதான் அவான் ஆகும்.

"இந்த அவான் தான் அறுக்கப்பட வேண்டும்" என அல்லாஹ் கட்டளையிட்டான்.
**(நூல்: இப்னு கதீர்)**

இஸ்ரவேலர்கள் கேள்விமேல் கேள்வி கேட்கக் கேட்க அது அவர்களுக்கே சிரமமாக வந்து முடிந்தது. அல்லாஹ்விடமிருந்து அவனின் திருத்தூதரிடமிருந்து ஏதேனும் ஒரு கட்டளை வந்தால் எதிர்க்கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்காமல் அதை அப்படையே ஏற்று நடப்பது தான் புத்திசாலித்தனம் என்பது இவ்வசனங்களிலிருந்து நாம் பெற வேண்டிய முக்கியமான படிப்பினையாகும்.

அண்ணல் நபி (ஸல்) ஒரு முறை மக்களுக்கு உரையாற்றினார்கள். "மக்களே ... அல்லாஹ் உங்களுக்கு ஹஜ் வணக்கத்தைக் கடமையாக்கியுள்ளான். எனவே நீங்கள் ஹஜ் செய்யுங்கள்" என்று கூறினார்கள். அவ்போது கூட்டத்தில் இருந்த அல்அக்ரஃ இப்னு ஹாபிஸ் (ரழி) என்ற கிராமவாசி (நபித்தோழர்) எழுந்தார், "அல்லாஹ்வின் திருத்தூதரே! ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் செய்வது கடமையா?" என்று கேட்டார்.

உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "நான் ஆம் என்று கூறி விட்டால் வருடந்தோறும் ஹஜ் செய்வது கடமையாகிவிடும். அப்படிக் கடமையாகி விட்டால் நீங்கள் அதை செயல்படுத்த மாட்டீர்கள். செயல்படுத்த சக்தி பெறவும் மாட்டீர்கள். ஹஜ் வாழ்க்கையில் ஒருமுறைதான் கடமை. ஒன்றுக்கும் மேற்பட்ட ஹஜ் செய்தால் அது (நஃபில்) உபரியானதாகும்" என்று கூறினார்கள்.

***(அறிவிப்பாளர்: இப்னுஅப்பாஸ் (ரழி) நூல்: அஹமது, அபூதாவூத், நஸயீ)***

இன்னொரு அறிவிப்பில் "எதைப் பற்றி நான் எதுவும் குறிப்பிடாமல் விட்டு விட்டேனோ அதுபற்றி நீங்கள் கேள்வி கேட்க வேண்டாம். உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமூகத்தினர் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் இறைத்தூதர்களுக்கு மாறு செய்ததாலும் தான் அழிந்து போயினர். எனவே ஏதேனும் ஒன்றை செயல்படுத்தும்படி உங்களுக்கு நான் கட்டளையிட்டால் உங்களால் முடிந்தவரை அதை செயல்படுத்துங்கள். செய்யக் கூடாது என்று நான் தடுத்தவற்றை அடியோடு கைவிடுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று இடம் பெற்றுள்ளது.

***(அறிபிப்பாளர்: அபூஹுரைரா (ரழி), (நூல்: அஹ்மது, முஸ்லிம்)***

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: "இறை நம்பிக்கையாளர்களே... சில விஷயங்களைப் பற்றி (கேள்வி மேல் கேள்வி) கேட்டுக் கொண்டே இருக்காதீர்கள், (ஏனெனில்) அவை உங்களுக்கு வெளிப்படுத்தப்படாமல் அவை உங்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தும். குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் அவற்றைப் பற்றி நீங்கள் கேட்டால் அப்போது அவை உங்களுக்கு வெளிப்படையாகக் கூறப்பட்டு விடும். நீங்கள் கேட்டால்

அப்போது அவை உங்களுக்கு வெளிப்படையாகக் கூறப்பட்டுவிடும். நீங்கள் (முன்பு வேடிக்கையாக) கேட்டவற்றை அல்லாஹ் மன்னித்து விட்டான். அல்லாஹ் மன்னிப்பவன் சகிப்புத்தன்மை மிக்கவன்.

**(அல்குர்ஆன் 5: 101)**

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) வறுகின்றார்கள்: சில நபித் தோழர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வேடிக்கையாக கேள்விகள் கேட்பதுண்டு. ஒரு நாள்) ஒரு ஸஹாபி "என் தந்தை யார்?" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். தொலைந்து போன ஒரு ஒட்டகத்தின் உரிமையாளர் ஒருவர் "என் ஒட்டகம் எங்கே உள்ளது?" என்று கேட்டார். இப்படி தேவையற்ற கேள்விகள் கேட்டவர்கள் பற்றி அந்நேரத்தில் அல்லாஹ் 5:101வது வசனத்தை இறக்கியருளினான்.

**(நூல்: புஹாரீ)**

நேர்வழி என்ற பொன்னம் பெரும் இலட்சியத்தை அடையும் வழியை மனிதர்களுக்குக் காட்டுவதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறைத்தூதர்களிடத்தில் அற்பத்தனமான கேள்விகள் கேட்டு சிறுமைப்படுத்துவது அழிவுக்கே வழி கோலும்.

இதனால், கேள்வி கேட்பதே கூடாது என்று விளங்கிடக் கூடாது. நல்ல நோக்கத்தில் கேட்கப்படும் கேள்விகளை இஸ்லாம் வரவேற்கின்றது. அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள். "அறியாமை என்ற நோய்க்கு நிவாரணம் கேள்வி கேட்பதுதான்."

**(அறிவிப்பாளர்: ஜாபிர் (ரழி) நூல்: அபூதாவூத்)**

நபித் தோழர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் விளக்கம் பெற்றிடும் நோக்கத்தில் பல்வேறு துறை சம்பந்தமான பல கேள்விகளைக் கேட்டனர்.

தர்மம் வழங்குவது பற்றி, புனித மாதங்களில் யுத்தம் புரிவது பற்றி, பிறை தேய்ந்து வளர்வது பற்றி, மது, சூது பற்றி, மாதவிலக்கு பற்றி என்று அவர்கள் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் திருப்திகரமான பதிலை திருமறை வழியாக அல்லாஹ் வழங்கினான். திருக்குர்ஆன் முழுவதிலும் இதற்கு பல சான்றுகள் உள்ளன.

திமிரான, கேலியான, தேவையற்ற கேள்விகள் கேட்பதையே அல்லாஹ் வெறுக்கின்றான். இவ்வகை கேள்விகளைக் கேட்ட சமுதாயமே அழிவுக்கு ஆளானது. இஸ்ரவேலர்களின் கேள்வியும் இந்த வகையானதுதான்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
யூசுப் அல் கர்ளாவி யின்
நாம் பிரிந்து விடவேண்டாம்
முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!
முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!!
முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், இயங்களையும் விவரிக்கும் நூல்!!!
விலை 175
இல்யாஸ் ரியாஜ் அவர்களின்
இனிய தமிழ் நடையில்.......
வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது மாடி,
சென்னை.1, தொலைபேசி: 45566909

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?-தொடர் 15

# அங்கிங்கினாதபடி எங்கும் ஆடம்பரம்

பேரறிஞர் : அபுல் ஹசன் அலீ நத்வி,
மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி.



பேரறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வி

அறியப்பட்ட உலகின் இருபெரும் வல்லரசுகளாகத் திகழ்ந்த ரோம், பாரசீகம் ஆகிய இரு அரசுகளின் கீழிருந்த மக்கள் பகட்டான ஆடம்பர வாழ்வில் மூழ்கித் திளைத்தனர். தங்களுக்குத் தாங்களே வடிவமைத்துக் கொண்ட செயற்கை நாகரீகம் தந்த சுதந்திரத்திலும் போலித்தனமான வாழ்விலும் அமிழ்ந்து கிடந்தனர்.

அவ்விரு பேரரசுகளின் மன்னர்கள் மட்டுமில்லாமல் அதிகாரிகளும் கூட உலக வாழ்வின் மொத்த சுகத்தையும் அனுபவித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற வேட்கையோடு வாழ்ந்துக் கொண்டிருந்தனர். எந்த மெல்லிய சுகத்தையும் இழக்கத் தயாரில்லை. ஓரஞ்சாரங்களில் கிடைக்கும் இன்பத்தைக்கூட விடத்தயாரில்லை. எவராலும் அனுமானிக்க இயலாத அளவுக்கு விரிந்து கிடந்தது அவர்களின் ஆடம்பரமும், பகட்டும், செருக்கும், சுகபோகமும்.

பாரசீகப் பேரரசின் மாமன்னன் பர்வேஸ்க்கு பனிரெண்டாயிரம் மனைவிகள் இருந்தனர். ஐம்பதாயிரம் குதிரைகள், மதிக்கொண்ணா ஆடம்பரப் பொருள்கள், விண்ணை முட்டும் அரண்மனைகள், இன்ன பிற பவிசுகள் பகட்டுக்கள் எதற்கும் பஞ்சமில்லை அவரிடம். அவரின் அரண்மனை செல்வச் செருக்கிலும் தருக்கிலும் இதர அரண்மனைகளுக்கோர் முன் மாதிரியாய் மிளிர்ந்தது. (நூல்: ஈரான் வரலாறு)

இந்த நூலின் ஆசிரியர் மகாரியூஸ் அவர்கள் கூறுகின்றார்கள். பாரசீகத்தின் கிழக்கே தொடங்கி அதன் கிழக்குக்கோடி வரையுள்ள நகரங்களில் வாழ்ந்த மக்களெல்லாம் அன்பளிப்புகளையும், அன்றாடப்படிகளையும் மன்னர்களுக்கு அனுப்பிக் கொண்டேயிருந்தனர். மக்களிடமிருந்து வந்த வரவுக்கு ஒன்றும் குறைவில்லை. இதனால் ஆடம்பரப் பெருவாழ்வில் ஒப்பாரும் மிக்காருமற்றவர்களாக வாழ்ந்தனர் பாரசீக மன்னர்கள் (நூல்: அதே நூல் பக்: 211)

பின்னாளில் இஸ்லாம் ஈராக்கை வென்றது. பாரசீக பெருநிலத்தில் முஸ்லிம்கள் கால்பதித்தனர். தம் நாட்டை விட்டு பாரசீகர்கள் தோல்வி முகத்தோடு வெளியேறியபோது தமது செல்வக் களஞ்சியங்களையெல்லாம் அப்படியப்படியே விட்டுவிட்டு ஓடினர்.

ஆடைகள் அணிமணிகள் பண்டபாத்திரங்கள் மென்பொருள்கள் திரவப்பொருள்கள் ஆடம்பரப் பொருள்கள் என பாரசீகர்கள் தமது களஞ்சியங்களிலே விட்டுச்சென்றவற்றை எவராலும் விலைமதிக்கமுடியவில்லை.

வரலாற்றாசிரியர் தப்ரீ(ரஹ்) கூறுகின்றார்கள்: பாரசீக நகரத்துக்குள்ளே அரபுக்கள் (முஸ்லிம்கள்) நுழைந்தபோது அங்கே துருக்கிக் கூடாரம் போன்ற ஒன்றைக் கண்டனர். அது கூடை பின்னிடும் நார்களால் வேயப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய கூடாரத்துக்குள் உணவைத் தவிர வேறென்ன இருக்கப்போகின்றது என்று நினைத்தார்கள் அரபுக்கள். ஆனால் அதனுள் இருந்தது உணவுப்பொருள்களல்ல. தங்கம் வெள்ளிப்பாத்திரங்கள். (நூல்: தாரிஹ் தபரீ)

மதாயின் எனும் பாரசீக நகரம் முஸ்லிம்களின் கைகளில் வீழ்ந்தபோது பாரசீக மன்னர்களின் மினுமினுப்பான ஆடம்பரத்தைக்கண்டு முஸ்லிம்கள் மலைத்தனர். திகைத்தனர். இதை அரேபிய வரலாற்றிசிரியர்கள் இப்படி வரைகின்றனர்.:

“சுமார் 60க்கு 60 சதுர அடி பரப்பில் வயல்வெளிபோல் ஒரு இடம். தங்கத்துகள்களால் நிரம்பியது அதன் தரை. அதன் திரையில் மதிக்கொண்ணா மரகதங்கள் பதிக்கப்பட்டிருந்தன. நுண்ணிய வெள்ளிக் கம்பிகளால் உருவாக்கப்பட்ட செயற்கைச் செடிகள். அதில் பழங்கள் தொங்குவதுபோல் முத்துக்களால் வடிவமைத்திருந்தனர். நேர்த்தியாக அமைந்த பச்சைப்பட்டுத் துணிக்கொண்டு இலைகளை அமைத்திருந்தனர். இடையில் நதிகள் ஓடுவதுபோல் வெள்ளி நீரோடை. தங்கத்தாலும் வெள்ளியாலும் வடிவமைக்கப்பட்ட உருவங்கள் ஆங்காங்கே காட்சித் தந்துக் கொண்டிருந்தன.

நீரோடைபோல் காட்சி தரும் வெள்ளிநீரோடையின் இருமருங்கிலும் நெற்பயிர்கள் நின்றன. அவை தங்கத்தால் தயாரிக்கப்பட்டிருந்தன. மரகதங்களும் வைடூரியங்களும் அதில் கதிர்களாய் இருந்தன.

இலையுதிர் காலங்களில் இந்த செயற்கை சுவர்க்கத்துக்குள் புகுந்து அரசனும் அரசனைச் சார்ந்து வாழ்வோரும் மது விருந்தில் திளைப்பார்கள்.

பாரசீக நாகரீகம் ஆடம்பரத்தை அதன் இறுதி எல்லை வரை சென்று அனுபவித்துப் பார்த்துவிட்டது என்பதற்கு இஃதோர் சான்று.

ரோம ராஜ்ஜியத்தின் கீழிருந்த சிரியாவும் அதன் இதர நகரங்களும் கூட பாரசீக நகரங்கள் போலவே ஆடம்பரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தன.

செருக்குமிக்க செல்வந்தர்களும் சீமான்களும் மக்கள் தலைவர் எனத்தம்மைக் கருதிக்கொள்வோரும் ஆடம்பரத்தின் உச்சத்தில் வீற்றிருந்தனர். அவர்களின் அரண்மனைகள் சொகுசு மாளிகைகள் மதுபானம் அருந்தும் கூடங்கள் இவையெல்லாம் மெத்தவசதிகளோடு நின்றிலங்கின.

இதோ ரோம அரசர்களுள் ஒருவரான ஜபல்லா பின் அல்அய்ஹம் அல் கஸ்ஸானியின் அவை எப்படியிருந்தது என்பதை இஸ்லாத்துக்கு முந்தையக் கவிஞர் ஹஸ்ஸான்பின் சாபித் அவர்கள் விவரிக்கிறார்கள்:

அங்கே ரோம் நாட்டு நங்கைகள் ஐவர் ரோம மொழியில் கவனத்தைக் கவரும் பகட்டான பாடல்களை பாடி மகிழ்வித்துக் கொண்டிருப்பார்கள். இயாஸ்பின் கபீசா என்பவரால் வழங்கப்பட்ட வேறு ஐந்து நங்கைகள் ஹீரா மொழியில் பாடல்களை பாடுவர். இஃதன்றி மக்காவிலிருந்தும் இதரப்பகுதிகளிலிருந்தும் அரபுப்பாடகர்கள் அங்கே வருவதுண்டு.

அரசர் ஜபல்லா மது அருந்திட வந்தால் வண்ண மலர் விரிப்புகள் மீது அமர்ந்து தான் மது அருந்துவார். அம்பர் கஸ்தூரி ஆகியவை தங்கத்தட்டுகளிலும் வெள்ளி தாம்பூலங்களிலும் அவருக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அது குளிர்காலமாக இருந்தால் (ஊது எனப்படும்) வாசனைக்குச்சிகளால் புகை போடப்படும். ரோமங்களால் உருவான ஆடைகள் (குளிருக்கு இதமாக கதகதப்பாக இருந்திட ஏதுவான ஆடைகள்) அணிந்து ஒய்யாரமாக மது அருந்துவார்கள்.

கோடை காலமென்றால் அதற்கேற்ற ஆடைகள் அணிந்திருப்பர். பனிக்கட்டிகளைப் பரப்பிப்போட்டுகுளிரூட்டி வைத்திருப்பார்கள் அந்தச் சபையை.

(நூல்: அல்அகானீ, ஆசிரியர்: அபுல் பரஜ் அல்அஸ்பஹானீ)

மன்னரின் பிரதிநிதிகள், இளவரசர்கள், சீமான்கள், அரசகுடும்பத்துப்பிரமுகர்கள், நடுத்தர வர்க்கத்து பொதுமக்கள் இவர்களெல்லாம் மன்னர்கள் போல் வாழ்ந்திட

விரும்பினார்கள். ஆடைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடம்பர அவைகளில் அங்கம் வகித்தல் ஆகியவற்றில் நடுநிலைக்கும் மேலே சென்று மன்னர்கள் போல பெருவாழ்வு வாழ்ந்திடப் பேராவல் கொண்டனர்.

ஒருவர் தன் ஆடைகளுக்கும் உணவுகளுக்கும் செய்திடும் செலவை வைத்து ஒரு ஊருக்கே வயிறார விருந்து போடலாம். ஒரு பெரும் சமுதாயத்துக்கே ஆடைகள் வாங்கித்தந்து விடலாம் எனுமளவுக்கு ஒரு தனி மனிதனின் செலவு இருந்தது இதுவே பெருமை, இதுவே கண்ணியம் இதின்றி ஒரு வாழ்க்கை இருந்திட முடியாதுஎன்று நம்பினார்கள். ஆடம்பரங்களின்றி அடக்கமாக வாழ்பவர் அதிசயப் பொருளாகப் பார்க்கப்பட்டார் பாரசீகத்திலும் ரோமிலும்.

அறிஞர் ஷுஅபீ கூறுகிறார்: பாரசீகர்கள் தம் குலப்பெருமைக்கு ஏற்ப தொப்பிகளை அணிந்துக் கொண்டனர். உச்சபட்ச பெருமைக்குரியோர் அணியும் தொப்பி ஒரு லட்சம் விலை மதிப்புமிக்கதாக இருக்கும்.

ஹுர்முஸ் உச்சபட்ச மாண்புக்குரியவர். அவரின் தொப்பியில் முத்துக்கள் பதிக்கப்பட்டிருக்கும். அதன் விலை ஒரு லட்சம். ஏழு குடும்பங்களிலுள்ளவர்கள் உச்சபட்ச மரியாதைக்குரியவர்கள். கிஸ்ராவின் ஆட்சிக்காலங்களில் ராஜபிரதிநிதிகளாக இருந்த அஸ்திக்கள் பாதி மரியாதைக்குரியவர்கள் என்பதால் அவர்கள் அணியும் தொப்பியின் விலை மதிப்பு ஐம்பதாயிரம். ருஸ்தும் அணிந்திருந்த தொப்பி ஒரு லட்சம் விலை மதிக்கத்தக்கது. முஸ்லிம்கள் பாரசீகத்தை வெற்றி கொண்ட போது அது எழுபதாயிரம் பணத்துக்கு விற்கப்பட்டது.(நூல்: தரீரஹ் தபரீ)

(பசி, தாகம், உணர்வுகள் இவை ஒரு மனிதனின் முதல் இயற்கை சுபாவம் என்றால்) பாரசீகர்களுக்கு இரண்டாவது இயற்கை சுபாவம் ஒன்று இருந்தது. அது பகட்டு, ஆடம்பரம், உல்லாசம் ஆகியவை.

இவைகளின்றி ஒரு வாழ்க்கையை அவர்களால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. வறுமையும் தரித்திரமும் அவர்களை வறுத்தெடுத்தாலும் ஆடம்பரத்தை அவர்களால் விடமுடியவில்லை.

இதை நிரூபித்திடும் இரு சுவையான செய்திகள் இதோ:

பாரசீகத்தின் கடைசி மன்னன் யஸ்த ஜிர்து(முஸ்லிம்களிடம்) தோல்வியுற்று தலைநகர் மதாயினிலிருந்து தப்பியோடுகிறான். அவனுடன் ஆயிரம் சமையல் நிபுணர்கள், ஆயிரம் இசைக் கலைஞர்கள், ஆயிரம் வேட்டை நாய்கள், ஆயிரம் பாடகர்கள் இவ்வளவு பேரும் சென்றனர். ஆனால் அவன் “இவ்வளவு குறைந்த வசதிகளோடு எங்ஙனம் நான் வாழப்போகிறனோ” எனப் புலம்பித் தீர்த்தான். (நூல்: சாசானியர் காலத்து ஈரான். பக்கம் :681)

‘அஹ்வாஸ்’ என்ற பகுதியினுடைய மன்னர் ஹுர்முசான் (முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டு) உமர்(ரழி) அவர்கள் முன்னால் நிறுத்தப்பட்டார். கடும் தாகம் ஹுர்முசானுக்கு. தண்ணீர் கேட்டார் கலீஃபா உமர்(ரழி)யிடம். ஒரு முரட்டுப்பாத்திரத்தில் தண்ணீர் தரப்பட்டது அவருக்கு. (இது போன்ற பாத்திரங்களில் தான் தண்ணீர் பருகுவார்கள் முஸ்லிம்கள்)

எளிய பாத்திரத்தைப் பார்த்த மாத்திரத்தில் “தாகத்தில் தவித்து செத்தாலும் சாவேனேயன்றி இதுபோன்ற பாத்திரத்தில் நீர் அருந்தமாட்டேன்” என்று விடாத செருக்கில் கத்தினார் ஹுர்முசான். பின்னர் அவர் விரும்பும் பாத்திரத்தில் நீர் தரப்பட்டது.(நூல்: தாரீஹ் தபரீ)

### ஆடம்பரத்துக்காக வரிச்சுமைகள்:

ஆட்சியாளர்கள் அளவுகடந்த ஆடம்பரத்தில் ஆடாத ஆட்டம் ஆடினால் அரசுக்கு வருமானம் எங்கிருந்து வரும்? குடிமக்களின் வருமானத்தில் கை வைத்தார்கள். சிறுதொழில் செய்வோர் சிறு முதலாளிகள், வியாபாரிகள் ஆகியோரிடம் புதுப்புதுப்பெயர்களால் வரிகளை விதித்தார்கள். இதற்கேற்ப சட்டங்களை இயற்றினார்கள். அதிகபட்சமான வரிச்சுமைகளை ஏற்றி குடிமக்களின் முதுகெலும்பை முறித்தனர்.

“சாசானியர் காலத்து ஈரான்” என்ற நூலின் ஆசிரியர் கூறுகின்றார்: பண்டிகை தினங்கள் (பாரசீகப்) பெருநாட்களில் குடிமக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக

மன்னர்கள் பரிசுகளைப் பெற்றார்கள். தொன்று தொட்டு இப்பழக்கம் அவர்களிடம் இருந்துள்ளது. "ஆயீன்" எனப்படும் இப்பரிசுகளை வழங்கியவர் வரிச்சுமைகளிலிருந்து விதிவிலக்குப் பெறமுடியாது.

தொழிலுக்கு ஏற்ப வரிகள், பெருநாட்களில் பரிசுகள் என பொதுமக்களின் வருமானங்களைச் சூறையாடும் அரச குடும்பம் நிலங்களையும் விட்டு வைக்கவில்லை. ஆர்மீனியா எனும் நிலப்பரப்பிலிருக்கும் தங்கச் சுரங்கங்கள் அனைத்தும் அரசனுக்கு மட்டுமே உரியன. அவற்றில் எவருக்கும் உரிமையில்லை என்ற சட்டமும் அங்கேயிருந்தது. (நூல்: சாசானியர் காலத்து ஈரான்)

இந்த ஒப்பந்தக் காரர்களுக்கு அஷ்ஷாரீன் பத்திலொரு பங்கை வசூலிப்பவர்கள் என்று பெயர். அரசின் ஒப்பந்தக்காரர்களான இந்த அஷ்ஷாரீன்கள் எல்லா மாகாணங்களிலும் இருந்தனர். வரியை விதிக்கும் அரசுக்கும் வரியைக் கொடுக்கும் மக்களுக்கும் இடையே இருக்கும் இவர்கள் பந்தாவாக பவனி வந்தது நிர்ணயிக்கப்பட்ட வரிகளை விடக் கூடுதலாக வசூலித்தனர். மக்களிடம் வரிக் கொள்ளையில் ஈடுபட்டனர். தர இயலாதவர்களை அடிமைகளைப்போல் விற்று பணம் பெற்றுச் சென்றனர். (நூல்: ஹுதத்துஷ் ஷாம்)

(புத்திசாலி இடையன் பாலை மட்டும் கறந்து குடிப்பான் மடுவை அறுக்க மாட்டான் என்றொரு பழமொழி தமிழ் வழக்கில் இருப்பதுபோல) ரோமின் மன்னராட்சி அரசியல் எப்படியிருந்தது என்பதை ஒருவர் ஒரு பழமொழியால் இப்படி விளக்குகிறார்."ஒரு நல்ல இடையன் ஆட்டின் முடிகளை (கம்பளி தயாரித்திட) வெட்டுவானேயன்றி ஒரேயடியாக முடிகளைப்பிடுங்கமாட்டான்"

இதுபோல தம் அதிகார வரம்புக்குள் வசித்த மக்களிடமிருந்து கறந்து கறந்து வாழ்ந்தார்கள் ரோம் மன்னர்கள். வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து இம்மக்களைக் காத்தார்கள். (இதன் மூலம் தமக்கு வரி தரும் மக்கள் இன்னொருவனுக்கு வரி செலுத்தாமல் பார்த்துக் கொண்டனர்) (அதே நூல்)

ரோம் பாரசீகம் ஆகிய இரு பேரரசுகளும் ஆறாம் நூற்றாண்டில் தம் குடிமக்களை இப்படித்தான் சுரண்டின. அவ்விரு அரசுகளின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடையே பெரிய அளவில் பொருளாதரா இடைவெளி இருந்தது.

ஒரு புறம் மன்னர்கள், இளவரசர்கள், அமைச்சரவைப் பிரதானிகள், அரச குடும்பத்துச் சீமான்கள், செல்வந்தர்கள் இவர்களெல்லாம் வண்ணமலர்களிடையே புரண்டார்கள். உல்லாசப்பெருவாழ்வு வாழ்ந்தார்கள். தம் குதிரைகளக்குக்கூட தங்கத்தால் லாடம் அடித்தார்கள். மென்பட்டுத்துணிகளால் தம் மாளிகைகளுக்கு அலங்காரப் போர்வை ஏற்றினார்கள்

மறுபுறம் விவசாயிகள், சிறுவியாபாரிகள், தொழிலாளர்கள், கூலிவேலைக்காரர்கள் வறுமையில் உழன்றார்கள். கொடுத்து மாளாத வரி, தீராத தீர்வை இவற்றுக்கிடையே அல்லல்பட்டார்கள். அவதியுற்றார்கள். (வரி கொடுத்தால் வறுமை வாழ்க்கை வரிகொடுக்காவிட்டால்) கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டு மிருக வாழ்வுக்கு உள்ளாக்கப்பட்டனர். எதையாவது உண்பதும் விழுங்குவதும் பிறர் வாழ தாம் உழைப்பதும் தவிர வேறெதுவும் தெரியாது இவர்களுக்கு.

இப்படி ஒரு வாழ்வற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தனர். 'என்னடா வாழ்க்கை இது' என்று இந்தக் கசப்பு வாழ்க்கை மீது சலிப்பு மேலிடும்போது போதை பானங்களைப் பருகி கேளிக்கைகளில் ஈடுபட்டு திருப்திப்பட்டுக் கொண்டனர். ஈடுகொடுக்க இயலாத இன்னல்களிலிருந்து இளைப்பாறிட சற்று இடைவெளி கிடைத்தாலும் தடுக்கப்பட்ட காரியங்களில் புகுந்து விளையாடத் தொடங்கினார்கள்.

இவ்வளவு இன்னல்களுக்கும் அல்லல்களுக்கும் இடுக்கண்களுக்கும் இடையே அவர்கள் மேல்தட்டு மனிதர்கள்போல ஆடம்பரவாழ்வு வாழ்ந்திட தங்களை வருத்திக் கொண்டனர்.

நிதானமான வருமானம், அளவான வாழ்க்கை என்ற நெறிகளைத் தாண்டி மேல்தட்டு மக்களைப்போன்றதோர் வாழ்க்கை முறைக்கு ஆசைப்பட்டதால் திணறினார்கள். குழம்பினார்கள் தத்தளித்தார்கள், ஆறாம் நூற்றாண்டின் பாரசீக ரோமக்குடிமக்கள்.

அபார செல்வம் அலங்கோல வறுமை இவற்றிற்கிடையே உழன்றுக் கொண்டிருந்த உலகத்தில் நனிச்சிறந்த நற்பண்புகளும் ஓம்பப்படும் ஒழுக்கங்களும் இறைத்தூதர்கள் உலகுக்கு வழங்கிய இறைநெறிகளும் மங்கி மறைந்தன.

சன்மார்க்கம் அதுகாட்டும் அறவழி, மரணம், அதன் பின் ஒரு வாழ்க்கை, அதில் கிடைக்கும் பெருவாழ்வு என எதைப்பற்றியும் அக்கறையின்றி உலக செல்வத்தைப் பெருக்குவதே லட்சியமென வாழ்ந்தனர் அக்கால மக்கள்.

உழைப்பாளர்கள் விவசாயிகள் சன்மார்க்கத்தைப் பற்றி எள்ளளவும் கவலைப் படாமல் உலக வாழ்க்கைப் பற்றிய கவலையிலும் எண்ணத்திலும் தான் வீற்றிருந்தனர். ஏழையும் இப்படித்தானிருந்தான். பணக்காரனும் இப்படித்தானிருந்தான். மார்க்கத்தையோ மறுமையையோ ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. ஆன்மா, இதயம், மிக்குயர்ந்த நாகரீகம் என எதுகுறித்தும் சிந்தித்திட நேரம் தரவில்லை. செல்வம் செல்வம் எனச் சுழன்றது அவர்களின் வாழ்க்கை

## இதோ ஜாஹிலிய்யா:

மூதறிஞர் ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவீ(ரஹ்) அவர்கள் அந்த மௌடீக உலகத்தை நமக்குத் திரையிட்டுக் காட்டுகிறார் பாருங்கள்:

“ ரோமர்களிடமும் அந்நிய(பாரசீக)ர்களிடமும் அரசாளும் பொறுப்பு வாழையடி வாழையாய் வந்து கொண்டிருந்தது. இதனால் உலக சுகத்தில் மூழ்கினார்கள். மறுமை வாழ்வு என்றொன்று இருப்பதை மறந்தார்கள். ஷைத்தானிடம் சரணடைந்தார்கள். வனப்பான வாழ்க்கையில் மூழ்கினர். இறுமாப்படைந்தனர். வெளிநாடுகளி லிருந்து அங்கு வந்தவர்களும் வாழ்வின் வனப்பையும் எடுப்பையும் விவரித்தார்கள். இதனால் ஆடம்பரமாக வாழ்வதில் போட்டி போட்டுக் கொண்டனர்.

ஒரு லட்சம் மதிப்புள்ள கிரீடம், விண்ணை முட்டும் வாகனங்கள், குளியலறைகள், தோட்டங்கள், பெருமைமிகு வாகனங்கள், அழகிய இளம்வயது அடிமைகள், தாராளமான உணவு, அழகூட்டும் ஆடை வகைகள் இவைகளையெல்லாம் வைத்திருக்காதவர் அற்பர்போல் பார்க்கப்பட்டார்.

விரித்துச் சொன்னால் ஏடு தாங்காது. சுருங்கக் கூறின் நம் நாட்டின் (முகலாய) மன்னர்களை நீங்கள் பார்த்திருந்தால் ரோம, பாரசீகர்களைப் பற்றி உங்களுக்குச் சொல்லத்தேவையில்லை.

ஆக ஆடம்பரம் அவர்கள் வாழ்வின் அடிப்படையானது. அவர்களின் இதயங்களில் அது இரண்டறக் கலந்து விட்டது. நாகரீகத்தின் எல்லா உறுப்புக்களிலும் நோயும் பேராபத்தும் படர்ந்துவிட்டது.

தலைவர்கள், பாமரர்கள், பரதேசிகள், சீமான்கள் என அனைவரும் ஆடம்பர மோகத்தால் வளைக்கப்பட்டு அடிமைப்படடு நின்றார்கள்(ஆடம்பரத்தைத் தொடரவும் முடியவில்லை விடவும் இயலவில்லை)

மனதில் தோன்றியபடியெல்லாம் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்றால் பெரும் செல்வம் செலவழிக்க வேணடும். செல்வம் வேண்டுமென்றால் வரிகள் போட வேண்டும். விவசாயிகள் வியாபாரிகள் முதலியவர்கள் வரிச்சுமைகளை ஏற்றினார்கள். வரிகளைத் தராத குடிமக்களைத் துன்புறுத்தினார்கள் போர்ப்பிரகடனம் வெளியிட்டார்கள்.

வரிதந்தவர்களை மாடுகளாக கழுதைகளாக நடத்தினார்கள். அறுவடை, பதர் நீக்குதல், நீரிறைத்தல் போன்ற கடின வேலைகளுக்கு உட்படுத்தினார்கள். ஒரு மணிநேரம் கூட ஓய்வு தரப்படாமல் சக்கையாகப்பிழிந்து வேலை வாங்கப்பட்டனர். இதனால் அவர்கள் மறுமை வாழ்வின் ஈடேற்றம் குறித்து கவனம் செலுத்தவில்லை. செலுத்த இயலவில்லை.

மக்கள் அடர்த்தியாக வாழ்ந்திடும் ஒரு மாகாணத்தில் மார்க்கத்தின் மீது கவலையுள்ளவர் ஒருவர் கூட இருக்கவில்லை. (நூல் : ஹுஜ்ஜத்துல்லாஹில் பாலிகா)

தொடரும்..........

**தமிழ் வடிவம்: இல்யாஸ் ரியாஜி**

# எது முதலில்? -7



பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி

## சொல்லாற்றலா? செயலாற்றலா? அறிவாற்றலா?

*செயல் திறனா? அறிவுத் திறனா? இவ்விரண்டில் எது முக்கியம்? என்று கேட்டால் செயல் திறனை விட அறிவுத் திறனே முதன்மையானது என்கிறது மார்க்கம்.*

*ஒரு செயலைத் திறம்படிச் செய்திட வேண்டுமென்றால் அது பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? எனவே அறிவுத் திறனே அடிப்படையானது. செயல்பட வழிகாட்டக்கூடியது. நபித் தோழர் முஆத் பின் ஜபல்(ரழி) கூறினார்கள்: 'கல்வி தான் வழிகாட்டி. அதன் பின்னால் செல்ல வேண்டியது தான் செயல் திறன்'.* ***(நூல்: இப்னு அப்தில்பிர்)***

*பேரறிஞர் இமாம் புஹாரி(ரஹ்) அவர்கள் தம்முடைய புகழ் மேவிய நூலான 'ஜாமிஉஸ் ஸஹீஹ்' எனும் நூலில் 'கிதாபுல் இல்ம்' எனும் கல்வி பற்றிய தலைப்பில் இப்படி ஒரு பாடத்திற்கு தலைப்பிட்டுள்ளார்கள். சொல், செயல் இரண்டுக்கும் முன்னால் கல்வி.*

*இமாம் அவர்களின் இந்த ஸஹீஹுல் புஹாரி என்ற நூலுக்கு விரிவுரை எழுதியுள்ள அறிஞர்கள் இப்படிக் கூறுகின்றனர். அதாவது,*

*சொல்லும் செயலும் சரியாக அமைந்திட வேண்டுமானால் அது பற்றிய அறிவும் விளக்கமும் அவசியம் தேவை. எனவே அறிவுத்திறனே முதன்மையானது. சரியாகச் செயல்பட வழிகாட்டுவது அறிவு தான். அறிவற்ற சொல்லுக்கும், அறிவற்ற செயலுக்கும் எந்த மரியாதையும் இல்லை. சிலர் வெறும் கல்வி மட்டும் இருந்தென்ன செய்ய? செயல்படவேண்டுமல்லவா? என்று கேட்கின்றனர். இதை நம்பி கல்விக்குத் தரும் மரியாதையும், கல்வியைத் தேடிச் செல்வதும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடக்கூடாது என்பதையெல்லாம் உணர்த்திக் காட்டிடத்தான் சொல், செயல் இரண்டுக்கும் முன்னால் கல்வி என்று இமாம் புஹாரி(ரஹ்) பாடம் அமைத்துள்ளார்கள்.*

*தாம் இட்டுள்ள தலைப்புக்கு வலிமை சேர்க்கும் திருக்குர்ஆன் வசனங்களையும், நபி மொழிகளையும் வரிசைப்படுத்துகிறார்கள் இமாம் புஹாரி(ரஹ்). இதோ அவை:*

*எனவே நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என்று நீர் அறிந்துக் கொள்வீராக. உமது பாவத்துக்காகவும், முஃமினான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் (பாவ)மன்னிப்புத் தேடுவீராக. நீங்கள் சென்று வரும் இடங்களையும், நீங்கள் தங்கும் இடங்களையும் அல்லாஹ் நன்கறிகின்றான். (அல்குர்ஆன் 47:19)*

*இவ்வசனத்தில் அல்லாஹ் முதலில் ஏகத்துவம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பிறகு பாவமன்னிப்புத் தேட வேண்டும் என்று தம் திருத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்குக் கட்டளையிடுகிறான். இது நபிக்குக் கூறப்பட்டதெனினும் மொத்த சமுதாயத்துக்கும் பொருந்தும்.*

*தவ்ஹீது பற்றி அறிவது கல்வி. பாவமன்னிப்புத் தேடுதல் என்பது செயல்பாடு. முதலில் கல்வி, இரண்டாவது செயல்.*

*அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் (ஆலிம்கள்) அறிஞர்கள் தாம். (அல்குர்ஆன் 35:28)*

இந்த வசனத்தைப் பாருங்கள், இறையச்சத்துடன் இறைவனுக்குப் பணிந்து வாழ்தல் என்ற செயலை நோக்கி உந்தித் தள்ளுவதே கல்வி தான் என்று உணர்த்துகிறது.

*அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் யாருக்கு நன்மையை நாடுகின்றானோ அவரை மார்க்க அறிஞராக ஆக்குகின்றான். (நூல்: புஹாரி)*

ஒருவர் மார்க்க ஞானம் பெற்றுவிட்டால் அதன் படி செயல்படுவார். அவர் செய்வதெல்லாம் மிக அழகானதாக அமைந்து விடும். எனவே அவர் சிறந்தவராகிறார்.

செயல்திறனை விட அறிவுத்திறனே முதன்மையானது என்று நாம் கூறுவதற்கு மற்றொரு காரணம் உண்டு.

முதன்முதலில் இறங்கிய இறைமறை வசனம் இக்ரஃ ஓதுவீராக! என்பது தான். படிப்பு தான் அறிவு ஞானத்தை திறக்கும் கருவி. இதன் பின்னர் தான் செயல்படத் தூண்டும் வசனங்கள் இறக்கப்பட்டன. இதோ அவை: 'போர்வை போர்த்தியிருப்பவரே! எழுவீராக. (மக்களை) எச்சரிப்பீராக. உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக. உமது ஆடையை சுத்தப்படுத்துவீராக. (அல்குர்ஆன் 74: 1-4)

முதலில் படிப்பு கல்வி. பிறகு சமூகப்பணி என்ற ஒழுங்கில் தான் செயல்பட வலியுறுத்துகிறது திருக்குர்ஆன்.

கல்வியும் அறிவும் ஞானமும் தான் நம்பிக்கையில் ஏற்படும் குளறுபடிகளைக் களைகிறது. சொற்களில் ஏற்படும் தவறுகளை சரி செய்கிறது. வணக்க வழிபாடுகளில் சுன்னத்துக்கு (நபிவழிக்கு) எதிரான பித்அத்கள் புகுந்துவிடாதபடி தடுக்கிறது. கொடுக்கல், வாங்கலில் நேர்மையாகச் செயல்பட துணை நிற்கிறது. பழக்க வழக்கங்களில் ஹலால், ஹராம் பேணிட வழிகாட்டுகிறது. அற்ப குணங்களையும் நற்குணங்களையும் பாகுபடுத்திக் காட்டுகிறது. ஒருவரின் மதிப்பீடு ஏற்கத்தக்கதா? இல்லையா? என்பதைக் கண்டறிய உதவுகிறது. சிறந்த சொல், சிறந்த செயல் எது என்று தேர்ந்தெடுத்திட கல்வி தேவைபடுகிறது.

எனவே சொல், செயல் இரண்டையும் விட கல்வியே முதன்மையானது.

நம்முடைய மூத்த முன்னோடிகளாம் நூலாசிரியர்களைப் பாருங்கள். தம் நூல்களில் முதல் பாடமே 'கிதாபுல்இல்ம்' என்று கல்விப்பற்றி அமைத்திருப்பார்கள்.

பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி(ரஹ்) தம்முடைய இஹ்யா உலூமித்தீன், மின்ஹாஜுல் ஆபிதீன் ஆகிய இரு நூல்களையும், அறிஞர் அல் ஹாபிழ் அல்முன்ஃதிரி(ரஹ்)அவர்கள் 'அத்தர்கீப் வத்தர்கீப்' நூலையும் கல்வி பற்றிய பாடத்தை முதலில் அமைத்துள்ளனர்.

நிய்யத் - நல்ல எண்ணம், இஹ்லாஸ் - உளத்தூய்மை, குர்ஆன், சுன்னாவைப் பின்பற்றுதல் ஆகியவற்றை வலியுறுத்தும் நபிமொழிகள் சில முதலில் அவ்விரு நூல்களிலும் கூறப்பட்டிருப்பினும், முதல் பாடம் கல்வி பற்றியது தான்.

எது முதலில் என்பதை ஆராய்ந்தறிவதுதான் இந்நூலின் மையக் கருப்பொருள். இதற்குக்கூட அறிவுத் திறன் அவசியம். அறிவுத் திறனில்லாமல் இதில் இறங்கினால் முட்டாள்தனமான முடிவுக்குத் தான் வரவேண்டியதாகிவிடும்.

நேர்வழிப்பெற்ற கலீஃபாக்களுள் ஒருவரான உமர் பின் அப்துல் அஜீஸ்(ரஹ்) அவர்கள் மிக அருமையாகச் சொன்னார்கள்: 'கல்வியின்றி செயல்படுகின்றவர்களால் சீர்திருத்தங்களைவிட சீர்கேடுகளே அதிகம் ஏற்படும்'.

முஸ்லிம்களிலுள்ள சில குழுக்களில் இதைக் காணலாம். இவர்களிடம் இறையச்சம், மனத்தூய்மை, மார்க்கப்பற்றுக்கெல்லாம் ஒரு குறையுமிருக்காது. ஆனால் இந்த மார்க்கத்தின் யதார்த்தத்தையும், ஷரீஅத்தின் அடிப்படை நோக்கத்தையும் சரியாக விளங்காமல் புரியாமலிருப்பார்கள். இப்படிச் சிலரை நாம் பார்க்கலாம்.

ஹழ்ரத் அலீ(ரழி) அவர்களைக் கொலை செய்த ஹாரிஜிய்யாக்களைப் பாருங்கள்.

இவர்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர். மருமகன், அன்புக்குரியவர். இவ்வளவு மாண்புகளைக் கொண்ட இம்மாமனிதரைக் கொல்வது நியாயமே. இவர்களை மட்டுமல்ல, இவர்களின் ஆதரவாளர்களையும் கொல்வது நியாயமே என்று கருதி விட்டனர் ஹாரிஜிய்யாக்கள். இதற்குக் காரணம் ஹாரிஜிய்யாக்களிடம் மார்க்கப்பற்று இருந்த அளவுக்கு மார்க்க அறிவும், விளக்கமும் இல்லை என்பது தான்.

போரில் கிடைத்த (கனிமத் எனும்) போர்ச் செல்வங்களை நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குப் பங்கு வைத்துத் தந்து கொண்டிருந்தபோது, அதில் திருப்தியடையாத ஒருவர் முரட்டுத்தனமாகவும், மூடத் தனமாகவும் நபி(ஸல்)அவர்களிடம் வந்து 'நீதியாக நடந்துக் கொள்ளுங்கள்' என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அட நாசமே... நான் நீதியாக நடந்திடவில்லையென்றால் வேறு யார் தான் நீதியாக நடந்திடுவார்? நான் நீதியாக நடந்திடவில்லையெனில் நான் இழப்புக் குரியவனாகவும், கைசேதமடைந்தவனாகவும் ஆகியிருப்பேன்' என்றார்கள். (நூல்: புஹாரீ)

அந்த முரட்டு சுபாவமுடைய மூடர் 'அல்லாஹ்வின் திருத்தூதரே அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்' என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'இந்த பூமியுலுள்ளோர் அனைவரைவிடவும் அல்லாஹ்வை அதிகம் அஞ்சிடும் தகுதி எனக்கு இல்லையா?' என்று திருப்பிக் கேட்டார்கள் என்று மற்றொரு அறிவிப்பில் காணப்படுகின்றது. (நூல்: புஹாரீ)

நபியிடம் இப்படிக் கேட்டவரின் வழியில் வந்தவர்கள், அலீ(ரழி)யைக் கொன்ற ஹாரிஜிய்யாக்கள்.

(ஹுனைன் போரில் கனிமத்களை எல்லோருக்கும் ஒரே சீராகப் பங்கு வைக்கவில்லை. சிலருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுத்தார்கள். சிலருக்கு அதைவிடக் குறைவாகவே தந்தார்கள். சிலரின் உள்ளங்கள் இஸ்லாத்தை நோக்கி ஈர்க்கப்படவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அதிகமாக வழங்கினார்கள்.)

'நீதியாக நடந்து கொள்ளுங்கள்' நபி(ஸல்) அவர்களிடம் கூறிய அந்த நபரும் அவரைப் போன்றவர்களும் உள்ளங்களை ஈர்க்கும் உபாயங்களையும், அதனால் விளையும் பென்னம் பெரும் நலன்களையும் அறியாதவர்கள்.

இஸ்லாத்தை நோக்கி உள்ளம் ஈர்க்கப்படுவோருக்காக ஸகாத் எனும் கட்டாய தர்மத்தின் ஒரு பகுதியை வழங்கிடும்படி அல்லாஹ்வே திருக்குர்ஆனில் கூறிவிட்டான்.(காண்க 9:60). ஸகாத்தின் ஒரு பகுதியையே இதற்குத் தந்திட அனுமதியிருக்கும்போது போர்ச்செல்வங்கள், போரின்றி வரும் செல்வங்கள் இவற்றை அவர்களுக்குத் தந்திடுவதில் தவறென்ன இருக்கிறது? இதையெல்லாம் தெரிந்திருந்தால் அவர் அப்படி பேசியிருக்கமாட்டார் நபி(ஸல்) அவர்களிடம்.

அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்கு முன் வந்து நின்று வாய்கிழிய பேசிவிட்ட அவரை கொலை செய்து விட அனுமதி கேட்டனர் நபித்தோழர்களில் சிலர். அதற்கு அனுமதி தரவில்லை நபி(ஸல்) அவர்கள். ஆனால் இவரைப் போன்ற குணங்களுடன் சிலர் பின்னர் தோன்றுவார்கள் என்று எச்சரித்தார்கள்.

"அவர்களின் தொழுகை, நோன்பு இதர செயல்களை நீங்கள் கண்டால் உங்களுடைய நோன்பு தொழுகை நற்செயல்களெல்லாம் மிகக்குறைவானவை என்றே கருதுவீர்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது தொண்டையை கடந்து (இதயம் வரை) செல்லாது, சிலை வணங்கிகளை விட்டுவிட்டு முஸ்லிம்களைக் கொல்வார்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஜாபிர்(ரழி), அபுஸயீத்(ரழி), அலீ(ரழி), ஸஹ்ல்பின்ஹுனைஃப்(ரழி) நூல்: புஹாரி, முஸ்லிம்)

"அது தொண்டையைக் கடந்து செல்லாது" என்பதன் பொருள்: "குர்ஆனின் கருத்துக்களை அவர்களின் உள்ளங்கள் புரிந்துக் கொள்ளாது. அவர்களின் அறிவுகள் குர்ஆனின் கருத்துக்களால் வெளிச்சம் பெறாது. தொழுகையும் நோன்பும் அவர்களிடம் அதிகமாக இருப்பினும் அவர்கள் ஓதிடும் குர்ஆன் மூலம் எந்தப் பலனும் பெற்றிருக்க மாட்டார்கள்" என்பதே.

*"அவர்கள் இளம் வயதினர். குறைமதியுடையோர்" என்று அலீ(ரழி) அவர்களின் அறிவிப்பில் நபி(ஸல்)அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது. (நூல்: புஹாரி, முஸ்லிம்)*

*அவர்கள் முஸ்லிம்களையே கொல்வார்கள் என்பதற்குக் காரணம் அவர்களின் உள்ளங்களிலும் எண்ணங்களிலும் குறைகள் இருப்பதால் அல்ல. (அந்த முஸ்லிம்களைக் கொல்வது நன்மை தரும் அமல் என்று கருதி கொலை செய்கின்றனர்.)*

*திருக்குர்ஆனைப் புரியாமல் ஓதுவதால் அல்லது தவறாகப் புரிந்துக் கொள்வதால் அறிவீனத்தால் அறியாமையால் பாவம் செய்கின்றனர். திருக்குர்ஆனை நம்பும் முஸ்லிமையே கொல்லத் துணிகின்றனர்.*

*எனவே சொல்திறன், செயல் திறன் இரண்டையும் விட அறிவுத்திறனே முதன்மையானது விளங்கும் திறனே முக்கியமானது.*

*எனவே இமாம் ஹஸன் அல் பசரீ(ரஹ்) அவர்கள் கல்வியும் விளக்கமும் பெறுவதற்கு முன்னரே வணக்க வழிபாட்டில் மூழ்கித் திளைக்கக் கூடாது என்று கண்டித்தார்கள் இதோ அவர்களின் பொன்மொழி.*

*"அறிவுத் திறனின்றி செயற்களத்தில் குதிப்பவன் பாதையின்றி நடப்பவன் போலாவான். அறிவின்றி செயல்படுபவனால் விளையும் நன்மைகளைவிட தீமைகளே அதிகம். எனவே வணக்க வழிபாட்டுக்கு இடையூறு இன்றி கல்வியைத் தேடுங்கள். கல்விக்கு இடையூறு செய்யாமல் வணக்க வழிபாட்டில் ஈடுபடுங்கள். சிலர் கல்வியைக் கைவிட்டு வணக்க வழிபாட்டில் திளைத்தனர். இறுதியில் முஸ்லிம்களுக்கு எதிராகவே வாளேந்தும் அளவுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் கல்வியைப் பெற்றிருந்தால் ஒரு போதும் அப்படிச்செய்யவிட்டிருக்காது அவர்கள் கற்ற கல்வி", (நூல்: இப்னுல் கய்யிம் எழுதிய மிஃப்தாஹு தாரிஸ் ஸஆதா)*

## களப்பணியில் கல்வியின் தேவை:

*சமுதாயத்தை வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றிட கல்வி மிகமிக அவசியம். நிர்வாகம், ராணுவம், நீதி என எத்துறையாக இருப்பினும் துறை சார்ந்த அறிவின்றி பொறுப்பில் அமரக்கூடாது.*

*இறைத்தூதர் யூசுப் (அலை) அவர்கள் பொய்யான குற்றஞ்சாட்டின் பேரில் சிறையிலடைக்கப்பட்டிருந்தார்கள். எகிப்து நாட்டின் அப்போதைய அரசர் கண்ட கனவுக்கு சரியான விளக்கம் கூறிய யூசுப் நபியை தம்மிடம் அழைத்து வர வைத்தார் மன்னர் . பின்னர் யூசுப் நபியிடம் பேச்சுக் கொடுத்து அவர்களின் அறிவுத்திறனைச் சோதித்தார். பின்னர் "இன்று முதல் நிச்சயமாக நீர் நம்மிடம் உயர்ந்த இடம் பெற்றவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் ஆகிவிட்டீர் என்று கூறினார்."*

*அதற்கு யூசுப் நபி மன்னரிடம் "என்னை பூமியின் களஞ்சியங்களுக்கு (அதிகாரியாக)ஆக்குவீராக. நிச்சயமாக நான் அவற்றை பாதுகாப்பவன். அதுபற்றி நன்கறிந்தவன்" என்று கூறினார்கள்.(காண்க அல்குர்ஆன் 12:54,55)*

*கடும் வறட்சியை பஞ்சத்தை எதிர்கொள்ளப்போகும் ஒரு நாட்டிற்கு உணவு தானிய அதிகாரியாகப் பொறுப்பேற்பது அவ்வளவு எளிய பணியல்ல. அரசின் உணவு தானிய உற்பத்தி, பொருளாதாரச் சூழல், மக்களின் தேவை, முறையான திட்டம் தீட்டுதல், சரியான பங்கீடு என அனைத்தையும் அறிந்திருக்க வேண்டும். இவற்றை சரியாக நிர்வகித்திட இரு பண்பு அவசியம். ஒன்று: ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து பேணிப்பணி செய்திட வேண்டும். மற்றொன்று: போதுமான அறிவும், ஞானமும்.*

*இவ்விரண்டு மிக உயர்ந்த பண்புகள் தம்மிடம் இருப்பதால் தாம் அந்தப் பொறுப்பைக்கேட்டுப் பெற்றார்கள் யூசுப் (அலை) அவர்கள்.*

*இறைத்தூதர் மூஸா நபியின் வரலாற்றைப் பாருங்கள். எகிப்து நாட்டிலிருந்து மத்யன் நகரத்துக்கு வந்த மூஸா நபி அங்குள்ள நீர் துறையில் மக்களெல்லாம் நீர் எடுத்துச் செல்வதையும் இரு இளம் பெண்கள் மட்டும் ஒதுங்கி நிற்பதையும் கண்டு அவர்களுக்கு உதவினார்கள். சற்று நேரத்தில் அவ்விரு இளம் பெண்களில் ஒருவர் "எங்களுக்கு நீர்*

புகட்டியதற்கான கூலியை எங்கள் தந்தையிடம் வந்து பெற்றுக் கொள்க" என்று மூஸா (அலை) அவர்களை அழைத்தாள். இருவரும் வந்து சேர்ந்தனர்.

அப்போது அப்பெண் தம் தந்தையிடம் "என் அருமைத் தந்தையே நீங்கள் இவரை கூலிக்கு அமர்த்துங்கள். நீங்கள் கூலிக்கு அமர்த்துவோரில் சிறந்த இவர் பலமுள்ளவர். நம்பிக்கையானவர்" என்றார். (காண்க திருக்குர்ஆன் 28:23-26)

மூஸா நபியை வேலைக்கு அமர்த்தியவர் ஷுஐப் நபி. மூஸா நபி செய்த வேலை ஆடு மேய்க்கும் பணி. இதற்கு உடல் பலம் அவசியம். அந்தத் தகுதியும் நம்பகத் தன்மையும் மூஸா நபியிடம் இருந்ததால் வேலைக்கு வைத்துக் கொண்டார் ஷுஐப் நபி.

திருக்குர்ஆன் கூறும் மற்றொரு உதாரணத்தைப் பாருங்கள். பனீஇஸ்ராயீல் என்ற பெரும் சமுதாயத்திலிருந்து ஓர் அரசரை அல்லாஹ் தேர்ந்தெடுத்தான். அவர் பெயர் தாலூத். அவரிடம் இரு பண்புகள் இருந்ததாக அல்லாஹ் கூறுகின்றான்.

"நிச்சயமாக அல்லாஹ் உங்களை விட மேலாக அவரையே தேர்ந்தெடுத்தான். அறிவாற்றல் உடல் வலிமை இவற்றை அல்லாஹ் அவருக்கு அதிகமாக வழங்கியுள்ளான்" (திருக்குர்ஆன் 2:247)

இவ்விருபண்புகளும் அவரிடம் இருப்பதால் அவர் அரசராக தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆக இராணுவம், நிர்வாகம், கூலி வேலை எதுவாயினும் அதற்குரிய தகுதியிருப்பவரே அப்பொறுப்பை ஏற்க வேண்டும். நீதித்துறைக்கும் இது பொருந்தும்.

மக்களுக்கு நீதி வழங்கிடும் ஆசனத்தில் அமரும் ஒருவர் எத்தகைய தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்று விரித்துரைக்கும் மார்க்கஅறிஞர்கள் (ஒரு கலீஃபா) ஆட்சித் தலைவருக்குரிய தகுதிகளைப் போன்ற தகுதிகள் நீதிபதிக்கும் இருக்க வேண்டும் என்கின்றனர்.

இன்னொரு அறிஞரின் கருத்தை (தக்லீது ஆதாரம் இல்லாமல்) பின்பற்றுபவராக ஒரு நீதிபதியிருக்கக்கூடாது. குர்ஆன் ஹதீஸிலிருந்து சட்டங்களை அகழ்ந்தெடுக்கும் (இஜ்திஹாத்) திறனுள்ளவராக இருக்க வேண்டும். ஏனெனில் யாரோ ஒருவரைத் தழுவியும் ஒட்டியும் செல்வதல்ல கல்வி. உண்மையை அதற்குரிய ஆதாரங்களுடன் அறிந்து வைத்திருப்பதுதான் கல்வியின் அடிப்படை.

தம்மிடம் எந்த ஆதாரத்தையும் வைத்துக் கொள்ளாமல், வலுவற்ற பலஹீனமாக ஆதாரத்தைக்கூட வைத்துக் கொள்ளாமல் யாரோ ஒருவருடைய கருத்தை தக்லீது செய்வது கல்வி என்று கூறவே முடியாது.

பிற அறிஞரின் கருத்தை ஆதாரம் கேட்காமல் அப்படியே ஏற்றுச் செயல்படும் ஒருவர் கூறும் தீர்ப்பை வேறு வழியில்லாத சூழ்நிலையில் ஏற்றுக் கொள்ளலாம். நிர்வாகத் துறைப்பற்றி விளக்கமில்லாத ஒருவரின் ஆட்சியை வேறு வழியில்லாத சூழ்நிலையில் ஏற்றுக் கொள்வதைப்போல் என்று கூறும் மார்க்க அறிஞர்கள் இருப்பினும் குறைந்தபட்ச ஞானமாவது அவர்களிடம் இருக்க வேண்டும் என்கின்றனர். இல்லையானால் அறியாமையால் சில தீர்ப்புகளை வழங்கி அதனால் அவர் நரகவாசியாகிவிடுவார்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்று வகை நீதிபதிகள் உண்டு. இருவகையினர் நரகவாசிகள், ஒருவகை நீதிபதிகள் மட்டுமே சுவர்க்கவாசிகள்.

உண்மையை அறிந்து அதன்படி தீர்ப்பு வழங்கிய நீதிபதி சுவர்க்கவாசி. (உண்மையை) அறியாமல் தீர்ப்பளித்தவர் நரகவாசி. உண்மையை அறிந்தும் அநீதியான தீர்ப்பை வழங்கியவர் நரகவாசி. (அறிவிப்பாளர்: அபூபுரைதா(ரழி) நூல்: அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா)

எனவே உண்மையைக் கண்டறியும் ஆராய்ச்சித் திறன், சட்டங்களை அகழ்ந்தெடுக்கும் ஆற்றல் நீதிபதிகளின் தகுதிகள் ஆகும். இந்த அறிவின்றி ஒருவர் நீதிபதியாக முடியாது. இங்கும் அறிவே முதன்மையானது.

தொடரும்...

தமிழில்: இல்யாஸ் ரியாஜி

# சிலுவைப்போர்கள்

*புதிய தொடர் - 1*

**மு. குலாம் முஹம்மது**



அண்மைக் காலந்தொட்டே வாசக அன்பர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள். அது சிலுவைப் போர்கள் பற்றிய விளக்கங்கள் வேண்டும் என்பதே.

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தத் தொடரை தருகின்றோம்.

சிலுவைப் போர்களைத்தான் ஆங்கிலத்தில் Crusade என்பார்கள்.

கிருஸ்தவ வீரர்கள் சிலுவையை கழுத்தில் அணிந்துகொண்டும், கையில் ஏந்திக் கொண்டும் முஸ்லிம் உலகத்தின் மேல் பாய்ந்து தாக்கியதால் இந்தப் போர்கள் சிலுவைப் போர்கள் என்றழைக்கப்படுகின்றன. இன்று ஆங்கில சொல்லாட்சியில் அநியாயத்திற் கெதிராக நடக்கும் போர்களைக் குறிக்க இந்தச் சொல் ஆங்கில இலக்கியத்தில் அதிகமாக தாராளமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இதனாலும் இந்தப் போர்களை பற்றி அறிந்திடுவது அவசியமாகின்றது.

கி.பி. 1095ஆம் ஆண்டு தொடங்கி கி.பி.1247 ஆம் ஆண்டு வரைக்கும் இந்தப்போர்கள் தொடர்ந்தன. அதாவது 152 ஆண்டுகள் தொடர்ந்தன.

இஸ்லாத்தின் வரலாற்றில் வரை இட்டுக்காட்டப்பட வேண்டிய வரலாற்று நிகழ்வுகளில் இந்த சிலுவைப் போர்கள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

இதனால் வாசகர்களின் ஆர்வம் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றே!

கிருஸ்தவ உலகைப் பொறுத்தவரை, கி.பி.1247ஆம் ஆண்டோடு இந்தப் போர்கள் முடிந்துவிடவில்லை.

1914ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கியது. இது 1918இல் முடிவுக்கு வந்தது.

ஆங்கிலேயப் படைகள் டெமாஸ்கஸ்ஸில் புகுந்தன. முஸ்லிம் உலகம் வெற்றி கொள்ளப்பட்டது. லார்டு ஆலன்பி (Lord Allenby) என்ற ஆங்கில தளபதி தான் சிரியா (அன்றைய சாம்)வை வெற்றிக் கொண்டு அதன் தலைநகர் டெமாஸ்கஸ்ஸில் புகுந்தான்.

கி.பி. 1187இல் மூன்றாம் சிலுவைப் போரில் மகத்தான வெற்றிகளை ஈட்டிய வீரத்தின் விளைநிலம் சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபியின் கபர்ஸ்தான் சென்றான். அந்தக் கல்லறையின் மேல் தன் காலை வைத்து இப்படி

பேசினான்:"Look salahudeen the Crusades end here and we are back"

இதன் பொருள், "சலாஹுத்தீன் இங்கே பார் சிலுவைப் போர்கள், இங்கு தான் முடிவடைகின்றன. நாங்கள் மீண்டும் வந்துவிட்டோம்".

இதன் முழு பொருளையும் பின்னணியையும் இன்ஷா அல்லாஹ் பின்னர் இடம்பெறச் செய்வோம்.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் 1095இல் தொடங்கி 1247இல் சிலுவைப்போர்கள் முடிந்தன. ஆனால் அந்த தோல்வியை கிருஸ்தவ உலகம் ஏறத்தாழ 700 ஆண்டுகள் மனதில் தேக்கி வைத்திருந்தது.

இதனால் சிலுவைப்போர்கள் பற்றிய தெளிவான வரலாற்றை நாம் தெரிந்து வைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகின்றது. இஃது வாசகர்களின் வரலாற்று வேட்கை நியாயமானதே என்பதைத் தெளிவுப் படுத்துகின்றது.

அதற்குப்பின்னால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் தலைமுறைக்கு முன்னால் ஒரு பெரும் தாக்குதல் நடந்தது. அது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட வரலாறு தான்.

இந்தத் தாக்குதல் செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் 2001ஆம் ஆண்டு நடைபெற்றது. இதைத்தான் இன்றைய வரலாற்றில் 9 / 11 என அடையாளப்படுத்துகின்றார்கள்.

இந்தத் தாக்குதலுக்கான பழியை முஸ்லிம்கள் மேல்தான் போட்டார் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ். இரண்டு நாள்கள் கழித்து, அதாவது 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம்நாள், அதே புஷ் இப்படி அறிவித்தார் The Modern Crusades have started அதாவது நவீன சிலுவை போர்கள் தொடங்கிவிட்டன.

அதாவது சிலுவைப்போர்கள் முடிந்து ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்குப்பின் அதே சிலுவைப்போர் பிரகடனங்கள்.

இவையெல்லாம் எடுத்துக்காட்டும் உண்மை என்னவெனில் சிலுவைப்போர் படுதோல்விகள் விரக்திகள், விரக்திகளின் விளைவாய் எழுந்த வெறிகள் இன்னும், இன்றும் தணியவில்லை.

இதைத்தான் (மேலைநாடுகளில் மிகப்பெரிய பத்திரிகையாளராகவும், இராஜாங்க அதிகாரியாகவும் இருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட) லியோபால்டு அசத் என்ற முஹம்மத் அசத் அவர்கள் இந்தச் சிலுவைப்போர்கள் வழியாகத்தான் மேலை நாட்டவர்கள் இஸ்லாத்தைப் பார்க்கின்றார்கள். அதனால் தான் அவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வெறுக்கின்றார்கள். வெறி கொண்டு தாக்குகின்றார்கள் என்கின்றார்கள் தான் எழுதிய "Islam At the Cross Roads" என்ற நூலில்.

இந்த பின்னணியில் பார்க்கின்ற போதும் சிலுவைப்போர்கள் நாம் விளக்கமாக அறிந்திட வேண்டிய ஒரு வரலாறு என்பது தெளிவாகும்.

இதனால் வாசகர்களின் ஆர்வம் இரட்டிப்பு முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இதனால் சிலுவைப்போர்கள் பற்றிய தகவல்களை இயன்ற மட்டும் இங்கே இடம்பெறச் செய்கின்றோம்.. இன்ஷாஅல்லாஹ்... அடுத்த இதழில் தொடங்கும்....



**தமிழன் தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி. **இல்யாஸ் ரியாஜி** அவர்களின் திருக்குர்ஆன் விரிவுரை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது.

**தொடர்புக்கு**

**காயல் தர்வேஷ் : 98418 98044**




- அபூ அஃப்ரஹ்

## விஸ்வரூபம் கமலின் கடந்த காலம்

உன்னைப்போல் ஒருவன் படத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு எதிரான தன்னுடைய உண்மை முகத்தை காட்டி தன்னுடைய இந்துத்துவா சிந்தனைக்கு திறப்பு விழா நடத்தினார் திருவாளர் கமலஹாசன் அவர்கள். அதுவரை முற்போக்காளன் என்ற பட்டத்தை சுமந்து வந்தவர் திடீரென இந்துத்துவா சிந்தனையை கக்கினார்.

பல சமுதாய சிந்தனையாளர்கள், பல எழுத்தாளர்கள் கமலஹாசனின் இந்த நிலையை கண்டித்து விமர்சனங்களை எழுப்பினர்.

அதில் எழுத்தாளர் ஞானி அவர்கள் எழுதிய விமர்சனம் குறிப்பிடத்தக்கது. இதனை இந்த இதழில் நாம் தனியாக தந்துள்ளோம். நமது வைகறை வெளிச்சமும் "கமலஹாசனின் உண்மை முகம்" என்ற தலைப்பில் தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்தது. அதன் பிறகு கமலஹாசனை இஸ்லாமிய தலைவர்கள் பலர் சந்தித்து தங்களுடைய கண்டனத்தை பதிவு செய்தனர்.

அப்பொழுது கமலஹாசன் தான் இந்த படத்தை முஸ்லிம்கள் பார்த்த கோணத்தில் பார்க்கவில்லை. எனவே, தன்னை மன்னிக்கும்படியும் இதற்கு பரிகாரமாக முஸ்லிம்களை கண்ணியப்படுத்தும் விதத்தில் ஒரு படத்தை நான் நிச்சயம் எடுப்பேன் என்ற உறுதிமொழியையும் தந்தார்.

அதன் பின்னர் நடிகர் விஜய் நடித்த துப்பாக்கி என்ற படம் வெளிவந்தது. அதில் இந்தியா முழுவதும் முஸ்லிம் தீவிரவாதிகள் ஸ்லீப்பர் செல்களாக உள்ளனர். அவர்கள் இந்திய இராணுவத்திலும் ஊடுருவி உள்ளனர் என்பதாக மக்களுக்கொரு செய்தி சொல்லப்பட்டது.

இந்தியாவெங்கிலும் நடந்த குண்டு வெடிப்பு தாக்குதல்களில் முஸ்லிம்கள் தாம் கைது செய்யப்பட்டு தீவிரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்டனர். அதற்கு உடந்தையாக இந்திய உளவுத்துறையும் இருந்தது.

கர்கரே என்ற நீதி வழுவா அதிகாரி இவ்வழக்குகளை விசாரணை செய்த பின் பல உண்மைகள் வெளிவந்தன. அதன் படி பல இந்துத்துவா தீவிரவாதிகள் இந்த குண்டுவெடிப்பு வழக்குகளில் கைது செய்யப்பட்டனர்.

காவித் தீவிரவாதம் என்ற சொல்லாட்சி முன்னாள் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களால் நாடாளுமன்றத்தில் பிரயோகப்படுத்தப்பட்டது. தற்போது உள்துறை அமைச்சர் ஷிண்டே அவர்கள் இந்துத்தீவிரவாதத்தைப்பற்றி சுட்டிக் காட்டினார்கள்.

மேலும் ஆர்.எஸ்.எஸ் , பா.ஜ.க பல தீவிரவாத முகாம்களை நடத்தி வருகின்றன என்ற உண்மையையும் ஷிண்டே அவர்கள் போட்டுடைத்தார். எதிர் கேள்விகள் கேட்டவர்களை கைதாகியிருந்த இந்துத்தீவிரவாதிகளின் பட்டியலை தந்து வாயடைத்தார்.

நிலைமை இவ்வாறிருக்க துப்பாக்கி படம் உண்மைக்கு மாறாக முஸ்லிம்களை தீவிரவாதிகளாக அடையாளப்படுத்தியிருப்பதை உணர்ந்த முஸ்லிம்கள் ஒன்றிணைந்தனர்.



அமெரிக்க கொடியின் பின்னணியில்

முஸ்லிம்களின் கூட்டமைப்பின் வாயிலாக அப்போது தான் “இன்னொசென்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்” என்ற படத்திற்கு எதிராக தங்களது எதிர்ப்பை பதிவு செய்திருந்த முஸ்லிம்கள் இப்படத்திற்கு எதிராக திரும்பினர்.

நிலைமை மோசமாவதை கண்ட பட தயாரிப்பாளர் கலைப்புலி தாணு, இயக்குனர் முருகதாஸ், நடிகர் விஜய் இப்படத்தை இஸ்லாமிய கூட்டமைப்பினருக்கு போட்டுக் காட்டினர். ஒட்டுமொத்த படமே முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தாலும் இரண்டு காரணங்களுக்காக இஸ்லாமிய கூட்டமைப்பினர் இப்படத்தை சில காட்சிகளை தணிக்கை செய்து திரையிட அனுமதித்தினர்.

முதல் காரணம் தாங்கள் இதனை தெரியாமல் செய்து விட்டதாகவும் அதற்கான பகிரங்கமாக மன்னிப்பை ஊடகங்கள் முன்னால் கேட்பதாகவும் படக்குழுவினர் கூறியது.

இரண்டாவது காரணம் பல காட்சிகளை தணிக்கை செய்ய முன்வந்தது. ஆகவே திருத்தத்திற்கு பின் அந்த படம் வெளிவந்தது. எனினும் அதிலும் திருப்தி அடையாத சில முஸ்லிம்கள் இப்படத்தை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். அதில் நிவாரணமும் பெற்றுள்ளனர்.

இதற்கிடையே கமலஹாசனின் விஸ்வரூபம் படமும் இதே பாணியில் எடுக்கப்பட உள்ளதாக நிறைய தகவல்கள் வெளிவந்துக் கொண்டிருந்தன. கமலஹாசனும் தன்னுடைய பாணியில் எதிரும் புதிருமாக சில கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

“இது துப்பாக்கி அல்ல, தடை செய்வதற்கு இது பீரங்கி” என்று ஒரு முறை கூறினார்.

மற்றொரு முறை முஸ்லிம்கள் இந்தப்படத்தை பார்த்தால் தனக்கு பிரியாணி போடுவார்கள் என்று கூறினார்.

இதன் காரணமாக இஸ்லாமிய கூட்டமைப்பினர் குழப்பத்திலேயே இருந்தனர். கடந்த 40 வருடங்களாக பகுத்தறிவாளராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கமலஹாசனை அப்பொழுதும் இஸ்லாமிய கூட்டமைப்பினர் நம்பவே செய்தனர்.

எனினும் அப்படத்தின் முன்னோட்டங்களில் வந்த காட்சிகள் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகவே இப்படம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பில் உணர்த்தியது.

எனவே, இப்படத்தை தங்களுக்கு போட்டுக்காட்டிய பின்பே வெளியிடவேண்டும் என்ற கோரிக்கையை இஸ்லாமிய கூட்டமைப்பினர் (இக்கூட்டமைப்பில் 24 இஸ்லாமிய அமைப்புகள் உள்ளன. தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டும் இக்கூட்டமைப்பில் உண்டு) முன்வைத்தனர்.

கமலஹாசன் இந்த கோரிக்கையை பலமுறை தவிர்த்தும் தள்ளிப்போட்டும் வந்தார். எப்படியாவது படத்தை கூட்டமைப்பினருக்கு போட்டுக்காட்டாமல் வெளியிட்டுவிட வேண்டும் என்பதே அவரது எண்ணமாக இருந்தது.

கடந்த 11.01.2013 அன்று உள்துறை செயலர் இஸ்லாமிய கூட்டமைப்பினரிடம்




*படத்தை கமலஹாசன் போட்டுக் காட்டுகிறாரா இல்லையா? எனக் கேளுங்கள் இல்லையேல் அரசே அதற்கான ஏற்பாட்டை செய்யும் என்று கூறினார்.*

*அதனை மறுத்துவிட்ட இஸ்லாமிய கூட்டமைப்பினர் அதற்கான அவசியமில்லை. கமலஹாசன் இன்னும் நட்புறவுடன் தான் பேசி வருகிறார். அவர் நிச்சயம் போட்டுக் காட்டிய பின் தான் வெளியிடுவார் என்று கமலஹாசனுக்காக பரிந்து பேசிவிட்டு வந்தனர்.*

*கடைசியாக குறைந்த பட்சம் திரையில் வெளியிடப்படும் நாளுக்கு 5 நாள்களுக்கு முன்னதாகவாது கண்டிப்பாக போட்டுக்காட்ட வேண்டும் என்று கமலஹாசனுக்கு கூறப்பட்டது.*

*ஆனால் கமலஹாசன் 24ம் தேதி திரையிட்டுக் காட்டுவதாக கூறினார். இதில் குயுக்தி ஒன்றிருந்தது. படத்தைப் பார்த்து விட்டு எந்த வித நடவடிக்கைகளும் இஸ்லாமிய கூட்டமைப்பினர் மேற்கொள்ள அவகாசம் அளிக்கக்கூடாது என்ற எண்ணத்தில் இவ்வாறு கூறினார்.*

*ஆனால் இதனை இஸ்லாமிய கூட்டமைப்பினர் நிராகரித்து விட்டதால் வேறு வழியின்றி 21.01.2013 அன்று மாலை திரைப்படம் கமலஹாசனின் தேனாம்பேட்டை ராஜ்கமல் இன்டெர்நேஷனல் அலுவலகத்தில் திரையிட்டுக் காட்டப்பட்டது.*

*இதில் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டின் சார்பாக அபூ அஃப்ரஹ் பங்கேற்றார். இப்படம் குறித்த எந்த விமர்சனத்தையும் அங்கே பேசக்கூடாது என்று ஏற்கனவே கூட்டமைப்பினரால் முடிவு செய்யப் பட்டிருந்தது. இடைவேளை வரை படத்தைப் பார்த்த கூட்டமைப்பினர் அதிர்ந்து போய்விட்டனர். எனினும் எந்த கருத்தையும் வெளியிடவில்லை.*

*கூட்டமைப்பினரின் முகபாவத்தை கொண்டு அவர்களின் உள்ளத்தை புரிந்து கொண்ட கமலஹாசன் இப்படத்தில் உள்ள காட்சிகளுக்கு தன்னிடம் 300க்கும் மேற்பட்ட ஆதாரங்கள் உள்ளதாக கூறினார்.*

*பின்னர் படம் தொடர்ந்தது. படத்தை பார்த்த முஸ்லிம் கூட்டமைப்பினர் அதிர்ந்து போய்விட்டனர். கமலிடம் பேசக்கூட தோன்றாமல் அனைவரும் வெளியேறினர். கமலஹாசன் அனைவரிடமும் கையை குலுக்கினார். எதிரிகளுடைய கைகளைக் கூட தட்டி விட்டு பழக்கமில்லாத இஸ்லாமிய கூட்டமைப்பினர் அவருக்கு கையை கொடுத்துவிட்டு எதுவும் பேசாமல் வேகமாக வெளியேறினர்.*

*இதைத் தான் பின்னர் அளித்த பேட்டிகளில் கமலஹாசன் "கூட்டமைப்பினர் என்னிடம் கையை குலுக்கிவிட்டு துரோகம் செய்துவிட்டார்கள்" என்ற பாணியில் பேசியுள்ளார்.*

# படத்தின் கதை

*அமெரிக்காவில் உள்ள நடனக்கலைஞர் கமலஹாசன் (விசுவநாதன்). அவரை அமெரிக்கா செல்வதற்காகவே மணந்து*

கொண்டவர் கதாநாயகி. அங்கே உள்ள ஒரு நிறுவனத்தில் கதாநாயகி வேலை செய்கிறார். அந்நிறுவனத்தின் தலைவர் அமெரிக்க முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யும் ஒரு ஹவாலா தரகர். அதைத்தாண்டி அந்த நிறுவனம் எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் கருவிகளை பழுது பார்க்கும் வேலையையும் செய்து வருகிறது.

அவ்வாறு பழுது பார்க்கும் போது அக்கருவிகளில் உள்ள சீசியம் என்ற கதிர்வீச்சு வேதிய தனிமத்தை எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்து அதை மொத்தமாக நாசவேலைக்கு பயன்படுத்த முயற்சிக்கின்றனர் தீவிரவாதிகள். கமலஹாசன் திருநங்கையை போன்றவர் என்பதால் (அவ்வாறு வேஷம் போடுகிறார்) கதாநாயகி, அவர் வேலை செய்யும் நிறுவனத்தின் தலைவருடன் காதல் கொள்கிறார்.

பின்னர் தான் கமலஹாசன் இச்சதிவேலையை கண்டுபிடிப்பதற்காக இந்திய அரசால் அனுப்பப்பட்ட "ரா" என்ற உளவு நிறுவனத்தின் அதிகாரி என்பது தெரியவருகிறது. இப்பணிக்காக அவர் தன் மனைவியையும் இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்கிறார். அவரை பற்றி முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு தெரியவருகிறது.

கமலஹாசன் யார் என்று அறிய தீவிரவாதிகளின் தலைவர் உமர் (ஒற்றை கண்ணுடன் முல்லா உமரை, முல்லா என்ற பெயரை மட்டும் நீக்கி விட்டு உமர் என்று காட்டுகிறார்கள்) கமலஹாசனின் Photo படத்தை அனுப்பும் படி உத்தரவிடுகிறார். அப்பொழுது தான், கமலஹாசன் கஷ்மீர் தீவிரவாதி என்ற போர்வையில் ஆஃப்கானிஸ்தானிற்குள் வந்து தங்களுக்கு (அல்கொய்தாவிற்கு) பயிற்சி அளிப்பது போல் நடித்து, தங்களை நாசம் செய்த இந்திய உளவுத்துறை அதிகாரி என்பது தெரிய வருகிறது.

கமலஹாசன் ஆஃப்கானிஸ்தானில் செய்யும் சாகசங்கள் காட்டப்படுகின்றன. அவர் ஒசாமா பின் லாதனை கண்டுபிடிக்கிறார். அவரை கொல்ல அமெரிக்க அரசிற்கு உதவி செய்கிறார். அதில் உமர் மட்டும் தப்பிக்கிறார்.

இவற்றிற்கிடையே ஆப்கானிஸ்தானில் பல கொடுமைகள் இஸ்லாத்தின் பெயரால் நடக்கின்றன. இதன் பின்னர் தீவிரவாதிகள் அமெரிக்காவில் சீசியம் கதிரியக்க தனிமத்தைக் கொண்டு நடத்த இருக்கும் தீவிரவாத தாக்குதலை அமெரிக்க உளவு நிறுவனமான எஃப்.பி.ஐ (FBI) உதவியுடன் தடுத்து நிறுத்துகிறார். அப்பொழுதும் உமர் மட்டும் தப்பித்து விடுகிறார். அவர் இருக்கும் வரை நான் ஓயப்போவதில்லை என சபதமெடுக்கிறார். விஸ்வரூபம் இந்தியாவில் என்ற திரையுடன் படம் முடிகிறது.

# படத்தில் முஸ்லிம்கள் ஆட்சேபிப்பதென்ன?

1. படத்தில், ஒட்டுமொத்த உலகளாவிய முஸ்லிம்களையும் தீவிரவாதிகளாக காட்டப்பட்டுள்ளது. அமெரிக்க முஸ்லிம்கள், ஆப்கான் முஸ்லிம்கள், நைஜீரிய முஸ்லிம்கள், இந்திய முஸ்லிம்கள் என அனைத்து முஸ்லிம்களும் தீவிரவாதிகள் என காட்டப்பட்டுள்ளனர்.

2. இஸ்லாத்தின் முதல் கடமை "கலிமா" மொழிதல். அதாவது லாயிலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ். வணக்கத்திற்கு உரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர யாரும் இல்லை. முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார் என மொழிவது. இதனை பின்னணியாக திரையில் காட்டி ஒரு அமெரிக்கனின் கழுத்து அறுக்கப்பட்டு வெட்டப்படுவது போல் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இஸ்லாத்தின் முதல் கடமையே இரக்கமற்ற செயல்களைத் தூண்டுவதாக காட்டியுள்ளார் கமலஹாசன்.

3. முஸ்லிம்களின் இரண்டாவது கடமை தொழுகை. இதனையும் தீவிரவாதத்துடன் பின்னி பிணைய வைத்து காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. படத்தின் பல

விஸ்வரூபம் படத்தில் தீவிரவாதிகள் தீவிரவாத செயலுக்கு முன் தொழும் காட்சி




இடங்களில் தீவிரவாதிகள் தீவிரவாத செயல்களை செய்ய போகும் முன் தொழுது விட்டு செல்வதாக காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இஸ்லாத்தின் இரண்டாம் கடமையும் தீவிரவாதத்தினை தூண்டுவதாக காட்டியுள்ளார் கமலஹாசன்.

4. முஸ்லிம்கள் தங்கள் உயிருனும் மேலாக மதிக்கக்கூடிய இறை வேதமாகிய திருக்குர்ஆன் வசனங்கள் படத்தின் பல பகுதிகளில் தீவிரவாதத்தைத் தூண்டும் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாத செயல்களின் பின்னணியில் திருக்குர்ஆன் வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்படுகின்றன.

5. கலாச்சார தீவிரவாதத்தை பற்றி பேசிய கமலஹாசன் இதில் முஸ்லிம்களின் கலாச்சாரத்தின் மீது ஒரு பெரும் போரை தொடுத்துள்ளார். முஸ்லிம்களின் கலாச்சாரம் பண்பாடு இப்படத்தில் ஒரு தீவிரவாத கலாச்சாரமாகவே காட்டப்பட்டுள்ளது. இஸ்லாமிய கலாச்சார ஆடைகளை உடுத்திக்கொண்டு தாடி வைத்த தொப்பி போட்ட முஸ்லிம்கள் தீவிரவாத செயல்களை செய்வதாக காட்டியிருப்பதனால் ஒட்டு மொத்த முஸ்லிம்களுக்கும் எதிரான போர் தான் இப்படம்.

6. கமலஹாசன் போன்ற புத்திசாலிகள் இப்படத்தை பார்த்தால் ஒருவேளை தீவிரவாத செயல்களில் ஈடுபடுபவர்கள் தாலிபான்கள் என புரிந்து கொள்ளலாம். ஆனால் இப்படத்தை காணும் மற்ற மதத்தை சேர்ந்த சிறார்கள், வாலிபர்கள் ஒட்டு மொத்த இஸ்லாமியர்களையும் அதாவது திருக்குர்ஆனை ஓதக்கூடிய, தொழக்கூடிய, தாடிவைத்த தொப்பி போட்ட முஸ்லிம்களை தீவிரவாதிகளாகவே அடையாளங் காண்பார்கள். இது பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைப்பதாகும். மேலும் இது தேசிய ஒருமைக்கு ஊறு விளைவிப்பதாகும்.

7.முஸ்லிம்களை பொறுத்தவரை அனைவரும் முஸ்லிம்களே. அவர்களை ஆப்கன் முஸ்லிம்கள், அமெரிக்க முஸ்லிம்கள், சூடான் முஸ்லிம்கள் என பிரித்து பார்க்கவியலாது. அவர்கள் அனைவரும் அல்லாஹ், நபி(ஸல்) , திருக்குர்ஆன் என்ற கொடையின் கீழ் ஒன்றாக வருபவர்கள். எனவே வேறு நாட்டு முஸ்லிம்களை தீவிரவாதிகளாக காட்டினாலும்

அது அனைத்து முஸ்லிம்களையும் சேர்த்து கூறுவதாகவே பார்க்க வேண்டும்.

8. தீவிரவாத காட்சிகளை கோரமாக படம் பிடித்திருப்பது அதாவது குண்டு வெடிப்பில் உடல் சிதறும் காட்சிகள், துடிக்க துடிக்க கழுத்தை அறுப்பது போன்றவற்றை காட்டி முஸ்லிம்களை மிக மோசமானவர்கள் என்பதை வலியுறுத்துகிறார் கமலஹாசன்.

9. தீவிரவாதிகள் தலைவர் உமர் (அதாவது முல்லா உமர்) ஒரு வருடம் கோவை, மதுரை போன்ற ஊர்களில் தங்கியிருந்ததாக கூறுவதன் மூலம் தமிழ் முஸ்லிம்களை குறிப்பாக கோவை மதுரை முஸ்லிம்களை தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்தி காட்டியுள்ளார். (300க்கு மேற்பட்ட சான்றுகள் தன்னிடம் உள்ளதாக கூறிய கமலஹாசனிடம் இதற்கும் சான்றுள்ளதா?) காட்டுவாரா?

10. முஸ்லிம் கதாநாயகன் தன் மனைவியை தெரிந்தே மாற்றானுடன் உறவு கொள்ள அனுமதிக்கிறார். எத்தகைய ஈன செயல்களில் ஈடுபட்டாவது தாம் அடைய விரும்புவதை முஸ்லிம்கள் அடைவார்கள் என்று இதன் மூலம் கமலஹாசன் காட்டுகிறார்.

11. தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு அதிக "மவுசு" உள்ளதாக காட்டி இதன் மூலம் தமிழ் முஸ்லிம்கள் தீவிரவாத செயல்களுக்கு மிக முக்கியமானவர்கள் என்கிறார். "ஐந்து லட்சம் ரூபாயை எப்பொழுது வேண்டுமானாலும் சம்பாதித்து கொள்ளலாம் தமிழ் பேசும் ஜிஹாதி நமக்கு முக்கியம்" என்று வசனம் பேசுகிறார் வில்லன்.

12. கதாநாயகன் கமலஹாசன் ஒரு முஸ்லிமுடைய மகனாக காட்டப்படுகிறார். அவருடைய தந்தை கதாநாயகனின் தாயை திருமணம் செய்து குழந்தை பிறந்தவுடன் தலாக் சொல்லிவிட்டு சென்று விட்டதாக காட்டியிருக்கிறார். ஆப்கன் முஸ்லிம்களின் தந்தைகள் யார் என்றே தெரியாது என்றும் வசனம் உள்ளது. இவ்வசனங்களை படத்தின் கலையம்சத்திற்காகவே பயன்படுத்தி இருக்கிறார் என்பதை எந்த ஒரு பகுத்தறிவாளனும் ஏற்றுக்

முஸ்லிம்கள் பற்றிய இந்த கருத்துகள் அனைத்தையும் ஆப்கானிஸ்தான் முஸ்லிம்களைளப் பற்றி கூறுவதாக கூறி பதிய வைக்க முனைகிறார் கமலஹாசன். ஆனால் சில உண்மைகளை கவனமாக மறைத்துள்ளார் கமலஹாசன்.

சில்வஸ்டர் ஸ்டேலோன் என்பவர் நடித்த ராம்போ II என்ற படத்தை திரைஉலகத்தோடு சம்பந்தப்பட்ட யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். அப்படத்தின் ஆரம்பத்தில் இப்படம் மனஉறுதி மிக்க ஆப்கானிய மக்களுக்கு அர்ப்பணம் என்ற வாசகத்துடன் வரும் (This film is dedicated to the gallant people of Afganistan). அன்று ஆப்கானிஸ்தான் மக்கள் ரஷ்ய ஏகாதிபத்யத்தை எதிர்த்து போராடினார்கள். ராம்போ II படத்தின் கதாநாயகனும் ரஷ்யப் படைகளை எதிர்த்து சண்டையிட்டு தன்னுடைய ராணுவ அதிகாரியை மீட்டு செல்வதாக கதை அமைக்கப் பட்டிருக்கும். அதற்கு ஆப்கானிஸ்தான் மக்களும் உதவுவதாக கதை செல்லும்.

அன்று ரஷ்யாவை எதிர்த்த போது அவர்கள் மன உறுதி மிக்க ஆப்கானிஸ்தான் மக்கள். ஆனால் இன்று அமெரிக்காவை எதிர்க்கும் போது அவர்கள் தீவிரவாதிகள் (?). உலக அமைதிக்கே எதிரானவர்கள்(?).

ஹாலிவுட்டில் தன் காலை பதிப்பதை தன் நீண்டநாள் கனவாக வைத்திருக்கும் கமலஹாசன் அதி புத்திசாலி கமலஹாசன் இதெல்லாம் தெரியாமல் தான் படம் எடுத்திருக்கிறாரா? அப்படியென்றால் இவர் அதிமேதாவியின் அடையாளம் தானா? பணம் வாங்கிக்கொண்டு அமெரிக்காவின் பொருளாதார அடியாட்களாக பணிபுரியும் பலபேரில் ஒருவராகத்தான் இவர் தெரிகிறார்.

(பார்க்க : ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம் - ஜான் பெர்கின்ஸ் Confession of an Economic Hitman by John Perkins)

கொள்ள முடியாது. இதன் மூலம் ஓர் இனத்தையே கொச்சைப்படுத்துகிறார்.

*13.* முஸ்லிம் சிறுவர்களும் தீவிரவாதிகளாக காட்டப்படுகின்றனர். ஊஞ்சலில் ஆட மறுக்கும் ஒரு சிறுவன் துப்பாக்கி குண்டுகளை கண்ணைக்கட்டிக் கொண்டு சரியாக அவை எந்த வகையை சேர்ந்தவை எனஅடையாளங்காண்கிறான். இன்னொரு சிறுவனோ விளையாட துடிக்கிறான். அவன் மனித வெடிகுண்டாக அனுப்பிவைக்கப்படுகிறான். மற்றொரு இடத்தில் அமெரிக்க தாக்குதலில் இறந்து கிடக்கும் ஒரு சிறாரின் கையில் துப்பாக்கி. ஆக சின்னஞ்சிறுவர்களும் தீவிரவாதிகள் என

## கமல் இப்படத்தில் கூறியிருப்பது போல் உண்மையிலேயே தாலிபான்கள் கொடுமையானவர்களா? வன்முறையாளர்களா? தீவிரவாதிகளா?

இதற்கெல்லாம் தன்னிடம் 300க்கும் மேற்பட்ட ஆதாரங்கள் இருப்பதாக கூறுகிறார் கமலஹாசன். ஆனால் அமெரிக்காவின் அட்டூழியங்களையும் ஆக்கிரமிப்புகளையும் பட்டினியோடும் பசியோடும் எதிர்கொள்பவர்கள் தாலிபான்கள். தினத்தந்தி, தினமலர் போன்ற பத்திரிக்கைகளை அதிகம் படித்திருப்பார் போலிருக்கிறது. ஆனால் 3000க்கும் மேற்பட்ட ஆதாரங்களை நாம் தரமுடியும் அவர்கள் நல்லவர்கள், அமைதியானவர்கள் என்பதற்கு.

முத்தாய்ப்பாக ஒன்று தாலிபான்களை பற்றி தகவல்கள் சேகரிக்க ஆப்கானிஸ்தானுக்குள் புர்கா அணிந்து சென்றார் ஆங்கில பெண் பத்திரிக்கையாளர் யுவான்னி ரிட்லி என்பவர். ஆனால் தாலிபான்களிடம் சிக்கிக்கொண்டார். சிறைச்சாலையில் பயங்கர கலாட்டாக்களை செய்தார் ரிட்லி. ஆனால் புன்னகையுடனும் பொறுமையுடனும் ரிட்லியின் கலாட்டாக்களை எதிர்கொண்டார்கள் தாலிபான்கள். தாலிபான்கள் கையால் யுவான்னி ரிட்லியை கொலை செய்ய வேண்டும். அதன் மூலம் தாலிபான்களை உலக அரங்கில் கொடுமையாளர்களாக காட்ட வேண்டும் என்று முயற்சி செய்தனர் அமெரிக்க உளவுத்துறையினர். அதற்காக ரிட்லி ஓர் இஸ்ரேலிய உளவாளி என தயாரிக்கப்பட்ட தகவல்களை தாலிபான்கள் கையில் கிடைக்க செய்தனர். இதனால் கோபமுற்று, ரிட்லியை, தாலிபான்கள் கொல்வார்கள் என்பது அவர்களின் திட்டம். ஆனால் தாலிபான்களின் உளவுத்துறை சிறப்பாக செயல்பட்டு ரிட்லி உளவாளி அல்ல என்பதை கண்டுபிடித்தது. அவரை கண்ணியத்துடன் நடத்தியது. அவரை விடுதலை செய்யும் போது குர்ஆனை பரிசாக தந்தனுப்பியது.

பரிசில் பெற்ற குர்ஆனை இரண்டு வருடத்திற்கு பிறகு படித்தார் ரிட்லி. இஸ்லாத்தை தன் வாழ்க்கை நெறியாக ஏற்றார். பின்னர் தாலிபான்கள் குறித்து அவனியில் உலாவரும் கருத்துக்குழப்பங்களை நிறுத்த வேண்டி தாலிபான்களின் பிடியில் (In the Hands of Taliban) என்ற புத்தகத்தை எழுதினார். இப்புத்தகம் மூத்த பத்திரிக்கையாளர் குலாம் முஹம்மது அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு தமிழில் வேர்கள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது விற்பனையில் உள்ளது. அப்புத்தகத்தில் தாலிபான்கள் எத்தகைய மென்மையான மனம் படைத்தவர்கள் என்பதை உலகத்திற்கு உணர்த்தினார் யுவான்னி ரிட்லி. இதன் மூலம் தாலிபான்கள் பற்றி அதுவரை பேசப்பட்ட வந்த கட்டுக்கதைகள் தகர்ந்து போயின. இவர் தான் பின்னர் இங்கிலாந்து பிரதமர் டோனிபிளேர் (மைத்துனி) மனைவியின் சகோதரி இஸ்லாத்தை ஏற்பதற்கும் காரணமாக இருந்தார். பாலஸ்தீன மக்களின் அவதி தீர்க்க இஸ்ரேலை எதிர்த்து பாலஸ்தீனத்திற்கு கப்பலை அனுப்பியதும் இந்த வீர நங்கையே. அக்கப்பலில் மருந்துகளும் உணவுப்பொருட்களும் கொண்டு செல்லப்பட்டன. தாலிபான்களின் கைகளில் மாட்டி மீண்டு வெளிவந்த ஒரு ஆங்கிலேய பத்திரிக்கையாளர் தாலிபான்கள் நல்லவர்கள் என சான்றளிக்கிறார். ஆனால் தமிழ்நாட்டில் வெளிவரும் கன்னித்தீவு பாணி கதைகளை படித்து விட்டு இப்படத்தை எடுத்திருப்பது வேண்டுமென்றே உண்மையை மறைத்து தற்போது ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கா நடத்திக்கொண்டிருக்கும் படுகொலைகளை நியாயப்படுத்தவே. இதுவே இப்படம் எடுக்கப்பட்டதன் பின்னணி.

*இதில் நிரூவப்பட்டுள்ளது. மேலும் அமெரிக்கர்கள் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பிஞ்சு குழந்தைகளையும் பெண்களையும் கொல்வது நியாயமே என்ற தகவலை பதிய வைக்கிறார் கமல்.*

***14.*** *முஸ்லிம்கள் தற்கொலை தாக்குதலில் உடனடியாக சாகத்தயாராக உள்ள ஜிஹாதிகள் மட்டுமல்ல அவர்கள் சிறிது சிறிதாகவும் சாக தயாராக உள்ள ஜிஹாதிகள் என வசனம் பேசி ஜிஹாத் என்ற பதத்தையே கொச்சைப்படுத்துகிறார். முஸ்லிம்கள் மிகக் கொடூரமானவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்களின் மனதில் பதிய வைக்க முயற்சி செய்துள்ளார்.*

***15.*** *1931ம் ஆண்டில் காளிதாஸ் படத்தில் ஆரம்பித்து 1990ம் ஆண்டு வரை பல ஆயிரம் படங்கள் வெளிவந்தன. எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றோர் நடித்த படங்களில் எந்த ஒரு படத்திலும் முஸ்லிம் சமுதாயத்தை தீவிரவாதிகளாக காட்டும் காட்சிகளோ இஸ்லாத்தை இழிவுபடுத்தும் காட்சிகளோ இருந்தது இல்லை. கடந்த 22 ஆண்டுகளில் திடீரென முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதிகளாக மாறிவிட்டார்களா? இந்தப் பொய் பிரச்சாரத்தில் மறைந்திருக்கும் உண்மை என்ன?*

***16.*** *தேசப்பிரிவினையின் காலத்தில் எடுக்கப்பட்ட படங்கள் கூட முஸ்லிம்களை தீவிரவாதிகளாக உருவகப் படுத்தவில்லை. மாறாக இந்துக்களை முஸ்லிம்கள் காப்பாற்றுவதாகவும் முஸ்லிம்களை இந்துக்கள் காப்பாற்றுவதாகவும் காட்டி தேச ஒற்றுமையில் படம் எடுத்தவர்களும் பங்கேற்றார்கள். இத்தகைய சமூக அக்கறை கமலஹாசனிடம் ஏன் இல்லாமல் போனது. காரணம் அவர் ஒரு வியாபாரி. இதையே முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் வாசகங்களில் சொல்வதென்றால் அவர் திட்டமிட்டதொரு சூதாட்டத்தில் (*Calculated Risk*) ஈடுபட்டிருக்கிறார்.*

***17.*** *இப்படத்தை முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரமாகவே* Hate Propaganda *கமலஹாசன் எடுத்துள்ளார். இப்படத்தை நடித்து இயக்கி தயாரித்துள்ள கமலஹாசன் உன்னைப்போல் ஒருவன் என்ற படத்திலும் இது போன்ற கருத்துக்களை ஏற்கனவே முஸ்லிம்களுக்கு எதிராக விஷமென கக்கியுள்ளார். இப்படம் வெறும் கலைக்காகவோ அல்லது பணம் பண்ணுவதற்காகவோ எடுக்கப்பட்டதல்ல. கமலஹாசன் இது போன்ற சிந்தனைகளில் ஏற்கனவே ஊறியுள்ளார் என்பது நிதர்சனம். படத்தின் முடிவில் விஸ்வரூபம் இந்தியாவில் என்று கூறியிருப்பதன் மூலம் இவர் எதிர்காலத்தில் இவ்வாறு செய்ய உள்ளார் என்பது நிரூபனமாககிறது, எனவே இவருடைய பின்னணியில் யார் உள்ளனர் என்பது ஆராயப்படவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.*

***18.*** *இப்படம் தயாரிக்க 90 கோடிக்கும் மேல் செலவானதாக கமலஹாசன் கூறியுள்ளார். இந்த மொத்தப்பணமும் கமலஹாசனுக்கு எங்கிருந்து கிடைத்தது என்ற விவரங்கள் அறியப்பட வேண்டும். 90 கோடி ரூபாய்க்கு அடமானம் வைக்கும் அளவிற்கு உள்ளதல்ல கமலஹாசனின் இல்லம். அப்படியெனில் அடமானப்பணம் போக மீதி பணத்திற்கு கமலஹாசன் என்ன செய்தார்? யார் யார் இந்த படத்தின் பின்னணியில் உள்ளனர் என்பது தெரிய வேண்டும்.*

**19. அல்லும் பகலும் அமெரிக்கா பயணம் :** *இப்படத்திற்காக பலமுறை இவர் அமெரிக்காவிற்கு சென்று வந்துள்ளார். இப்படத்தின் கதையை அமெரிக்காவிற்கு அனுப்பி குறைகள் நீக்கப்பட்டதாக சில செய்திகள் கூறுகின்றன. அவை உண்மையெனில் இப்படத்தின் கதை அமெரிக்காவிற்கு அனுப்பப்பட வேண்டியதன் அவசியம் என்ன? இப்படத்தயாரிப்பின் பின்னணியில் அமெரிக்கா உள்ளது என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றதல்லவா..?*

***20.*** *ஹே ராம் என்ற படத்தில் "ஓநாயாக இருந்து பார் அது ஆட்டை கொல்வதின் நியாயமும் தர்மமும் உங்களுக்கு புரியும்" என்றொரு வசனம் வரும். அதைப்போல் ஒரு முஸ்லிமாக இருந்து பார்த்தால் தான் இப்படம் முஸ்லிம்களை*

எவ்வாறு காயப்படுத்துகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்?

எனவே மேற்சொன்ன நியாயமான காரணங்களின் அடிப்படையில் இப்படம் தடைசெய்யப்படவேண்டிய படம் என இஸ்லாமிய கூட்டமைப்பினர் முடிவு செய்தனர்.

## இஸ்லாமிய கூட்டமைப்பினர் எடுத்த நடிவடிக்கைகள்

இதன் பின்னர் 21.1.2013 அன்று இரவே இதற்கான கலந்தாலோசனையில் இஸ்லாமிய கூட்டமைப்பினர் ஈடுபட்டனர். கதையை விவரிக்கும் பணியை தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் சார்பில் பங்கேற்ற அபூ அஃப்ரஹ் படத்தினை எடுத்துக் கொண்டார். படத்தில் இடம் பெற்றிருந்த முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான காட்சிகளின் உக்கிரம் விவாதிக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் இம்முறை தெளிவான அக்கறையுடன் செயல்பட்ட காவல்துறையினர் தொடர்ந்து இஸ்லாமிய கூட்டமைப்பினரை தொடர்பு கொண்டு இப்பிரச்சனையில் முஸ்லிம்களின் நிலை என்ன என்பதை கேட்டவண்ணம் இருந்தனர். இறுதியில் முஸ்லிம்கள் மிக அதிருப்தியுடன் உள்ளனர் என்ற தகவல் மட்டும் அவ்வப்போது காவல்துறையினருக்கு தெரியப்படுத்தப் பட்டது.

அடுத்த நாள் 22.1.2013 அன்று காலை மீண்டும் கூட்டமைப்பினர் கூடினர். 4 இதனை சட்ட உதவியுடன் முதலில் அணுகுவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி சென்னை நகர ஆணையாளர் ஜார்ஜ் அவர்களை 22.1.2013 மதியம் 3 மணியளவில் கூட்டமைப்பினர் சந்தித்து இப்படத்தினை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். அப்போது தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் சார்பாக அதன் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி அவர்களும் படத்தை பார்த்தவர் என்ற முறையில் அபூஅஃப்ரஹ்வும் இதில் பங்கேற்றனர்.

### அடுத்ததாக தமிழ்நாட்டில் ஏன் இப்படம் எடுக்கப்படவேண்டும்? தமிழ் பேசும் முஸ்லிம்கள் ஏன் தாலிபான் தீவிரவாதிகளுடன் தொடர்பு படுத்திகாண்பிக்கப்பட வேண்டும்?

இதற்கான பதில் இந்தியாவிலேயே வடமாநில முஸ்லிம்களை விட தென்னக முஸ்லிம்களே இஸ்லாத்தில் அதிக ஈடுபாட்டுடன் உள்ளனர். அதிலும் குறிப்பாக தமிழக முஸ்லிம்கள் உலகளாவிய இஸ்லாமிய இயக்கங்களின் அறிவுடனும் இஸ்லாத்திற்கெதிரான உலகளாவிய சதிகளை குறித்தும் தெளிவான அறிவுடன் உள்ளனர். மிகக்குறிப்பாக அமெரிக்காவின் சதிகளை குறித்து இந்தியாவில் அதிகம் பேசும் மாநிலமாக தமிழகம் உள்ளது. தமிழக முஸ்லிம்கள் உள்ளனர். இதற்கு முக்கிய காரணம் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டும் அதன் தலைவர் வைகறை வெளிச்சம் பத்திரிக்கையின் ஆசிரியர் மூத்த பத்திரிக்கையாளர் மு.குலாம் முஹம்மது என்றால் அது மிகையாகாது. கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்காவை அதன் உண்மை முகத்தை இவ்வுலகிற்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு அடையாளம் காட்டியவர் இவர். இவர் மொழி பெயர்த்த தாலிபான்களின் பிடியில் யுவான்னி ரிட்லி என்ற புத்தகம் இதற்கொரு சாட்சி. இவர் மூலம் பாடம் பெற்றோர் பலர். இவர்கள் தமிழகமெங்கும் அமெரிக்காவின் சதிகளை குறித்தும் அமெரிக்காவின் போக்கு குறித்தும் பல எதிர்ப்புகளை பதிய வைத்து வருகின்றனர். அதில் குறிப்பாக சமீபத்தில் இன்னொசென்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ் படத்திற்கு தமிழக முஸ்லிம்கள் தந்த எதிர்ப்பையே உதாரணம் காட்டலாம். இதனால் அமெரிக்கா இங்கே எழும் எதிர்ப்பை சரிகட்ட நினைத்தது. இந்த காரணங்கள் போதாதா அமெரிக்கா கமலஹாசனை விலைக்கு வாங்க?

**முஸ்லிம்களுக்கு இணையாக தீவிர அமெரிக்க எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்கொள்பவர்கள் நக்சலைட்டுகள். துண்டு பிரசுரங்களின் வாயிலாகவும் புத்தகங்களின் வாயிலாகவும் அமெரிக்காவிற்கு எதிரான கருத்துக்களை பதிய வைத்து வருபவர்கள் இவர்கள். இதன் காரணமாகவே இவர்களை மோசமானவர்களாக காட்டி ஒரு படம் எடுக்கப்பட்டது. அதை எடுத்தவரும் திருவாளர் கமலஹாசன் அவர்களே. படத்தின் பெயர் குருதிப்புனல்.**

அப்போது பேசிய ஆணையாளர் அவர்கள் முஸ்லிம்களின் உணர்வை தான் உணர்வதாகவும் இப்பிரச்சனையில் அரசு என்றைக்கும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக உள்ளது என்றும் நாளை இது குறித்து உள்துறை செயலருடன் கூடி பேசலாம் என்றும் கூறினார். மேலும் முஸ்லிம்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை ஏற்படுத்த வேண்டாம் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

அடுத்த நாள் 23.1.2013 அன்று உள்துறை செயலரை கூட்டமைப்பினர் சந்தித்தனர். தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் சார்பில் அதன் அமைப்பாளர் குலாம் முஹம்மது அவர்களும் அதன் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி அவர்களும் இதில் பங்கேற்றனர். அப்போது இப்படத்தின் தன்மை குறித்து உள்துறை செயலரிடம் எடுத்துச் சொல்லப்பட்டது.

படத்தின் மையக்கருவே முஸ்லிம்களுக்கு எதிராக உள்ளது ஆகவே மொத்த படத்தையும் தடை செய்ய வேண்டும் என கூட்டமைப்பினர் கோரினர்.

மேலும் படத்தில் உள்ள முஸ்லிம்களை, இஸ்லாத்தை, திருக்குர்ஆனை, தொழுகையை இழிவுபடுத்தும் பல்வேறு காட்சிகளை எடுத்துக்கூறினர்.

உள்துறை செயலர் இவற்றை கவனமாக கேட்டுக்கொண்டு இதில் பல்வேறு சட்ட சிக்கல்கள் உள்ளன. ஆகவே இதனை உடனே தடை செய்ய இயலாது. சட்ட நடைமுறைகளை கடைபிடிக்க காலதாமதம் ஆகும் என தெரிவித்தார்.

இஸ்லாமிய கூட்டமைப்பினர் இதனை ஏற்றுக்கொள்ளாமல் உடனடியாக இப்படத்திற்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோரினர்.

அன்று இரவு படத்தினை திரையிட திரையரங்குகளுக்கு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதாவது படத்தினை அரசு தடை செய்யவில்லை. ஏனெனில் மத்திய அரசு தணிக்கை செய்த பின் அப்படத்தினை தடை செய்வது எந்த அளவிற்கு நீதிமன்றத்தில் எடுபடும் என்பது தெரியாது. ஆகவே தமிழக அரசு இதனை கவனத்துடன் கையாண்டது.

சட்டம் ஒழுங்கு பிரச்சனையை காரணங்காட்டி திரையரங்குகளுக்கு 144 தடை உத்தரவினை பிறப்பித்தது. உளவுத்துறையின் தகவல்களை மேற்கோள்காட்டி சட்டம் ஒழுங்கு பாதிப்பு ஏற்படலாம் என்பதனால் இத்தடை உத்தரவு 15 நாட்களுக்கு அமலில் இருக்கும் என்றும் உத்தரவில் கூறப்பட்டது.

இத்தடை உத்தரவு அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் வழியாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிறப்பிக்கப்பட்டது. இது ஒரு மிகச்சிறந்த நடவடிக்கையாக அனைத்து சட்ட வல்லுனர்களாலும் பின்னர் கருத்து கூறப்பட்டது. ஏனெனில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது என்பது முழுக்க முழுக்க மாநில அரசின் பிரச்சனை. அதில் மத்திய அரசு தலையிடமுடியாது. எனவே தடை அமலுக்கு வந்தது.

அதன் பின்னர் அன்றைய இரவே இப்படத்தினை சட்டரீதியாக அணுகவேண்டிய உதவிகளை கூட்டமைப்பினருக்கு முன்னின்று செய்வது என்று தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் நிர்வாகிகளால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி அன்று இரவு 9 மணி அளவில் மனித உரிமை ஆர்வலரும்

வழக்கறிஞருமான சங்கரசுப்பு அவர்களை அவரது இல்லத்தில் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டின் அமைப்பாளர் குலாம் முஹம்மது அவர்களும் பத்திரிக்கையாளர் அபூ அஃப்ரஹ் அவர்களும் சென்று சந்தித்தனர். உடன் இஸ்லாமிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஹனீஃபா அவர்களும் கூட்டமைப்பினரில் சிலரும் பங்கேற்றனர்.

அப்போது வழக்கை எப்படி எடுத்து செல்வது என்பது குறித்து சங்கரசுப்பு அவர்களிடம் விவாதிக்கப்பட்டது. படத்தின் கதையமைப்பு, படத்தில் இஸ்லாத்திற்கு, முஸ்லிம்களுக்கு எதிரான காட்சிகள் குறித்து அபூ அஃப்ரஹ் எடுத்துச்சொல்ல குறிப்பெடுக்கப்பட்டது. வழக்கிற்கான வரைவு தயார் செய்யப்பட்டது.

அடுத்த நாள் கமலஹாசன் ராஜ்கமல் இன்டெர்நேஷனல் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அது நீதிபதி கே.வெங்கட்ராமன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. கமலஹாசன் தரப்பு வழக்கறிஞர் ராமன் இது முழுக்க முழுக்க ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளை பற்றி எடுக்கப்பட்ட படம் ஆகையால் இதனை தமிழக முஸ்லிம்கள் எதிர்ப்பதில் எந்த நியாயமும் இல்லை என்று வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி முதலில் இப்படத்தில் ஒரு சில காட்சிகளை நீக்கினால் போதுமா என்று முஸ்லிம்கள் தரப்பு வழக்கறிஞரைப் பார்த்து கேட்டார். அதனை முஸ்லிம்கள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் சட்டம் ஒழுங்கு பிரச்சனையின் காரணமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது, ஆகவே இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என வாதிட்டார்.

வாதங்களை கேட்ட நீதிபதி படத்தை பார்த்துவிட்டு தீர்ப்பை அறிவிப்பதாக அறிவித்தார். இதன் பின்னர் நீதிபதிக்கு படம் போட்டுக்காட்டப்பட்டது. கிட்டத்தட்ட 50 பேர் சூழ நீதிபதி தன் குடும்பத்துடன் படத்தை பார்த்தார்.

மீண்டும் நீதிமன்றத்திற்கு திங்கட்கிழமையன்று வழக்கு விசாரணைக்கு வந்தது. முஸ்லிம்கள் தரப்பு வழக்கறிஞர் கூறுகையில் கமலஹாசன் இது போன்ற ஆயிரம் படங்களை தயாரிக்கலாம். இது அவருக்கு வியாபாரம். ஒரு வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டத்தை இன்னொரு வியாபாரத்தில் சரிகட்டமுடியும். ஆனால் இவ்விஷயத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டு ஓர் உயிர் போகுமானால் அதை மீட்டுத்தர யாரால் முடியும். எனவே இந்தப்படத்தினை தடை செய்த அரசின் உத்தரவை ரத்து செய்யக்கூடாது என கோரினார்.

அப்போது நீதிபதி இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் தரப்பினருடன் கலந்து பேசி சமரசமாக போகுமாறு கமலஹாசன் தரப்பு வழக்கறிஞரை அறிவுறுத்தினார். ஆனால் படத்தைப்பற்றியோ படத்தில் ஆட்சேபகரமான காட்சிகள் உள்ளதா என்பதை பற்றியோ நீதிபதி வாயை திறக்கவில்லை. கமலஹாசன் தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கை செவ்வாய்கிழமைக்கு ஒத்திவைக்கும் படி கோரினார். வழக்கு செவ்வாய்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

செவ்வாய்கிழமை வாத பிரதிவாதங்களை கேட்ட பிறகு தீர்ப்பினை நீதிபதி வெங்கட்ராமன் யாரும் எதிர்பாராததொரு தீர்ப்பை அளித்தார். அதாவது தனிமனிதனின் சுதந்திரத்தில் தலையிட யாருக்கும் உரிமையில்லை. எனவே அரசின் தடையுத்தரவை நீக்குவதாக அறிவித்தார். இதில் வேடிக்கை என்னவென்றால் படத்தை அவர் எதற்கு பார்த்தார் என்பதே யாருக்கும் புரியவில்லை. படத்தில் ஆட்சேபகரமான காட்சிகள் உள்ளதா என்பதை பற்றி அவர் வாயே திறக்கவில்லை. இத்தீர்ப்பினை அவர் முதல்நாள் அன்றே கூட தந்திருக்கலாம். படத்தை பார்த்துவிட்டு தான் இந்த தீர்ப்பை தர வேண்டும் என்ற அவசியமே இல்லை.

இத்தீர்ப்பினை அவர் நேரத்தை கடத்தி கடத்தி கடைசியாக இரவு 10 மணிக்கு மேல் தந்தார். அப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கிட்டு அரசு இதில் மேல்முறையீடு செய்ய உள்ளதால் காலை 10.30 மணி வரை தடையை நீட்டிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால்

நீதிபதி இதனை ஏற்கவில்லை. மேலும் தடைநீக்க உத்தரவும் உடனடியாக யாருக்கும் கிடைக்காமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் உடனடியாக மேல்முறையீடு செய்யும் முயற்சி தடுக்கப்பட்டது.

ஆனால் அரசு தரப்பு வழக்கறிஞரும் முஸ்லிம்கள் தரப்பும் இதனை விடவில்லை. உடனயாக அன்று இரவே தலைமை நீதிபதி அவர்களை அவருடைய இல்லத்திற்கே சென்று பார்த்தனர். அவரிடம் நிலைமை விளக்கப்பட்டது. அவர் காலை 10.30 மணி வரை தடையை நீட்டிப்பதாக அறிவித்தார்.

அடுத்தநாள் மாலை 2.15 மணிக்கு தான் வழக்கு தலைமை நீதிபதியின் முன் விசாரணைக்கு வந்தது.

காலை 10.30 மணி வரையே தடை இருந்ததால் பல இடங்களில் படம் திரையிடப்பட்டது. ஆங்காங்கே சில திரையரங்குகளில் பிரச்சனைகள் நடந்தன. பல இடங்களில் படம் காவல்துறையினரால் நிறுத்தப்பட்டது. காரணம் தடை நீக்கம் ராஜ்கமல் இன்டெர்நேஷனல் நிறுவனத்திற்கேயன்றி தியேட்டர் அதிபர்களுக்கல்ல என்று கூறப்பட்டது.

மதியம் வழக்கினை விசாரித்த நீதிபதி தடையின் மீதான விசாரணையை அடுத்தவாரம் திங்கட்கிழமை வரை ஒத்தி வைப்பதாக கூறினார். இதனைத் தொடர்ந்து பல நாடகங்கள் அரங்கேறின.

## ஏன் இத்தகைய படங்கள் எடுக்கப்படுகின்றன?

*2002 குஜராத் கலவரத்திற்கு பிறகு இந்துத்துவா சக்திகளுக்கு ஏற்பட்ட அவப்பெயரை மாற்ற அவர்கள் மேற்கொண்ட முயற்சி தான் முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்ற பொய் பிரச்சாரம். இதற்காக நாட்டின் பல பகுதிகளில் அவர்கள் குண்டுகளை வைத்தார்கள். பழியை முஸ்லிம்களின் மீது போட்டார்கள். இதே போன்ற முயற்சி உலகெங்கும் அமெரிக்காவாலும் அமெரிக்க கைக்கூலிகளான ஊடகங்களாலும் பரப்பப்பட்டன. அமெரிக்க உளவுத்துறையின் உதவியுடன் பல குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. பழி முஸ்லிம்களின் மீது போடப்பட்டது. இதற்கான திட்டம் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பது* Samuel P. Huntington *சாமுவேல் ஹன்டிங்டன் என்பவனால் எழுதப்பட்ட நாகரிகங்களின் மோதல் (*Clash of Civilisations and remaking of a New World Order) *என்ற புத்தகத்தில் உள்ளது. 2008ம் ஆண்டு வரை இந்தியாவில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கு முஸ்லிம்களே குற்றம் சாட்டப்பட்டார்கள். ஆயிரக்கணக்கில் முஸ்லிம்கள் கைதானார்கள். அதைப்பற்றிய செய்திகள் தினந்தோறும் செய்தித்தாள்களையும் ஊடகங்களையும் அலங்கரித்தன. 2008ல் ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி இக்குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிக்க ஆரம்பித்தவுடன் நிலைமை மாறியது. இந்த குண்டுவெடிப்புகளின் பின்னணியில் இருந்தது இந்துத்துவவாத சக்திகள் என்பதும் அவர்கள் இந்த நாட்டின் அரசியல் நிர்ணய சட்டத்தை மாற்றியமைத்து இந்துத்துவா தேசத்தை உருவாக்க திட்டமிட்டிருந்ததும் தெரிய வந்தது. இதன் தலைவர்கள் கைது செய்யப்பட இருந்த நேரத்தில் கர்கரே திட்டமிட்டு கொலை செய்யப்பட்டார் (பார்க்க கர்கரேயை கொலை செய்தது யார்? -வேர்கள் வெளியீடு). ஆயிரக்கணக்கில் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டும் நிற்காத குண்டுவெடிப்புகள் இந்துத்துவ தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதும் நின்றது. வேறு வழியின்றி இந்த செய்திகளையும் மிகச்சில தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின, ஆனால் முக்கியத்துவம் தராமல். பின்னர் கர்கரே கொலை செய்யப்பட்டவுடன் இந்த செய்திகள் நிறுத்தப்பட்டன. ஆனால் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம்* Hate Propaganda *மட்டும் நிறுத்தப்படவே இல்லை. அது இன்றளவும் தொடர்ந்தே வருகின்றது.*




## கமலஹாசனின் நாடகம்

இதன் பின்னர் கமலஹாசன் தன்னுடைய நாடகங்களை ஊடகங்களில் அரங்கேற்ற தொடங்கினார். ஒரு சிறிய கூட்டம் தன்னை மிரட்டுவதாக அறிக்கைவிட்டார். கண்ணீருடன் திரையில் தோன்றிய கமலஹாசன் இப்படம் வெளிவராததால் ஏற்பட்ட நஷ்டத்தில் தன்னுடைய வீடு பறிபோக உள்ளதாக கூறினார். மேலும் தான் தமிழ்நாட்டை விட்டு வெளியேறி மதசார்பற்ற ஒரு மாநிலத்திற்க போகப்போவதாகவும் அப்படி ஒரு மாநிலம் கிடைக்கவில்லை என்றால் இந்தியாவை விட்டே வெளியே போகப்போவதாகவும் கூறினார் (ஒருவேளை அமெரிக்காவில் இவருக்கு இடம் தந்து விட்டார்களா?). உடனே ஊடகங்கள் கூப்பாடு போட ஆரம்பித்தன. கருத்து சுதந்திரம் இல்லையா? முஸ்லிம்கள் என்ன சட்டத்தை கையில் எடுத்துக்கொள்கிறார்கள்? இதை கேட்பார் யாரும் இல்லையா? உலகம் போற்றும் ஒரு கலைஞனை இவ்வாறு செய்தல் கூடுமா? சென்சார் போர்டு சான்றிதழ் தந்த பிறகு ஒரு படத்திற்கு தடை கோர இவர்கள் யார்? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

பல தொலைக்காட்சிகள் முஸ்லிம்களை குற்றவாளிகளாக்கும் போக்கிலேயே செயல்பட்டன. குறிப்பாக சன்செய்தி நிறுவனம் திரையரங்குகள் தாக்கப்பட்ட காட்சிகளை காட்டியும் கமலஹாசன் ரசிகர்கள் சிலரை வெறித்தனமாக பேச வைத்தும் ஒரு மோதலை கமலஹாசன் ரசிகர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்படுத்தும் முயற்சியை பட்டவர்த்தனமாக செய்து கொண்டிருந்தது. பல ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கமலஹாசன் வீட்டருகே கூடிவிட்டதாகவும் அவருக்கு ஆயிரக்கணக்கில் பலர் பணம் அனுப்பிக்கொண்டிருப்பதாகவும் செய்திகளை வெளியிட்டு கமலஹாசனுக்காக அனுதாபங்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தது. இதை வெவ்வேறு செய்தி நிறுவனங்கள் வெவ்வேறு விதமாக செய்து கொண்டிருந்தன. ஒட்டு மொத்தமாக அனைவரும் முஸ்லிம்களின் மீது பாய்ந்து கொண்டிருந்தனர்.

இதற்கிடையே இதில் அரசியல் இருப்பதாகவும் சிலர் பேசினர். ஆனால் இவற்றை மறுத்த முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் நாட்டின் குடிமக்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்பதை தெளிவுபடுத்தினார். 90 கோடி செலவில் இப்படத்தை தெரிந்தே தான் கமலஹாசன் எடுத்துள்ளார். இது ஒரு திட்டமிட்ட சூதாட்டம் என்றும் கூறினார். முஸ்லிம்கள் கூட்டமைப்பில் ஏழரை லட்சம் தொண்டர்கள் உள்ளனர். 500க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் படம் திடையிடப்படுகிறது. அனைத்து திரையரங்குகளுக்கும் பாதுகாப்பளிக்க ஐம்பத்தைந்தாயிரம் காவலருக்கும் மேல் தேவைப்படும். எனவே இது சாத்தியமில்லாத ஒன்று. எனவே தான் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என விளக்கினார். முஸ்லிம்களும் கமலஹாசனும் சமரசம் செய்து கொள்ள விரும்பினால் அரசு அதனை முன்னின்று செய்யும் என அறிவித்தார்.

இதன் பின்னர் நடந்தது அனைவரும் அறிந்ததே. முஸ்லிம்கள் கூட்டமைப்பினர் அரசின் தலைமையில் கமலஹாசனுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். (தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் பேச்சு வார்த்தையில் பங்கேற்கவில்லை, படம் முழுவதுமாக தடை செய்யப்படவேண்டும் என்பதே அதன் நிலை) இதில் சில (7) காட்சிகளை நீக்குவதாக




# கருத்துச்சுதந்திரம்

கருத்து சுதந்திரத்தை பற்றி பெரும் போர் ஒன்றை நடத்தி சென்றிருக்கின்றன நமது ஊடகங்கள். ஆனால் இவை தங்கள் கூற்றுகளில் உண்மையாக இருந்திருக்கிறார்களா என்றால் இல்லை. பல நேரங்களில் கருத்து சுதந்திரத்தை கண்டும் காணாமல் இருந்திருக்கின்றன இந்த ஊடகங்கள்.

குஜராத் கலவரத்தின் பின்னணியில் "பர்ஸானியா" என்ற படம் எடுக்கப்பட்டது. இப்படம் குஜராத்தில் திரையிட அனுமதிக்கப்படவில்லை. இதுவும் சென்சார் போர்டு அனுமதி பெற்று வெளிவந்ததே. அப்போது இந்த அளவிற்கு இந்திய ஊடகங்கள் கூப்பாடு போட்டதாக உங்களுக்கு நினைவிருக்கிறதா வாசகர்களே? அல்லது நரேந்திர மோடிக்கெதிராக? வாயை திறந்தனவா இந்த ஊடகங்கள்.....ம்ம்ஹூம் (http://www.outlookindia.com/article.aspx?233909)

அடுத்து டாம் 999 என்ற படம் இதுவும் சென்சார் போர்டு அனுமதி அளித்ததே. இதனை தமிழ் நாட்டில் திரையிட அனுமதிக்கவில்லை. அப்போது எந்த ஊடகமாவது இப்படி ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்த குரலில் கருத்து சுதந்திரத்தை பற்றி பேசினார்களா?

அமீர் கான் நடித்த ஃபனா என்ற படமும் குஜராத்தில் தடை செய்யப்பட்டது. நர்மதா அணை திட்டத்திற்காக அணை கட்டும் இடத்தில் இருந்து விரட்டப்பட்ட மக்களின் உரிமையைப் பற்றி பேசும் படம் அது. அப்பொழுது இது போன்ற ஊடகப்போர்கள் தொடுக்கப்பட்டனவா நரேந்திர மோடிக்கெதிராக? இல்லை. அவர் தான் இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் ஆயிற்றே (!) (http://en.wikipedia.org/wiki/Fanaa_(film), http://articles.timesofindia.indiatimes.com/2007-02-10/edit-page/

கமலஹாசன் உறுதியளித்தார். இதன் பின்னர் இஸ்லாமிய கூட்டமைப்பினரும் கமலஹாசனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். படத்திற்கான தடை அரசால் நீக்கப்பட்டது.

ஆனால் அடுத்த நாள் வந்த அனைத்து பத்திரிக்கைகளிலும் குறிப்பாக தி இந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற பத்திரிக்கைகளில் ஒரு நொடிக்கான காட்சியும் படத்தில் இருந்து நீக்கப்படாது, சில இடங்களில் காட்சிகள் மௌனமாக்கப்படும் என செய்திகள் வெளியாகி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்திற்கு மலேசியாவிலும் அண்டை நாடான இலங்கையிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

27876987_1_gujarat-riots-bajrang-dal-producers)

*இந்து விதவைப்பெண்களை பற்றி எடுக்கப்பட்ட படம் வாட்டர் 2005. தீபா மேத்தா நடித்த இப்படத்தை படமெடுக்க பல இடையூறுகள் தரப்பட்டன. இந்து மத அமைப்புகள் இப்படத்தை படமெடுக்க பல இடங்களில் பிரச்சனையை ஏற்படுத்தினர். அரசும் இப்படத்தின் கதையை மாற்றம் செய்ய பணித்தது. அப்பொழுதும் இப்படம் படம் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. வாரணாசி போன்ற இடங்களில் இப்படத்தை படம் பிடிக்க தடைவிதிக்கப்பட்டது. அப்பொழுது இந்த அளவிற்கு பத்திரிக்கைகள் குரலெழுப்பினவா? அப்போது எங்கே போனது கருத்து சுதந்திரம்?* (http://news.bbc.co.uk/2/hi/south_asia/634324.stm)

*சமீபத்தில் ஜெய்ப்பூரில் உள்துறை அமைச்சர் ஷிண்டே இந்துத்தீவிரவாத்தை பற்றி பேசினார். பிஜேபியும் ஆர்.எஸ்.எஸ்-ம் தீவிரவாத முகாம்களை நடத்துவதாக கூறினார். தன்னிடம் இருந்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே இதனை கூறினார். உடனே பிஜேபி ஆர்.எஸ்.எஸ் மட்டுமல்ல பல பத்திரிக்கைகள் குறிப்பாக தினமணி போன்ற பத்திரிக்கைகள் ஷிண்டேவை கடுமையாக சாடின. அப்போது எங்கே போனது கருத்து சுதந்திரம்.*

*டாவின்சி கோட் என்ற படம் கிறித்தவ மதக்கோட்பாட்டிற்கு எதிராக உள்ளது, இயேசுவை தவறாக சித்தரிக்கிறார்கள் என்ற காரணம் காட்டி அப்படம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற அப்படம் இந்தியாவில் தடை செய்யப்பட்ட போது எங்கே போயின ஊடகங்கள்?* http://www.guardian.co.uk/world/2006/may/24/books.india, http://en.wikipedia.org/wiki/The_Da_Vinci_Code_(film)

*குஜராத் கலவரத்தின் போது பல தொலைக்காட்சி செய்தி சானல்கள் அங்கே ஒளிபரப்ப தடை செய்யப்பட்டன. காரணம் இந்துத்தீவிரவாதிகள் செய்து கொண்டிருந்த கொலைகளையும் கொடூரங்களையும் பட்டவர்த்தனமாக காட்டிக்கொண்டிருந்ததது தான்? அப்போது எங்கே போயிற்று கருத்து சுதந்திரம்?* http://ibnlive.in.com/news/tv-channels-showing-riot-sting-banned-in-gujarat/51225-3.html, http://www.medianewsline.com/aaj-tak-ndtv-cnn-ibn-news-channels-banned-in-gujrat/

*சமீபத்தில் நாட்டில் நடக்கும் ஊழல்களுக்கு காரணம் தலித்களும் தாழ்த்தப்பட்டவர்களும் மலைசாதி மக்களுமே என அறிவித்தார் ஆஷிஷ் நந்தி என்பவர். அவருக்கு எதிராக வன்கொடுமை சட்டம் பாய்ந்தது. அப்போது எங்கே போயிற்று கருத்து சுதந்திரம்?*

*மும்பைத்தாக்குதல் நடந்த போது காவல்துறை அதிகாரிகளுக்கு இடையே நடந்த உரையாடல்களை ஒளிபரப்பியதற்காக என்.டி.டி.வி இந்தியா, ஐ.பி.என் 7, ஆஜ்தக், டி.வி 9 போன்ற செய்தி தொலைக்காட்சிகளின் மீது அஃபிசியல் சீக்ரட் ஆக்ட்* (Official Secret Act) *என்ற சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. இதைப்பற்றி யாருக்காவது தெரியுமா?*

***1963**ல் என்ற* Nine Hours to Rama *படம் தடை செய்யப்பட்டது. இப்படம் மஹாத்மா காந்தியை கோட்சே கொல்வதற்கான காரணங்களை இப்படம் சொன்னது.*

*இன்னும் பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அவற்றிலெல்லாம் கருத்து சுதந்திரம் குறித்த பிரச்சனை எழவே இல்லை. ஏனெனில் இவை முஸ்லிம்களை எதிர்த்து வந்த படங்களோ விஷயங்களோ அல்லவே.*

*ஆக முஸ்லிம்களுக்கு ஓர் அளவுகோல் மற்றவர்களுக்கு ஓர் அளவுகோலா?*

*கருத்து சுதந்திரத்திற்கோர் இலக்கணம் உண்டு. பொய்களையும் அவதூறுகளையும் துவேஷங்களையும் சொல்வதற்கு உரிமை கோருவதற்கு பெயர் கருத்து சுதந்திரம் அல்ல. மாறாக உண்மைகளை உரக்க சொல்ல விடாமல் தடுக்கப்படும் போது அதை எதிர்த்து போராடுவதே கருத்து சுதந்திரம். கருத்து சுதந்திரம் மற்றவர்களை புண்படுத்த அல்ல*

மாறாக அது மற்றவர்களை பண் படுத்த. கருத்து சுதந்திரம் மக்களை பிளப்பதற்கு அல்ல மாறாக அது மக்களை சேர்ப்பதற்கு. ஆனால் தற்போது இந்த இலக்கணங்கள் மீறப்படுகின்றன. மாற்றப்படுகின்றன.

கமலஹாசன் எடுத்துள்ள விஸ்வரூபம் நாம் மேலே சொன்ன இலக்கணங்களின் கீழ் தான் வருகின்றதா?

ஆம் என்றால், இஸ்லாத்தின் விழுமியங்களை தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்தி இப்படத்தை எடுக்கும் கருத்து சுதந்திரம் அவருக்கு உண்டென்றால் அதை தடை செய்ய வேண்டும் எனச் சொல்லும் கருத்து சுதந்திரம் நமக்குண்டு.

கமலஹாசன் எடுத்துள்ள விஸ்வரூபம் நாம் மேலே சொன்ன இலக்கணங்களின் கீழ் வரவில்லை என்றால் கமலஹாசனுடையது கருத்து சுதந்திரம் அல்ல அது கருத்து தீவிரவாதம்.

## சென்சார்போர்டு சான்றிதழ்

அடுத்ததாக அனைவரும் குறிப்பிடும் ஒரு விஷயம் மத்திய அரசின் சென்சார் போர்டு சான்றிதழ் அளித்த பின் இப்படத்தை தடை கோரும் உரிமை யாருக்கும் இல்லை என்பது.

நமக்கொன்று புரியவே இல்லை. நாம் என்ன லஞ்ச லாவண்யமற்ற ஊழலற்ற நாட்டில் இருக்கின்றோமா? சென்சார் போர்டு என்ன இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டதா? அப்படிப்பட்ட அப்பழுக்கற்றவர்களை கொண்டு நடத்தப்படுகின்றதா?

மத்திய அரசின் எத்தனையோ துறைகள் ஊழல் குற்றச்சாட்டுகளில் திளைத்துள்ளன. இது குறித்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. காமன்வெல்த் போட்டிகளில் ஊழல் (சுரேஷ் கல்மாடி) , ஸ்பெக்ட்ரஸ் ஊழல் (ராசா), சவப்பெட்டி ஊழல் போன்றவை என்ன பக்கத்து நாட்டிலா நடந்தன. லஞ்சம் மற்றும் ஊழலில் உலக அளவில் நம் நாட்டிற்கு எத்தனையாவது இடம் தெரியுமா? அப்படியிருக்க இந்த சென்சார் போர்டு கொடுத்த சான்றிதழை நாம் குறைகாண கூடாதா? இதையும் நாம் பொத்தாம்போக்கில் சொல்லவில்லை. ஆதாரத்துடன் தான் சொல்கிறோம். சென்சார் போர்டு எந்தெந்த காட்சிகளை தடை செய்ய வேண்டும் என்பதற்கான விதிகளைப்பாருங்கள். விஸ்வரூபம் படத்தினை காணும் வாய்ப்பு ஏற்பட்டால் இந்த விதிகளோடு ஒப்பு நோக்குங்கள். இது தடை செய்ய வேண்டிய படமா இல்லையா என்பது உங்களுக்கே விளங்கிவிடும்.


**வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்....**

**துபாய் வாசகர்கள்**
**வைகறை வெளிச்சம் மாத இதழை**
**பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய**


**தொலைபேசி எண் : +971551390923**
**சென்னை தொடர்புக்கு : 9444329594**

**வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

| | |
|---|---|
| பின்அட்டை | ரூ 6000 |
| உள்பக்க அட்டை | ரூ 4500 |
| முழுப்பக்கம் | ரூ 1000 |
| அரைப்பக்கம் | ரூ 500 |
| விசிட்டிங்கார்டு அளவு | ரூ 250 |

# ஒன்றுபட்டதால் வென்றோம்

## இஸ்லாமிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஹனீஃபா ஹாஜியார் பேட்டி



வெவ்வேறு திசை நோக்கி நின்றிருந்த முஸ்லிம் அமைப்புகளை ஒன்றாகத் திரட்டியவர். தமிழக முஸ்லிம்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் முஸ்லிம் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றாக ஓரிடத்தில் திரண்டு ஒரே முடிவை எடுக்க முடியும் என்பதை செயல்படுத்திக் காட்டியவர், ஹனீபா ஹாஜியார் என்றழைக்கப்படும் முஹம்மது ஹனீபா அவர்கள்.

விஸ்வரூபம் திரைப்படத்துக்கு எதிராக முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வுகளை ஒருங்கிணைத்ததால் உலக முஸ்லிம்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர். அவருடன் ஒரு நேர்காணல்,

**வைகறை :-** விஸ்வரூபம் திரைப்படம் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களைச் சுமந்து வருகிறது என்பதை எப்படி அறிந்தீர்கள்.

**ஹனீஃபா :-** படத்தின் டிரைலர் (முன்னோட்டம்)-ஐப் பார்த்தோம். தொப்பி, தாடி, தொழுகை என இஸ்லாத்துடன் தொடர்புடையவை அதில் இருக்கக்கண்டோம். திரைப்படத் துறையிலுள்ள சகோதரர்கள் வழியாக முஸ்லிம்களுக்கு எதிரான படம் தான் இது என அறிந்தோம். இருப்பினும் படத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாமலே எப்படி தெரிவிக்க முடியும்? எனவே படம் பார்த்திட விரும்பினோம்.

**வைகறை :-** பார்க்க முடிந்ததா? எப்படி முயற்சித்தீர்கள்?

**ஹனீஃபா :-** திரைத்துறையினருடன் தொடர்பில் உள்ள நண்பர்கள் வழியாக நடிகர் சங்கத்தைத் தொடர்பு கொண்டு கமலை அணுகினோம், நாங்கள் விஸ்வரூபம் திரைப்படத்தைப் பார்க்க விரும்புவதாகக் கூறினோம். கமல் மறுத்துவிட்டார்.

**வைகறை :-** சந்திக்கவே மறுத்து விட்டாரா?

**ஹனீஃபா:-** படத்தை முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்புக்கு காட்ட முடியாது என்று மறுத்து விட்டார். வேண்டுமானால் சந்தித்துப் பேசிக்கொள்ளலாம் என்றார். கூட்டமைப்பு சார்பில் கமலை சந்தித்தோம்.

**வைகறை :-** எத்தனை முறை சந்தித்தீர்கள்? என்ன பேசினீர்கள்?

**ஹனீஃபா :-** இரண்டு மூன்று முறை சந்தித்தோம். பல மணி நேரங்கள் பேசினோம். நான் முஸ்லிம்களுக்கு எதிரானவனல்ல என்றார் கமல். இருதரப்புக்கும் இடையே இடைவெளியைக் குறைக்க முயன்றார் கமல்.

**வைகறை :-** படத்தைப் போட்டுக் காட்டும்படி நீங்கள் கமலிடம் கூறவில்லையா?

**ஹனீஃபா :-** கூறினோம். பலமுறை

Regd. No.313/99

جماعة العلماء لاهل السنة والجماعة ولاية تامل نادو الهند

சென்னை திருவல்லிக்கேணி வட்டார அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்

## ஜமாஅத்துல் உலமா பேரவை

நெ.44, மகுதி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

Cell: 94441 19195 Website : www.ulama.in E-mail : jamathululama@yahoo.co.in

### உலகின் நவீன பிரச்சனைகளுக்கு

# இஸ்லாமே தீர்வு

# ஜமாஅத்துல் உலமா மாநாடு

**இன்ஷா அல்லாஹ்! சென்னையில் 27, 28 ஏப்ரல் 2013**
**சனி, ஞாயிறு இரண்டு நாட்கள்**

- இளைய சமுதாயம் எழுச்சி பெற வழி காட்டுதல்கள்
- அறிவொளித் தரும் ஆன்மீக அரங்கம்
- தமிழகத்தின் தலைசிறந்த மார்க்க அறிஞர்களின் ஃபிக்ஹு ஆய்வரங்கம்
- ஆலிம்கள் சுயமுன்னேற்ற கருத்தரங்கம்
- பெருமானாரின் பன்முக ஆளுமை திறன்
- இளம் ஆலிம்களின் தனி உரைகள்
- இஸ்லாத்தின் தலைமையகம் பள்ளிவாசல்கள் பற்றிய ஆய்வுரைகள்
- சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு (பட்டிமன்றம்)
- சமூதாய சேவையாற்றும் ஆலிம்களுக்கு விருது
- பல ஆய்வுகள் அடங்கிய முன்மாதிரி மிக்க மலர் வெளியீடு
- தமிழகம் தழுவிய கட்டுரை போட்டி மற்றும் பரிசளிப்பு

---

**கட்டுரைப் போட்டி தலைப்பு:**

**1. எதிர்காலம் இஸ்லாத்திற்கே... 2. இஸ்லாமும் இதர மதத்தவர்களும்**

---

கட்டுரைகள் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
பத்து பக்கம் மிகையில்லாமல் இருக்க வேண்டும்
கட்டுரை வரவேண்டிய கடைசி தேதி 2.3.2013

**மேலதிக விபரங்களுக்கு:**
**97103 24961 / 94444 94628**

கூறினோம். முதலில் ஒரேடியாக மறுத்தவர் பின்னர் இறங்கி வந்து ரிலீஸ் தேதிக்கு முதல்நாள் போட்டுக் காட்டுவதாகக் கூறினார்.

**வைகறை :-** காட்டினாரா? பார்த்தீர்களா? எப்போது? எங்கே?

**ஹனீஃபா :-** 21.01.2013 திங்கள் கிழமை கமல்ஹாசனின் ஆழ்வார்பேட்டை அலுவலகத்தில் எங்களுக்கு விஸ்வரூபம் திரைப்படம் காட்டப்பட்டது. பார்த்தோம்.

**வைகறை :-** எப்படி இருந்தது?

**ஹனீஃபா :-** தொடக்கம் முதல் முடிவுவரை காட்சிக்குக் காட்சி முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிராகவே படம் இருந்தது. அதிர்ந்தோம். வேதனையடைந்தோம். எங்களிடம் கமல் பேச முற்பட்டார். அவரிடம் பேச மனமில்லை, மவுனமாகத் திரும்பினோம்.

**வைகறை :-** பிறகு...

**ஹனீஃபா :-** கூட்டமைப்புக்கூடியது. காவல்துறை ஆணையரை 22-ம் நேரில் சந்தித்துப் பேசி படத்தைத் தடைசெய்யும்படி கோரினோம் . திரைப்படம் வெளியானால் முஸ்லிம்களுக்கு எதிராக பெரும் வன்முறை வெடிக்கலாம். கலவரம் வரலாம். எனவே படம் வெளிவரக் கூடாது என்றோம்,

**வைகறை :-** கமிஷனர் என்ன சொன்னார்?

**ஹனீஃபா :-** அரசின் உள்துறைச் செயலாளரை சந்திக்கும்படி கூறினார். 23ம் தேதி உள்துறைச் செயலாளரைச் சந்தித்தோம். அன்று இரவே 144 விதியின் கீழ் தமிழக அரசு விஸ்வரூபம் திரைப்பட வெளியீட்டை தடுத்தது. 24ம் தேதி கமல் நீதிமன்றம் சென்றார். நாங்களும் சென்றோம். எல்லா அமைப்பினரும் எல்லாப் பணிகளுக்கும் சிறப்பாக ஒத்துழைத்தார்கள். வழக்குத் தொடர்பான பணிகளை வைகறை ஆசிரியர் குலாம் அண்ணன் அவர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தார். அவர் பணி பாராட்டுக்குரியது.

**வைகறை :-** ஜனவரி 31ம் தேதி தினமணியில் நீங்கள் துப்பாக்கி எனும் திரைப்படத்துக்கு பிரச்சனை தந்து இருபத்து ஐந்து லட்ச ரூபாய் அப்படக் குழுவிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும் 'விஸ்வரூபம்' படத்துக்குப் பிரச்சனை ஏற்படுத்தினால் ஒருகோடி கிடைக்கும் என்று அமைப்புகளுக்கு ஆசை காட்டியதுதான் பிரச்சனை பெரிதாகக் காரணம் என்று செய்தி வெளியாகியுள்ளதே... படித்தீர்களா?

**ஹனீஃபா :-** படித்தேன். இது மன்னிக்க முடியாத அபாண்டமான குற்றச்சாட்டு.

**வைகறை :-** தினமணிக்கு மறுப்பு எதுவும் தெரிவித்தீர்களா?

**ஹனீஃபா :-** என்னை மட்டுமல்ல. கூட்டமைப்பையே தினமணி இழிவு படுத்தியுள்ளது. எனவே இதை நான் கூட்டமைப்பிடம் ஒப்படைத்து விட்டேன்.

**வைகறை :-** கூட்டமைப்பு தினமணிக்கு எதிராக என்ன செய்யப் போகிறது.

**ஹனீஃபா :-** கமலிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட பதினைந்து பேர் கொண்ட குழு இதுபற்றிப் பேசி முடிவெடுக்கும்.

**வைகறை :-** விஸ்வரூபத்தை எதிர்ப்போர் பிரமைபிடித்த சிறுகுழுக்கள். தேச பக்தியற்றவர்கள். முதுகில் குத்தி விட்டார்கள் என்றெல்லாம் கூட்டமைப்பை விமர்சித்த கமல் அதற்காக மன்னிப்புக்கேட்டாரா?

**ஹனீஃபா :-** கூட்டமைப்பு மீதான விமர்சனம் குறித்து கமலிடம் கேட்டோம். அதற்கு அவர் 'முஸ்லிம்களிலும் சிலர் என்னை தரக்குறைவாக இஸ்லாமே ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு விமர்சித்தனர்' என்றார். எனவே அதை விட்டு விட்டோம்.

**வைகறை :-** விஸ்வரூபம் முழுவதுமாக தடை செய்யப்பட வேண்டும் என்று முதலில் கூறிய கூட்டமைப்பு சில காட்சிகள் நீக்கப்பட்டால் படம் வெளிவரலாம் என இறுதியில் இறங்கி விட்டது ஏன்?

**ஹனீஃபா :-** மீடியாக்களின் அழுத்தம். திரைத்துறையினரின் வேண்டுகோள். தியேட்டர்களில் நிகழ்ந்த சில வன்முறைகளில் முஸ்லிம்கள் மீது பழிபோடப்பட்டது. இவ்வாறான காரணங்களை முன் வைத்து கூட்டமைப்புக் கூடி அரசு, முஸ்லிம்களின் கூட்டமைப்பு, கமல் தரப்பு என முத்தரப்புப் பேச்சு வார்த்தைக்கு ஒப்புதல் தந்தது. சில காட்சிகளை நீக்கிவிட்டு படத்தைத் திரையிட

ஒத்துழைக்க முன் வந்தோம்.

**வைகறை :-** முழுப்படத்தின் ஒரு நிமிடக் காட்சிகூட குரைக்கப்படாமல் சர்ச்சைக்குரிய வசனங்கள் மட்டும் ஒலியின்றி வரும்படி செய்யப்பட்டிருக்கிறது. காட்சி நீக்கம் இல்லை என்று சில ஆங்கில இதழ்கள் கூறுகின்றனவே.

**ஹனீஃபா :-** இல்லை. எங்களுக்கும் கமலுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நகலைக் கூட காட்டத் தயார். சில காட்சிகளைக் குறிப்பிட்டுச் சொல்லி நீக்கும்படி கூறப்பட்டிருக்கிறது. ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. இதில் மாற்றம் இருக்காது.

**வைகறை :-** இதை வெற்றி என்று கருதுகிறீர்களா?

**ஹனீஃபா :-** ஆம் இது வெற்றிதான். ஒன்றுபட்டு இந்த வெற்றியைப் பெற்றோம்.

பேட்டி ந,தி

## வீரமங்கை டீஸ்டா செட்டல் வார்ட்-க்கு நன்றி

2002 குஜராத் இனப்படுகொலை களில் ஈடுபட்ட இந்துத்துவ தீவிரவாதிகளை தண்டிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும், எடுத்து வருகின்றார், வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட்.

இதுவரை ஏறத்தாழ 50 இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு, ஆயுள் தண்டனை வாங்கி தந்துள்ளார். இதில் ஒரு அமைச்சரும் அடங்குவார்.

இந்த டீஸ்டா செட்டல்வாட் அவர்களுக்கு, Sir Syed Memorial, Communal Harmony Award” மத நல்லிணத்திற்கான சர்செய்யித் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது,

வழங்கியவர்கள், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் வழக்கறிஞர்களின் தளம் Muslim Lawers forum of Aligarh Muslim University மூத்த உச்சநீதிமன்ற வழக்கறிஞர் காலிங்கன்ரால் வஸ் அவர்களுக்கும் இதை இணைத்தே வழங்கினார்கள்,

பெப்ருவரி 4, 2013 அன்று, அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில், டீஸ்டா செட்டல்வாட் கலந்து கொண்டு உரையாற்றினார். அதில், குஜராத்தில் கஷ்டங்களுக்கு உள்ளான முஸ்லிம்களையே கலவரக்காரர்கள் என மோடி அரசு கைது செய்துள்ளது என்ற உண்மையைக் குறிப்பிட்டார்.

அந்த உரையில், சிறுபான்மை யினருக்கு எல்லா தளங்களிலும், குறிப்பாக காவல்துறை, புலனாய்வுத் துறை இவற்றில் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும், அப்படி வழங்கினால் நிச்சயமாக நீதி கிடைக்கும். சிறுபான்மையினர் அநியாயங்களுக்கு உள்ளாகாமல் தடுக்கப்படுவார்கள் என உரையில் குறிப்பிட்டார்,

ஓய்வு பெற்ற, ஜம்மு-கஷ்மீர் மாநில தலைமை நீதிபதி, கான் அவர்கள், இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, டீஸ்டா செட்டல் வாட் அவர்களைப் பாராட்டினார்கள்,


“நீதித்துறையின் செயல்களிலும் முறைமையிலும். மாற்றங்களைக் கொண்டு வந்திடாதவரை சிறுபான்மையினருக்கு நீதி கிடைக்காது” எனக் குறிப்பிட்டார்,

மொத்த நிகழ்ச்சிக்குப் பின்னர் “கிரிமினல் வழக்குகளில் நீதிமுறையும், புலனாய்வும், குற்றப் பத்திரிகை தாக்குதலும்” என்ற தலைப்பில் விவாத அரங்கொன்றும் நடைபெற்றது,

தகவல் முஸ்லிம் மிரர் - MGM

# "துப்பாக்கி படக்குழு ஏமாற்றி விட்டது"
# "கமலிடம் முஸ்லிம் எதிர்ப்பு மனநிலை உள்ளது" -

### தடாரஹீம் பேட்டி



குண்டு வெடிப்புக்களில் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகால சிறைவாழ்க்கைக்குப் பின் விடுதலையானவர் தடாரஹீம். குற்றமற்றவர் என நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்.

சிறை வாழ்க்கை இவரது சமூகப் பணிக்குப் பரிசு. சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும் 'இந்திய தேசிய லீக்' எனும் அரசியல் கட்சியின் வழி சமுதாயப்பணிகளைச் செய்து வருகிறார். அண்மைக் காலமாக கலைத்துறை பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி ஊடகங்களின் கவனத்தையும் சமுதாயத்தின் கவனத்தையும் தன்னை நோக்கித் திருப்பியவர். அவருடன் ஒரு நேர்காணல்.

**வைகறை:-** துப்பாக்கி எனும் திரைப்படம் குறித்து நீங்கள் எழுப்பிய எதிர்க்குரல்தான் முதன்மையானது. எப்படி அறிந்தீர்கள் 'துப்பாக்கி' முஸ்லிம்களுக்கு எதிரானது என்று?

**தடாரஹீம்:-** இணைய தளத்தில் (யூடியூப்) துப்பாக்கி திரைப்படம் குறித்த தகவல்களை தற்செயலாகக் கண்ட சகோதரர் வழக்கறிஞர் ஜைனுல் ஆபிதீன் என்னிடம் அதைப் பகிர்ந்து கொண்டார். முழுப்படமும் எந்தக் கருத்தில் அமைந்துள்ளது என்று தெரியாமல் எதிர்க்க முடியாது. திரைப்படத்தைப் பார்ப்பது என்று முடிவு செய்து பார்த்தோம்.

**வைகறை:-** எங்கு எப்போது பார்த்தீர்கள்?

**தடாரஹீம்:-** துப்பாக்கி திரைப்படம் தீபாவளியன்று திரைக்கு வந்தது. எங்களுக்கு யாரும் திரைப்படத்தை தனியாகப் போட்டுக் காட்டவில்லை. திரையிடப் பட்ட முதல் நாளே வரிசையில் நின்று 'டிக்கட்' வாங்கினோம். சென்னையில் திரைப்படம் ஓடிய ஆறு தியேட்டர்களில் பனிரெண்டு பேர் படம் பார்த்தோம். ஒரு தியேட்டருக்கு இருவராக படம் பார்த்தபின் இதை எதிர்ப்பது என்று முடிவெடுத்தோம்.

***வைகறை:-*** படத்தை நீங்கள் எதிர்க்க என்ன காரணம்?

**தடாரஹீம்:-** படத்தில், முஸ்லிம்கள் அனைவரும் ஏதோ வகையில் பயங்கரவாதச் செயல்களுக்கு உதவுபவர்களாக (ஸ்லீப்பர் செல்) இருக்கிறார்கள் என்று காட்டப் படுகிறது.

சம்பளத்துக்கு வேலை செய்யும் முஸ்லிம், வாடகை வீட்டில் குடியிருக்கும் முஸ்லிம், நடுத்தர முஸ்லிம் என அனைவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் எண்ணத்தை பிறசமய மக்களிடம் இது உருவாக்கும். இது பெரிய ஆபத்தை விளைவிக்கும். எனவே இதை எதிர்ப்பது என்று முடிவெடுத்தோம்.

***வைகறை:-*** எப்படி எதிர்ப்பை காட்டினீர்கள்?

**தடாரஹீம்:-** ஆர்ப்பாட்டம் செய்திட முனைந்தோம், இதை அறிந்த காவல்துறை, அப்படத்தின் கதாநாயகன் விஜயும் அவரின் தந்தையும் ஆளுங்கட்சிக்கு வேண்டியவர் கள். எனவே அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்று எங்களை எச்சரித்தது. அதையும் மீறியே ஆர்ப்பாட்டம், நடிகர் விஜய்-யின் வீடு முற்றுகை ஆகிய போராட்டங்களை நடத்தினோம்.

***வைகறை:-*** ஆர்ப்பாட்டத்தால் ஏதாவது பலன் ஏற்பட்டதா?

**தடாரஹீம்:-** பெரும் நடிகர்கள் நடிக்கும் திரைப்படங்கள் கூட முஸ்லிம் எதிர்ப்புக் கருத்துக்களுடன் வெளிவருகிறது என்ற கருத்துக்களை பரப்ப முடிந்தது. ஊடகங்கள் எங்கள் ஆர்ப்பாட்டத்தை பெரிய செய்தியாக வெளியிட்டதால் முஸ்லிம் களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது. இஸ்லாத்துக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டு திரைப்படம் எடுப்பவர்களை யோசிக்க வைத்தது. முஸ்லிம்கள் ஏமாளிகளல்ல. சும்மா இருக்க மாட்டார்கள் என்ற கருத்துப் பரவியது. இது பலன்தான்.

***வைகறை:-*** துப்பாக்கி படக் குழுவினரிடமிருந்து பதில் ஏதும் வரவில்லையா?

**தடாரஹீம்:-** முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பினர் இதன் பின் படத் தயாரிப்பாளர் ‘தாணு’வை அணுகிப் பேசியுள்ளனர், முஸ்லிம்களை தீவிரவாதிகளாகக் காட்டும் காட்சிகளை நீக்கிவிட்டு படத்தை ஓட்ட சம்மதம் தெரிவித்துள்ளனர், எனவே படக்குழு எங்களை சந்திக்கவில்லை.

***வைகறை:-*** உங்கள் கருத்தைக் கூட்டமைப்பு கேட்கவில்லையா? நீங்கள் தானே முதலில் எதிர்த்தவர்?

**தடாரஹீம்:-** கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அமைப்புக்களிலுள்ளோர் பேசினார்கள். கூட்டமைப்பு சார்பில் பேசவில்லை.

***வைகறை:-*** நீங்கள் எதிர்க்கும் காட்சிகள் நீக்கப்பட்டு விட்டதா?

**தடாரஹீம்:-** அதற்கு முன் இன்னொரு விஷயம். திடீரென ஒரு நாள் அமைச்சர் ஜான் அவர்கள் என்னிடம் தொலைபேசியில் பேசினார். “வாங்க சந்திக்கலாம்” என்றார். காரணம் தெரியாமல் சந்திப்பது எப்படி என்று யோசித்தோம். இப்படி இரண்டு, மூன்று நாட்கள் ஓடிவிட்டன. மறுபடியும் அமைச்சரிட மிருந்து தொலைபேசி அழைப்பு. இதற்கு மேலும் சந்திப்பை தவிர்ப்பது சரியல்ல என்பதால் சந்தித்தோம்.

***வைகறை:-*** என்ன பேசினீர்கள்?

**தடாரஹீம்:-** துப்பாக்கி திரைப்படத்தில் நீங்கள் எதிர்க்கும் காட்சிகள் நீக்கப்பட்டு விட்டது. அரசு தலையிட்டு இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டது. எனவே நீங்கள் முதல்வருக்கு நன்றி செலுத்திட வாருங்கள் என்று அழைத்தார்.

***வைகறை:-*** நீங்கள் அழைப்பை ஏற்கவில்லையா?

**தடாரஹீம்:-** எல்லா முஸ்லிம்களையும் தீவிரவாதத்துக்கு உதவும் 'ஸ்லிப்பர் செல்'லாகக் காட்டும் காட்சிகள் நீக்கப்படவில்லை என்பதே உண்மை. அந்தக் காட்சிகளோடு தான் படம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதால் முதல்வரைச் சந்திப்பதைத் தவிர்த்தோம்.

**வைகறை:-** நீதிமன்றத்தில் துப்பாக்கி படத்துக்கு எதிராக வழக்குக் தொடுத்தீர்களே...

**தடாரஹீம்:-** ஆம்! முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பினர் முதல்வருக்கு நன்றி கூறி பிரச்சனை முடிந்து விட்டதாகக் கூறிவிட்டனர். ஆனால் 'துப்பாக்கி' படக்குழுவினர் முஸ்லிம் களையும் அரசையும் ஏமாற்றி விட்டனர். நீக்கப்பட்டதாகக் கூறப்பட்ட காட்சி களுடன் படம் ஓடிக் கொண்டிருந்தது.

**வைகறை:-** அதை எப்படி அறிந்தீர்கள்?

**தடாரஹீம்:-** மீண்டும் தியேட்டருக்குச் சென்று படம் பார்த்து விட்டுத் தான் இதைக் கூறுகிறேன். எனவே அரசையும் முஸ்லிம்களையும் ஒன்றாக ஏமாற்றி விட்டது துப்பாக்கி படக்குழு.

**வைகறை:-** பிரச்சனைக்குரிய காட்சிகள் நீக்கப்படவில்லையா?

**தடாரஹீம்:-** நீக்கப்பட்டால் நாங்கள் ஏன் நீதிமன்றம் செல்லப் போகிறோம்?

**வைகறை:-** என்ன வழக்கு?

**தடாரஹீம்:-** படத்தில் முஸ்லிம்கள் அனைவரையும் தீவிரவாதத்துக்கு உதவும் 'ஸ்லிப்பர்செல்' என்று காட்டப்பட்டுள்ளதை நீக்க வேண்டும். இப்படத்துக்கு 'யு' சர்ட்டிபிகேட் தந்தது தவறு. 'ஏ' சான்றிதழ் தரப்பட வேண்டும் என்பதே வழக்கு. நீதிபதிகள் படம் பார்த்தனர். முதலில் வெளியான படத்தையும் பார்த்தனர். சர்ச்சைக்குரிய காட்சிகள் நீக்கப்பட்ட பின் வெளியான படத்தையும் பார்த்தனர். நடிகர் தயாரிப்பாளர், இயக்குனர் என அனைவருக்கும் இதுபோன்ற படங்களை தயாரிக்கக்கூடாது என்று அறிவுறுத் தினார்கள்.

**வைகறை:-** சென்சார் போர்டு மேல் வழக்கு ஏதும் தொடுத்தீர்களா?

**தடாரஹீம்:-** ஆம்

**வைகறை:-** விஸ்வரூபம் படத்துக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்தீர்களே? படம் பார்த்தீர்களா?

**தடாரஹீம்:-** விஸ்வரூபம் படம் பார்க்கவில்லை. எனினும் நான் சிறையிலிருந்து போது கமல் நடித்த "உன்னைப் போல் ஒருவன்" திரைப்படம் வெளிவந்தது. அதில் சிறையிலிருக்கும் முஸ்லிம் கைதிகள் தொலைபேசி வழியாக வெளியிலிருப்பவர்களிடம் பேசி குண்டு வைப்பது போல் காட்சி இருந்ததாக பத்திரிகைகளில் பார்த்தேன்.

முஸ்லிம்களை சிறையில் அடைத்தாலும் கூட சும்மா இருக்கமாட்டார்கள் என்று காட்டியிருந்தார் கமல். கமலிடம் முஸ்லிம் எதிர்ப்பு மனநிலை இருக்கிறது என்பதற்கு அது ஒரு சான்று. மேலும் விஸ்வரூபம் குறித்து வெளியான தகவல்கள் இவற்றினடிப்படையில் ஆர்ப்பாட்டம் செய்தோம்.

**வைகறை:-** கூட்டமைப்பு 'விஸ்வரூபம்' குறித்த எதிர்க்குரலை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் தனியாக...

**தடாரஹீம்:-** கூட்டமைப்பு அரசின் முடிவுகளைத் தழுவிச் செயல்பட்டது. நாங்கள் சுயச்சார்புடன் போராடினோம்.

பேட்டியின் போது தேசியலீக் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் நசீர் அஹ்மது முத்துப்பேட்டை ஷேக்பரீத் உடனிருந்தனர்.

- பேட்டி: ந.நி.

# தி ஹிந்து தலையங்கம் விஸ்வரூபம்

வெளிவந்து கொண்டிருக்கும் ஆங்கிலப் பத்திரிகைகளில், ஓரளவுக்கு நடுவு நிலையோடு வந்து கொண்டிருக்கும் பத்திரிகை "THE HINDU" தி ஹிந்து என்ற பத்திரிகை என்பது அனைவரின் மனதிலும் நிற்கும் யதார்த்தம்.

ஆனால் இந்த யதார்த்தத்தை அடிக்கடி உலுக்கும் வகையில் இந்து பத்திரிகை தன்னுடைய போக்கை அமைத்துக் கொள்கின்றது.

"விஸ்வரூபம்", என்ற நச்சுவிதை, தி ரை ய ர ங் க ங் க ளி ல் திரையிடப்படக்கூடாது என்றொரு பெரும்போரை முஸ்லிம்கள் தொடுத்தார்கள். தமிழக அரசிடம் வைக்கப்பட்ட கோரிக்கை, உளவுத்துறையினர் தந்த தகவல்கள் இவற்றின் அடிப்படையில் படம் தடை செய்யப்பட்டது.

நீதிபதி வெங்கட்ராமன் அவர்கள் இந்த வழக்கை விசாரித்தார்கள். வழக்கறிஞர் சங்கரசுப்பு அவர்கள் முஸ்லிம்களின் சார்பில் வாதிட்டார்கள்.

நீதிபதி அவர்கள் **26** ஆம் நாள் **26.01.2013** அன்று படத்தைப் பார்த்துவிட்டு, தான் **28.01.2013** அன்று தீர்ப்பு வழங்கப் போவதாகக் கூறினார்கள்.

**28.01.2013** அன்று நடிகர் கமலஹாசன் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அவசர மனுவினை தவறானது, என அரசு வழக்கறிஞர் அழுத்தமாக வாதிக்கவே. கமலஹாசன் தரப்பில், மறுநாள் மனுவை சீர் செய்து சமர்ப்பிக்கப் போவதாக குறிப்பிட்டார்கள்.

இப்படிச் சொன்ன சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள், கமலஹாசனுக்கு சில அறிவுரைகளையும் வழங்கினார்கள். அதில்,

***தேசத்தின் ஒற்றுமை, சமூக நல்லிணக்கம், மதஉணர்வுகள், சட்டம் ஒழுங்குப் பிரச்னை***

இவற்றை கருத்தில் கொள்ளுங்கள், எல்லா தரப்பாரிடமும் பேசி ஒரு சுமூகமான முடிவுக்கு வாருங்கள், என்று கூறினார்கள்.

இதிலிருந்து நீதிபதி அவர்கள், "விஸ்வரூபம்" படத்தை வெளியிட்டால் நாட்டின் ஒற்றுமை கெடும், மத நல்லிணக்கம் பாழ்படும், சட்டம் ஒழுங்கு கெடும் என்பனவற்றைச் சுட்டிக் காட்டினார்கள்.

இதில் நமது நடுவுநிலை நாளிதழ் "தி இந்து" பத்திரிகைக்குப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. நீதிபதியை சாடியது. ஒரு தலையங்கத்தைத் தீட்டியது.

நீதிபதியிடம், நீங்கள் யார். இந்த கீதோபதேசம் செய்து கொண்டிருப்பதற்கு,

சட்டத்தைப் பாருங்கள், தடையை உடையுங்கள் படத்தைத் திரையிடுங்கள், 'Sqash the Ban, Screen the film' எனக் கோபக்கனலை வீசியது.


நடிகர் கமலின் "ராஜ்கமல் பிக்சர்ஸ்" என்ற கம்பெனிக்காக இந்து பத்திரிக்கை ஒரு பெரும் வாதம் நடத்தியது.

முடிவில், சிறு கூட்டம் முஸ்லிம் அமைப்புகள் என்ன செய்திட இயலும். அவர்களால் முடிந்ததெல்லாம் இந்த நாட்டில் அமைதியாக தங்கள் எதிர்ப்பை தெரிவிப்பதுதான், அதைத்தாண்டி அவர்கள் வருவார்கள் என்றால் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும்.

**....தொடர்ச்சி 54ம் பக்கம்**

# உன்னைப்போல் ஒருவன் பட விமர்சனம்

என்னைப்போல் ஒருவனா நீ?




நான் மனசாட்சியின் குரலுக்கு எப்போதும் செவி கொடுக்கிற ஒரு நடுத்தர வகுப்பு மனிதன். என்னால் பிறருக்கு வலியும், பிறரால் எனக்கு வலியும் ஏற்படக்கூடாது என்று விரும்பும் சாதாரண மனிதன். ஜாதி மதம் மொழி இனம் அடிப்படையில் மனிதரை மனிதர் உயர்வு தாழ்வு பார்க்கக்கூடாது என்று விரும்பும் ஒருவன்.

குற்றம் சாட்டப்பட்ட எவரும் முறையாக விசாரிக்கப்பட்டு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டும் என்றே விரும்புகிறவன். கொலைக் குற்றவாளிக்குக் கூட அதிகபட்சமாக ஆயுள் தண்டனையே தரப்படலாமே தவிர மரண தண்டனை கூடாது என்று நினைக்கிறவன். சட்டத்தை என் கையில் எடுத்துக் கொள்ள ஆசைப்படாதவன்.

நீ என்னைப் போல் ஒருவனா ? நிச்சயம் இல்லை.

எனக்கு எல்லா தீவிரவாதமும் அருவெறுப்பானது. உனக்கு அப்படியில்லை. நீ இஸ்லாமிய தீவிரவாதத்தை மட்டுமே தேர்ந்தெடுத்து எதிர்க்கிறாய்.

மேலவளவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் தலைவர் முருகேசனைக் கொன்றவர்களும் , தருமபுரியில் அப்பாவியான கல்லூரி மாணவிகளை பேருந்திலேயே வைத்து எரித்தவர்களும், மதுரையில் பத்திரிகை அலுவலகத்தைத்தாக்கி அப்பாவி ஊழியர்களைக் கொன்றவர்களும் இது போன்ற எண்ணற்ற தீவிரவாத செயல்களில் ஈடுபட்டவர்கள் பலரும் தமிழகச் சிறைகளில்தான் இருக்கிறார்கள். அவர்களை விசாரணையில்லாமல் கொல்ல வேண்டும் என்ற கோபம் உனக்கு வரவில்லை.

இஸ்லாமிய தீவிரவாதிகளையும் அவர்களுக்கு உதவி செய்ததால் ஹிந்து வெடி மருந்து வியாபாரியையும் கொல்லப் புறப்படுகிறாய்.

உனக்கு ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்து விற்றவன் மட்டும் மகாத்மா காந்தியா ? அவனை ஏன் கொல்லாமல் விட்டிருக்கிறாய்? அவனிடம் ஆர்.டி.எக்ஸ் தொடர்ந்து வாங்கியவர்கள்/ வாங்குகிறவர்கள் எல்லாரும் உன்னைப் போல தீவிரவாத எதிர்ப்பாளர்களா என்ன ?

நீ இஸ்லாமிய தீவிரவாதிகளை போலீஸ் பிடித்தால் உடனே சுட்டுக் கொன்றுவிடவேண்டும் என்று சொல்லுகிற இந்து தீவிரவாதத்தின் குரலாகவே பேசுகிறாய். அப்படிச் செய்யாமல் போலீஸ் இருப்பதில் எரிச்சலடைந்து மிரட்டல் வேலையில் ஈடுபடுகிறாய்.

எந்த மதத்து தீவிரவாதியாக இருந்தாலும் சரி, அவர்களை விசாரிக்காமல் சுட்டுக் கொன்று விடவேண்டும் என்று நினைக்கிறவர்கள் சார்பாக புறப்பட்டு வந்தவனும் அல்ல நீ.

அப்படி நினைக்கிறவர்கள் கருத்தை ஏற்பதாக இருந்தால், மசூதியை இடித்து மதக் கலவரங்களை உற்பத்தி செய்த அத்வானியையும், அரசு இயந்திரத்தின் உதவியோடு முஸ்லிம்களை கும்பல் கும்பலாகக் கொல்ல ஏற்பாடு செய்த மோடியையும் சுட்டுக் கொல்ல நீ புறப்பட்டிருப்பாய்.

ஆனால் உனக்கு செலக்டிவ் அம்னீஷியா இருக்கிறது.

நீ என்னைப் போல் ஒருவன் அல்லவே அல்ல. நான், குற்றம் சாட்டப்படுபவர் மோடியானாலும் சரி முகமது ஆனாலும் சரி முறையான நீதி விசாரணைக்கு

உட்படுத்தப்படவேண்டும் என்றே வலியுறுத்தும் சாமான்யன்.

உன்னைப் போல் ஒருவன் என்று நீ சொல்வது என்னையல்ல என்றால் யாரைப் பார்த்து அப்படிச் சொல்லியிருக்கிறாய் ?

படத்தில் இன்னொரு நாயகனாக வருகிற காவல் அதிகாரியைப் பார்த்துத்தான். அதுதான் அசல் அர்த்தம். நாங்கள்தான் எங்களைச் சொன்னதாக தப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தக் காவல் அதிகாரி யார் ? முதலமைச்சர், தலைமைச் செயலாளர் எல்லாரும் முழு அதிகாரத்தைத் தன்னிடம் கொடுத்தால்தான் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று மிரட்டுபவர் அவர். முழு அதிகாரமும் போலீசிடம் இருந்தால்தான் விசாரணையில்லாமல் சுட்டுக் கொல்லமுடியும் அல்லவா ? அவர் கருத்தும் உன் கருத்தேதான்.

கடைசியில் நீ கேட்டபடி அந்த தீவிரவாதிகளை ஒப்படைக்கிறார். மூன்று பேர் ஜீப் குண்டில் செத்ததும் நீ அவர் ஆள்தான் என்பது அவருக்குத் தெரிந்துவிடுகிறது.

நீ எந்த இடத்திலும் குண்டு வைக்கவில்லை அது வெற்று மிரட்டல்தான் என்று பின்னர் போனில் சொல்லும்போது அது தனக்கு முன்பே தெரியும் என்கிறார். அப்படி தெரியுமென்றால், நான்காவது தீவிரவாதியை சுட்டுக் கொல்லும்படி அவர் சொல்லியிருக்கத் தேவையே இல்லையே . உன் மிரட்டலை சாக்காக வைத்து அவர் அந்த தீவிரவாதிகளை விசாரணை இல்லாமல் கொல்லும் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்கிறார் என்பதுதான் உண்மை.

கடைசியில் நீ இருக்கும் இடத்தையும் உன்னையும் கண்டுபிடித்தபிறகு உன்னை சுட்டுக் கொல்லாமல் கை குலுக்கி வழியனுப்பி வைக்கிறார். ஏன் ? நீ அவரைப் போல் ஒருவன் என்பதனால்தான்.

காவல் துறை என்கவுண்ட்டர் என்ற பெயரில் விசாரணை இல்லாமல் தான் கொல்ல விரும்புபவர்களைக் கொல்லும் வசதிக்காக, உன்னைப் போன்றவர்களை மறைமுகமாக ஆதரிக்கும் என்பதுதான் உன் படத்திலிருந்து எனக்குக் கிடைக்கும் முக்கியச் செய்தி.

நீ நிச்சயம் என்னைப் போல் ஒருவன் அல்ல. நான் நிச்சயம் உன்னைப் போல் ஒருவனாக இருக்க விரும்பவே மாட்டேன்.

இந்தப் படம் வெற்றிகரமாக ஓடுகிறது என்று சொல்கிறார்கள். மகிழ்ச்சியாகவும் கவலையாகவும் இருக்கிறது. குத்துப்பாட்டு, ஆக்ஷன், ஆபாசம், செண்ட்டிமெண்ட் மசாலாக்கள் இல்லாமல் ஒரு படம் ஆதரிக்கப்படுவது மகிழ்ச்சிதான்.

ஆனால் இந்தப் படமும் வணிக ஃபார்முலாவுக்குள்ளே தான் இருக்கிறது என்பதும் வித்தியாசமான படம் என்ற முகமூடிக்குள் இருந்துகொண்டு ஆபத்தான கருத்துகளைப் பரப்புகிறது என்பதும் பெரும் கவலையை ஏற்படுத்துகிறது.

சென்சார் விதிகளுக்கு விரோதமான முறையில் டி.வி. பப்பெட் ஷோ வழியே பகிரங்கமான பாகிஸ்தான் எதிர்ப்பு, முஸ்லிம்களை கீழ்த்தரமாகக் கிண்டல் செய்யும் வசனங்கள்,வேலைக்குச் செல்லும் திறமையும் உறுதியும் உடைய நவீனப் பெண்ணை வேண்டுமென்றே சிகரெட் பிடிப்பவளாகக் காட்டும் வக்கிரம், கம்ப்யூட்டர் மேதை என்றால் அவன் பார்ப்பனனாகத்தான் இருப்பான் என்று குறிப்பாக உணர்த்தும் அபிவாதயே வசனங்களின் ஜாதியம் போன்றவை ஒரிஜினல் ஹிந்தியில் இல்லாதவை. கமல் தமிழுக்கு அளித்திருக்கும் 'கொடைகள்' இவை.

பத்து பேரை ஒரே ஆள் தனியாக அடித்து வீழ்த்தும் ஹீரோவும் உன்னைப் போல் ஒருவன் ஹீரோவும் ஒருவன்தான். ஆர்.டி.எக்ஸ் குண்டுகள் வைப்பது முதல் க்ளைமேக்சில் குண்டு வைத்த ஜீப்பை ஒரு பொட்டல் காட்டில் நிறுத்தி வைப்பதுவரை மொட்டை மாடியில் தனியாக இருந்துகொண்டே சாதிப்பது எல்லாம் விஜய் பட ஃபேண்ட்டசியின் இன்னொரு வடிவம்தான்.

மாற்று சினிமா இது இல்லை. இதுவும் இன்னொரு ஏமாற்று சினிமாதான்.

**-ஞானி**

# குழந்தைகளைப் பாதுகாப்போம்! அடுத்துக் கெடுப்பவர்களிடமிருந்து...



ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் நாளை குழந்தைகளைக் கொடுமைப்படுத்துவதற்கு எதிரான நாளாக அறிவித்துள்ளன உலகநாடுகள்.

இந்த ஆண்டும் நவம்பர் 19ஆம் நாளை அப்படியே அறிவித்துள்ளன உலக நாடுகள்.

இப்படி ஆண்டில் ஒரு நாளை அறிவிப்பதால் என்ன பயன்?

இந்தக் கேள்விக்கு இன்றளவும் தெளிவான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் ஒரு விதத்தில் இந்த நாள் பயன்படுகின்றது. அது,

குழந்தைகளுக்கெதிராக நடக்கும் கொடுமைகளைப் பகிரங்கப்படுத்துகின்றது.

இப்படிக் குழந்தைகளுக்கெதிராக நடக்கும் கொடுமைகளைப் பகிரங்கப்படுத்துவதால் மக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்படுகின்றது அவ்வளவு தான்.

ஆனால் 2003 நவம்பர் 19ஆம் நாள் கிடைத்த தகவல்கள் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துவதாய் அமைந்தன.

நமது குழந்தைகள் சிறுவயதிலேயே பாலியல் வன்முறைகளுக்கு ஆட்படுத்தப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு பெண் குழந்தை கற்பழிக்கப் படுகின்றது.

பத்து குழந்தைகளில் ஒன்று பாலியல் வன்முறைக்கு பலியாகின்றது. இத்தனையும் இந்தியாவிலேயே நடைபெறுகின்றது. பாலியல் வன்முறை என்பது குழந்தைகளின் மறைவிடங்களை சில காம வெறியர்கள் தங்கள் வெறிக்குப் பயன்படுத்துவது. இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளுள் பாதிபேர் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

உலகிலுள்ள இதர நாடுகளைவிட இந்தியா இந்த விஷயத்தில் முன்னே நிற்கின்றது.

இந்த தகவலை 'லூயிஸ்து இன்கல்பிரித்' என்பவர் தருகின்றார்.

இவர் 'பாலியல் வன்முறைகளுக்குள்ளான குழந்தைகளின் சிகிச்சை மையம்' என்பதை நிறுவியவர்.(Centre for the Prevention and Treatment of Child Sexual Abuse - CSA).

நாம் மேலே சொன்ன புள்ளிவிவரங்கள் அல்லது கணக்குகள் மிகவும் குறைவானவை தான். உண்மையான எண்ணிக்கை மிகவும் அதிகம். காரணம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் தங்களுக்கேற்பட்ட அவமானத்தை வெளியே சொல்வதில்லை. அப்படியே குழந்தைகள் சொன்னாலும் பெற்றோர்கள் குடும்பத்தின் தன்மானங்கருதி அதனை வெளியே சொல்வதில்லை. நிச்சயமாக அவர்கள் அவற்றை வழக்குகளாக மாற்றுவதில்லை.

## குழந்தைகளைக் கெடுப்பவர்கள் யார்?

இந்த பிஞ்சுகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குபவர்கள், பல நேரங்களில் அவர்களின் உறவினர்கள். இந்த உறவினர்களோடு குழந்தைகள் விளையாடும்போது அவர்களை யாரும் சந்தேகப்படமாட்டார்கள். அப்படியே குழந்தைகள் வெளியே சொன்னாலும் பெற்றோர்கள், தெரியாமல் கைபட்டிருக்கும். அதை ஏன் பெரிதுபடுத்துகின்றாய்? என்று உதறித்தள்ளிவிடுவார்கள். அதேபோல் சில நேரங்களில் அண்டை அயலார்கள் - கண்ணியமானவர்கள் என மதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆகியோர்.

நமது இந்தியாவில் ஒரு நிறுவனம். அதன் பெயர் 'இந்திய தன்னார்வ ஆரோக்கியக் கழகம்' (Voluntary Health Association of India) இந்த நிறுவனம் ஒரு கணக்கை சொல்கிறது. அது,

குழந்தைகளை வன்முறைக்கு உள்ளாக்குகின்றவர்களில் 85 சதவீதத்தினர் அந்தக் குடும்பத்தோடு நெருங்கி பழகுபவர்களே!

இவர்கள், அதாவது குடும்பத்தோடு நெருங்கி பழகுபவர்கள் இந்தப் பாதகத்தை எப்படிச் செய்கின்றார்கள் என்பதை ஒரு உண்மைச் சம்பவத்தைக் கொண்டு இப்படி விளக்கலாம்.

நமது பக்கத்து மாநிலம் ஆந்திரா.

அதில் அழகியதொரு நகரம் விஜயவாடா. இங்கே காந்திநகர் என்றொரு குடியிருப்பு.

இங்கே 'அங்கிள் இரமணன்' என்றால் குடியிருப்பில் அனைவருக்கும் தெரியும். வயது 35.

இவர் அந்தப் பகுதியிலுள்ள பெயரும் புகழும் பெற்ற ஒரு பள்ளிக்கூடத்தின் ஆசிரியர். பள்ளியில் பாடஞ்சொல்லித் தருவதிலும் பள்ளியின் முன்னேற்றத்திற்கு உழைப்பதிலும் தன்னிகரற்று விளங்குபவர். அவரது குணத்தை யாரும் குறை சொல்லத் துணியமாட்டார்கள்.

குடியிருப்பில் வாழ்கின்றவர்களுக்கும் உதவி செய்து வாழ்பவர்.

படிப்பில் பின் தங்கி நிற்கும் குழந்தைகளுக்கும் உதவி செய்வார்.இலவசமாக 'டியூசன்' பாடம் சொல்லி தருபவர்.

தன் மனைவிக்கும் நல்ல கணவராக நடந்து கொண்டார். அவருக்கு இரண்டு குழந்தைகள். இந்தக் குழந்தைகளுக்கும் சிறந்த அப்பாவாக நடந்துக் கொண்டார்.

இவரிடம் இலவசப்பாடம் பயின்ற குழந்தைகளில் ஒருத்தி தான் 'பிரீத்தி'.

பிரீத்தி தன் பெற்றோர்களிடம் 'அங்கிள் இரமணன் அடிக்கடி படுக்கச் சொல்கின்றார்' என்று புகார் கூறியபோது பெற்றோர்கள் "உனக்கென்ன பைத்தியமா? உதை வாங்குவாய், இப்படியெல்லாம் பேசினால்" என அதட்டி வாயை அடைத்து விட்டார்கள்.

ஒரு வாரம் கடந்தது...

பிரீத்தி கட்டுப்படுத்த முடியாத பெண்ணாக அழுதுகொண்டே இருந்தாள். இந்த முறை பெற்றோர்களால் அதட்டி அடக்க முடியவில்லை பிரீத்தியை.

அவர்கள் அவளின் குறையை அக்கறையோடு கேட்டார்கள். முன்னர் சொன்ன அதே புகாரைத்தான் அவள் சொன்னாள்.

“இன்றும் வரச்சொல்லி இருக்கின்றார்” என்றாள். அன்று பெற்றோர்கள் அவளைப் போகச் சொல்லிவிட்டு மறைந்திருந்து பார்த்தார்கள். வல்லவர், நல்லவர், பெயர் பெற்றவர், அன்புள்ளம் கொண்ட ஆசிரியர் இரமணன் சிக்கிக் கொண்டார்.

இப்படி அடுத்துக் கெடுப்பவர்களால் தாம் குழந்தைகள் கெடுக்கப்படுகிறார்கள்.

இப்படிப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குபடுவர்கள் பெண் குழந்தைகள் மட்டும் தான் என்றில்லை. ஆண் குழந்தைகளும் இதுபோல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

அங்கே பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்றவர்கள் ஆசிரியர்கள், அவர்களை கால்பந்து, கிரிக்கெட் (கோச்சுகள்) ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி தருபவர்கள் எனப் பட்டியல் நீளுகின்றது.

நம் குழந்தைகளை அடுத்தவர்களிடம் பழக விடக்கூடாது என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடவேண்டாம். தாராளமாகப் பழகவிடுவோம். அதே நேரத்தில் கவனமாகவும் இருப்போம்.

குழந்தைகளை அடுத்துவருபவர்கள் கெடுத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகுகின்றார்கள் என்பதை நாமாகவே அறிந்திட வேண்டும். அந்த அநியாயத்திற்கு உட்பட்ட குழந்தைகளை நாம் எப்படி கண்டுபிடிப்பது?

## இதோ சில சமிக்ஞைகள்:

குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகுகின்றார்கள் என்பதை கண்டுபிடிப்பது எப்படி?

1. அடிக்கடி படுக்கையில் சிறுநீர் கழித்து விடுவார்கள்.

2. தொடர்ந்து வயிற்றுப்போக்கு ஏற்படுவது.

3. படுக்கையிலேயே மலம் கழித்தல்.

4. மனநோயாளி போல் எந்த விஷயத்தை எடுத்தாலும் எரிந்து விழுவது.

5. காரணமில்லாமல் கோபப்படுவது.

6. எடுத்தேன், கவிழ்த்தேன் என ஒரு ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன் நடந்துக் கொள்வது.

7. மறைவான பகுதிகளில் வீக்கம்.

8. மலக்குடலிலிருந்து இரத்தம் கசிதல்.

9. மறைவான இடங்களிலிருந்து இரத்தம் வெளிப்படுதல்.

10. பள்ளியில் நன்றாகப் படித்துக்கொண்டிருந்த குழந்தைகளிடம் திடீரென ஆர்வக்குறைவு ஏற்படல்.

11. விரக்தி வயப்படல்.

12. குழந்தை தன்னுடைய மறைவிடங்களின் மேல் அதிகமாகக் கவனம் செலுத்துவது.

13. வாலிப பருவமுடையவர்களைக் கண்டால் ஒதுங்கி ஓடுவது.

14. அடிக்கடி அச்சப்படுவது, ஒரு வித நடுக்கம் ஏற்படுவது.

15. தற்கொலை முயற்சிகளை செய்வது.

ஒருமுறை ஒரு குழந்தை பாலியல் வன்முறைக்கு ஆளாகிவிட்டால் அந்த பாதிப்பு அந்தக் குழந்தையின் வாழ்நாள் முழுவதும் அதன் நெஞ்சை விட்டு அகலாது. அடிக்கடி நடுக்கம் போன்ற உடல் பாதிப்புக்களுக்கு ஆளாகும்.

இத்தனைக்கும் அந்தக் குழந்தை எந்தத் தவறும் செய்ததில்லை. சமுதாயம் அழுகிப்போனதற்கு அந்தக் குழந்தை தண்டனையை அனுபவிக்கின்றது!

## தீர்வும், தண்டனையும்

குழந்தைகளைப் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்குகின்றவர்களை தண்டிப்பதற்கு சட்டத்தில் எதுவுமில்லை. உண்மையைச் சொன்னால் அதற்கான சட்டங்கள் இன்னும் இயற்றப்படவில்லை.

இந்தக் குழந்தைகளைக் கற்பழிப்பு குற்றங்களாக மட்டுமே பதிவு செய்து விசாரிக்கின்றார்கள்.

சாதாரணமாகக் கற்பழிப்புச் சட்டங்களின் கீழ் வழக்குகள் விசாரிக்கப்படும்போது

பாதிக்கப்பட்டவர்களை மூன்று விதமாக சித்திரவதைகளுக்கு ஆளாக்குகின்றார்கள்.

1. அவர்கள் பலர் முன் தாங்கள் எப்படியெல்லாம் கற்பழிக்கப்பட்டார்கள் என்பதை விளக்கிச் சொல்லிட வேண்டும்.

2. பின்னர் கடுமையான மருத்துவ பரிசோதனைகளுக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ள வேண்டும்.

3. நீதிமன்றத்தில் பல நெருடலான, மானத்தை வாங்கும் கேள்விகளுக்கு ஆளாகிவிடவேண்டும்.

## இஸ்லாம் காட்டும் பாதை

இப்படிக் குழந்தைகள் பல்வேறு சித்ரவதைகளுக்கு ஆளாகிவிடும்போது ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் அது.

இதற்கு அந்தக் குழந்தைகள் செய்த தவறு எதுவுமில்லை.

இந்தப் பிஞ்சு வயதிலேயே அவர்கள் தாங்கள் செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்க வேண்டுமா?

இதனால் வருமுன் காப்பதே நலம்!

குழந்தைகள் குறிப்பாகப் பெண் குழந்தைகளை சற்று முன்னெச்ச ரிக்கையுடனேயே வளர்க்க வேண்டும்.

குழந்தைகளை இந்த விஷயங்களில் எந்த அளவுக்கு கவனமாக வளர்க்க வேண்டும் என்பதை இஸ்லாம் இப்படி வலியுறுத்துகின்றது:

குழந்தை ஒன்பது வயதானவுடன் அவள் அன்னிய ஆடவர்களைப் பார்ப்பதும், பழகுவதும் கூடாது. அன்னிய ஆடவர்கள் என்பதில் அவளது தந்தை சகோதரர்கள் நீங்கலாக அனைவரும் அடங்குவார்கள்.

அவர்கள் ஆசிரியர்களாக இருக்கலாம் அல்லது அது போன்ற மற்றவர்களாகவும் இருக்கலாம்.

பத்து வயது நிரம்பிவிட்டால் சகோதரர்களையும் சகோதரிகளையும் கூட ஒன்றாய் தூங்க (ஒரே அறையில்) அனுமதிக்கக் கூடாது என்கின்றது இஸ்லாம்.

இங்கே ஒரு பெண் தனியாகச் சென்று ஒரு ஆண் ஆசிரியரிடம் பாடம் பயிலுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஒரு குழந்தை விபரமறிந்த குழந்தையாக மாறிடும்போது அது சாதாரணமாக மறைக்கும் பகுதிகளைப் பார்க்க அனுமதிக்கக்கூடாது.

அது குழந்தையின் அம்மா, அக்கா போன்ற நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் சரியே.

குழந்தைகள் எதிர் பாலரை அடிக்கடி சந்திக்க அனுமதிக்க வேண்டாம். அவர்கள் ஒரே கல்விக்கூடத்தில் படிப்பவர்களாக இருந்தாலும் சரியே.

ஒன்பது வயதை அடைந்ததும் அவள் பெண்மை குறித்து அறிந்திட வேண்டியவற்றை கற்றுக் கொடுத்து விடுங்கள்.

இறைவனைப் பற்றிய அச்சத்தை முன்நிறுத்தி, இஸ்லாம் கற்றுத்தரும் கட்டுப்பாடுகளை கடைபிடிப்பதுதான், நாகரீகம் என்ற பெயரில் காட்டுமிராண்டிகளாக மாறிவிட்ட சமுதாயத்திடமிருந்தும் பாலியல் வன்முறைகளிலிருந்தும் விடுபட இருக்கும் ஒரே வழி.

இவர்களைத் தண்டிக்க சட்டங்கள் இல்லை எனும்போது இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களே ஒரே வழி.

குழந்தைகளுக்கே பாதுகாப்பில்லை. 50 சதவிகித குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் என்கிறபோது, இங்கே பெண்கள் பர்தா போடக்கூடாது என கூப்பாடு போடுகிறவர்களைக் கண்டால் நம்மால் சிரிக்காமல் இருக்க முடிவதில்லை.

Source (1) Indian Express, November 9, 2003.

(2) தப்ரானி நபிமொழித் தொகுப்பு

(3) Bringing-Up of Children in Islam

- By MGM.

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# இறை வேதமும் மனித மனமும்

ரஹ்மத் ராஜகுமாரன்
9443446903

Scientific Pc Edge narlikar எழுதிய புத்தகத்தில் விஞ்ஞானத்தின் விண்ணைமுட்டும் விந்தைகளையெல்லாம் தொகுத்து பக்கத்திற்கு பக்கம் சுவைபட எழுதியுள்ளார்.

Ascent of map Bronokiskt எழுதிய புத்தகத்தில் அதிகால மனிதர்கள் தொட்டு மனித குல பூர்வாசிமை வரலாறு பற்றி புத்தகம் முழுவதும் எழுதியுள்ளார்.

அதே மாதிரி Wonders of the Ancient World EcyParles walikar, The Big Book of Stars & [Planets Robt] kerrod Life of the Oceans Peather angel இத்தனை நூலாசிரியர்களும் தத்தம் தலைப்பில் புத்தகம் முழுவதும் தாங்கள் எடுத்துக் கொண்ட விஷயத்தை பல கோணங்களில் அலசி ஆராய்கின்றார்கள். இது இருக்கட்டும்..

இந்த புத்தங்களையெல்லாம் படித்த மூடோடு குர்ஆன் எடுத்து படிப்போம். அவன் தான் இரு கடல்களையும் ஒன்று சேர்ந்திருக்கின்றான். ஒன்று இன்பமும் மதுரமான தண்ணீர் மற்றொன்று உப்பும் கசப்புமான தண்ணீர். இவ்விரண்டுக்கும் இடையில் திரையையும் மீற முடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தி இருக்கின்றான். அல்குர்ஆன் : 25:53

இதற்கு அடுத்த வசனம்

அவன்தான் ஒரு துளி தண்ணீரிலிருந்து மனிதனை உற்பத்தி செய்கின்றான். பின்னர் அவனுக்குச் சந்ததிகளையும் சம்பந்திகளையும் ஆக்குகின்றான். குர்ஆன் 25: 54

இன்னொரு வசனத்தில்:

அல்லாஹ்தான் உங்களுக்கு பூமியை நீங்கள் வசித்திருக்கும் இடமாகவும் வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து உங்களைச் சித்தரித்து அழகான கோலத்திலும் உங்களை அமைத்தான். அன்றி அவனே உங்களுக்கு மேலான உணவுகளையும் அளிக்கின்றான். குர்ஆன் 40: 64

மேற்கண்ட வசனங்களில் முதல் இருவசனங்கள் வெவ்வேறு இருகடல்கள், இருகடலின் தண்ணீரின் தன்மைகள், இருகடலும் சேரமுடியாத திரையும் தடையும் பற்றி கூறிய இறைவன் அடுத்த வசனத்தில் மனிதனின் ஒரு துளி விந்தின் விந்தையைப் பற்றியும் பெண்ணின் இந்திரியத்துடன் இந்த விந்து சேர்த்து அவனது சந்ததி சம்பந்திகள், அந்த ஒரு துளி விந்தால் உருவாக்குவதைப் பற்றி பேசுகிறான். அடுத்து ஒரே வசனத்தில் மனிதர் வசிக்கத்தக்க பூமி, பாதுகாப்பான வானம், மனிதர்களின் அழகான கோலம், அவர்களுக்கு மேலான உணவு, இப்படி பூமி வானம் கோலம் உணவு என்று அடுத்தடுத்து வெவ்வேறு விஷயங்களைப் பற்றி உடனுக்குடன் தெரிவிக்கின்றான்.

குர்ஆன் முழுவதும் உள்ள ஒவ்வொரு வசனங்களும் அல்லது ஒரே வசனத்தில் பல்வேறு பட்ட மற்றும் மாறுபட்ட செய்திகளை வரிக்குவரி தெரிவிக்கிறது. ஒரு குறிப்பிட்ட தகவல்களை ஓரிரு வசனத்தில் கூறிவிட்டு அடுத்ததாக இன்னொரு தகவலுக்கு மின்னல் வேகத்தில் பறக்கிறது குர்ஆன் வேதம். இது ஏன்...?

மனிதர்கள் எழுதும் புத்தங்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட தலைப்பிலேயே தகவல்களைச் சேர்க்க திருக்குர்ஆன் வெவ்வேறு விஷயங்களை கூறி மின்னல் வேகத்தில் தாவுவது ஏன்?

குர்ஆனின் இந்த வசன அமைப்புகளைப் பற்றி நான் பல காலமாக சிந்தித்தது உண்டு. மேற்சொன்ன கேள்விகளை சற்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இக்கட்டுரையின் நிறைவு தளத்தில் இன்ஷா அல்லாஹ் பதில் தருகின்றேன்.

நம் மூளையின் செயல்கள் 90 நிமிட சுழற்சியில் இயங்குகின்றன. அதாவது 90 நிமிடத்திற்கு ஒரு முறை மூடு மாறுகிறோம் என்கிறார்கள்.

தினப்படி நம் நாடித்துடிப்பு, ரத்த அழுத்தம், ரத்தில் சர்க்கரை, உடல் உஷ்ணம், சுரப்பிகள், எண்ணம் அளவுகள் இவ்வாறு 40 செயல்பாடுகள் தாம் இருப்பது போல் தோன்றுகின்றது. நமக்குள் ஏதோ ஓர் ஒலி அலாரம் கடிகாரம் தக்க நேரத்துக்கு விதவிதமான சுவிட்சுகளை அனைத்து ஏற்றுகிறது. இந்தச் செயல்பாட்டை உடற்கூறு கடிகாரம் Biological clock என்கிறார்கள்.

எழுத்தாளர் சுஜாதா ஒரு பேட்டியின் போது கேட்கப்பட்ட கேள்வி ஒன்றில் ஒரு நாளைக்கு தாங்கள் எவ்வளவு நேரம் படிக்கின்றீர்கள்?

நான் எந்த ஒரு சப்ஜெக்ட்டையும் தொடர்ந்து படிப்பதில்லை. தொடர்ந்து அப்படியே ஒரே சப்ஜெட்டைப் படித்தால் மூளை உடனே சோர்ந்து விடுகின்றது. எனவே என்னுடைய மேஜையில் இந்தியன் பினல் கோடு என்ற சட்டப் புத்தகமும், நாட்டுபுறப்பாடல், ஜெனரல் மெடிசன், தொல்காப்பியம் போன்ற பல்வேறு மாறுபட்ட தகவல்களை தரக்கூடிய புத்தங்கள் இருக்கும். முதல் அரைமணி நேரத்திற்கு சட்டம், அடுத்த அரை மணி நேரத்திற்கு நாட்டுப்புறப்பாடல், அதன் பின் மெடிசன், தொல்காப்பியம் போன்ற நூற்களை படிப்பேன். இப்படி படிக்கும் போது மூளை சோர்வடையாமல் புதுப்புது தகவல்களால் மூளை தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டு உற்சாகமடைகின்றது. மேலும் தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதால் மூளையின் வெவ்வேறு தளங்களில் தகவல்கள் பதிவாகிறது. இதனால் தகவல்களை ஞாபகப்படுத்திப் பார்ப்பது எளிதாகிறது என்று சுஜாதா பேட்டி அளித்தார்.

இதனால் தான் வகுப்பறையில் ஒவ்வொரு நாற்பது நிமிடத்திற்கு ஒரு பாடம் என்று வகுக்கப்பட்டுள்ளதோ.

ஒரே தகவல்களை தொடர்ந்து படிக்கும் போது நமது மூளை சோர்வடைவது உண்மைதான். வளைவுகள் இல்லாத நீண்ட நெடிய சாலைகளில் தான் விபத்துக்கள் அதிகமாக நடைபெறுகிறது. காரணம் டிரைவரின் மூளை ஒரே தகவல்களால் சோர்ந்து விடுகிறது.

அதே மாதிரி தொழிற்சாலையில் ஒரு இளம் பெண்ணை ஒருநாளைக்கு எட்டுமணி நேரம் ஒரு விளக்கையே பார்த்துக் கொண்டு இரு. விளக்கு எரியும் போதெல்லாம் பெல்டில் வரும் பொருளைப் பொறுக்கி எடு என்று பணித்தால் அந்தப்பெண் நிச்சயமாக அரை மணி நேரத்திற்குள் தவறிழைத்து விடுகிறாள்.

காரணம் ஒரே தகவல் நீண்ட நேரம். இதனால் மூளைச் சோர்வு. சங்க கால இலக்கிய கோர்வை என்ற சின்ன குட்டி தலையணை புத்தகத்தை படிக்கும் போது நாலாவது பக்கத்திலே நான் படுத்து உறங்கி விட்டேன். காரணம் மூளைச் சோர்வு.

இந்த மாதிரி சோர்வடைவதை டிஹ்யூமனைசேஷன் Dehumanistion என்கிறார்கள்.

இதனால் தான் குர்ஆன் முழுவதும் ஒவ்வொரு வசனங்களும் அல்லாது ஒரே வசனத்தில் பல்வேறு பட்ட மற்றும் மாறுபட்ட செய்திகளை மின்னல் வேகத்தில் வரிக்கு வரி தெரிவிப்பதால் மூளை சோர்வடைவதில்லை.

மாறுபட்ட செய்திகளால் மூளையின் திசுக்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது. மேலும் குர்ஆனின் தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதால் மூளையின் வெவ்வேறு தளங்களில் தகவல்கள் பதிவாகிறது. இதனால் தகவல்களை ஞாபகப்படுத்திப் பார்ப்பது எளிதாகிறது.

உலகில் பெரிய பெரிய அறிஞர்கள் எழுதிய புத்தங்களிலெல்லாம் எடுத்துக் கொண்ட ஒரே ஒரு விஷயத்தையே பல கோணங்களில் ஆய்ந்து எழுதியுள்ளனர்.

ஆனால் வல்லரஹ்மான் இறக்கியருளிய இப்புனித குர்ஆன் பலப்பல தகவல்கள் பலதரப்பட்ட கோணத்தில் சொல்லி மூளையும் சோர்வடையாமல் அதே நேரத்தில் ஞாபகப்படுத்த எளிதாக அமைத்திருப்பதிலும் இது இறைவனுடைய சொல்அன்றி வேறில்லை என்பதை நிரூபிக்கின்றது.

மேலும் குர்ஆன் வசனத்திலுள்ள ஒரு தகவல் அதே வசனத்திலுள்ள வேறு பட்ட மற்றொரு தகவல் இரண்டுக்கும் இடையே உள்ளே நம் சிந்தனையின் வேகம் மிக மிக அதிகமாகிறது.

இப்பிரபஞ்ச வெளியில் அதிக வேகம் கொண்டது ஒளியும் புவி ஈர்ப்பு விசையும் தான். இந்த இரண்டும் ஒரு நொடிப்பொழுதில் மூன்று லட்சம் கிலோ மீட்டர் வரை பாய்ந்தோடுகிறது என்பதாக விஞ்ஞானம் நிரூபித்து இருக்கின்றது.

குர்ஆனின் ஒரே வசனத்திலுள்ள இரு மாறுபட்ட தகவல்களும் இந்தப் பிரபஞ்ச வெளியில் வேகம் மாறாத மிக அதிகமாக வேகத்தில் இயங்கும் ஒளி மாதிரி புவிஈர்ப்பு மாதிரியான வேகத்தில்தான் குர்ஆனில் அருளப்பட்டிருக்கிறதாக எனக்குப்படுகிறது.

வல்லரஹ்மான் தான் நமக்கு தெரிவிக்க வேண்டும் நமக்கு இறங்கிய குர்ஆனைப்பற்றி.

- தொடரும் இன்ஷா அல்லாஹ்

******


# வைகறை வெளிச்சம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்


***....45ம் பக்க தொடர்ச்சி***

இப்படி ஒரு தலையங்கத்திற்குப் பின் அன்றைய தினம், நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்குப் பிறக்கவில்லை. காரணம் அண்ணாவின் சொற்களில் சொன்னால் மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு, விஸ்வரூபம் எடுத்து விட்டார்.

நமது இந்த உணர்வை, அன்றுகாலையில் நாம் வழக்கறிஞர், சங்கரசுப்பு அவர்களைச் சந்தித்தவுடன் அவர்கள், இதைச் சொன்னார்கள். நீதிமன்றத்திலும், இதை சொன்னார்கள். வேறொரு வழக்கில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் (Senior Counsel) MGR காந்தி அவர்களும் இதனை சொன்னார்கள். இளம் வழக்கறிஞர் இராஜாமுஹம்மத் அவர்களும், இதனை நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். நீதிபதி அவர்கள், பத்திரிகையின் தலையங்கங்கள் தம்மைப் பாதிக்காது என்றார்.

ஆனால் இறுதியில் அதுவே தீர்ப்பாக - தடையை நீக்கி ஆணையாக இரவு 10.30 மணிக்கு வந்தது. பத்திரிகைகள் - ஊடகங்கள் பச்சையாக நீதிமன்ற ஆணைகளைப் பாதிக்கும் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

பிரிதோர் பெரிய எடுத்துக்காட்டை, வைகறை வெளிச்சம் ஜனவரி இதழில் சுட்டிக்காட்டி இருந்தோம். - எம்ஜிஎம்.

# நக்கீரனுக்கு மறுப்பு

கடந்த 9-11 நக்கீரன் இதழில் "மீண்டாள் மலாலா" எனும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டு இருந்தீர்கள், அதில் மலாலாவை சுட்டது தாலிபன்கள் என்றும், தாலிபன்கள் பெண்கள் கல்விக்கு எதிரானவர்கள் என்றும் எழுதியிருக்கிறீர்கள். மேலும் ஸ்வாட் பள்ளத்தாக்கில் தாலிபன்களின் ஆட்சி நடைபெறு வதாகவும், அங்கு பெண்களுக்கு கல்வி மறுக்கப்படுவதாகவும் ஏன் தடைசெய்யப் பட்டதாகவும் எழுதியுள்ளீர்கள்.

அங்கு பெண்கல்வி தடை செய்யப்பட்டு இருந்தால் அவர் எப்படி 15 வயது வரைக் கல்வி கற்று இருப்பார். அவருடன் மற்ற பெண்களும் எப்படி கற்றிருப்பார்கள் என்ற கேள்வி எழும் என்பதைக் கூட உணராமல் தாலிபன்களின் மீது பழி போடுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளீர்கள், தாலிபன்களுக்கு பயங்கரவாத ஆக்கிரமிப்பு அமெரிக்கப் படைக்கு எதிராக போர் செய்ய நேரம் போதாதபோது மலாலாவைத் தாக்க அவர்களுக்கு ஏது நேரம்?

இவ்வுலகத்தில் எந்த ஏற்றத் தாழ்வுமின்றி அனைவரையும் சரிசமமாக நடத்தும் மற்றும் அனைவரின் பொருளாதாரம் மற்றுமுள்ள அடிப்படைப் தேவைகளை நிறைவேற்றும் இஸ்லாமிய ஆட்சி அமைய தாலிபன்கள் போராடி வருகின்றனர். இஸ்லாமிய ஆட்சியில் அனைவரின் கருத்துக்கும் சுதந்திரம் உண்டு. உலகிலேயே மற்ற மதத்தினரும் மாற்றுக் கொள்கை உடையவர்களும் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி சதந்திரமாக செயல்பட்டது இஸ்லாமிய ஆட்சியின் கீழ் மட்டுமே.

தங்களின் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சித்தாந்தங்களின்படி மற்றவர்களை அடிமைப்படுத்தி வைத்துள்ள நாடுகளுக்கு மீண்டும் இஸ்லாமிய ஆட்சி வந்து விட்டால் தங்களின் சுரண்டல்களுக்கு வழியில்லாமல் போய்விடும் என்ற அச்சத்தால் அந்த ஆட்சியைக் கொண்டுவர தீரத்துடன் போராடும் தாலிபன்களை கொடூரமாக சித்தரிக்க அமெரிக்கா போன்ற நாடுகள் விரும்புகிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் பெண்களுக்கு எதிரானவர்கள் எனும் கருத்தைத் திட்டமிட்டு பரப்பி வருகிறார்கள்,

அவர்களின் அனைத்து திட்டங்களும் பிரிட்டிஷ் பத்திரிக்கையாளர் யுவானி ரெட்லி தாலிபன்களிடம் கைதாகி விடுதலையானதும் தவிடுபொடியானது. தாலிபான்களின் நன்னடத்தையைக் கண்டு விடுதலையான பின்னர் ரிட்லி இஸ்லாத்தை ஏற்றார். தாலிபன்கள் எவ்வளவு சிறப்பானவர்கள் என்று அவர் உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்து வருகிறார், அந்த பிரச்சாரத்தைக் கண்டு அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நிறைய பெண்கள் இஸ்லாத்தைத் தழுவுகின்றனர். இதில் குறிப்பிடப்படத்தக்கவர் இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேரின் மைத்துனி இஸ்லாத்தை ஏற்றது,

தாலிபன்களின் புகழ் எல்லா பக்கங்களிலும் பரவி வருவதைக் கண்ட அமெரிக்கா, பாகிஸ்தானிலுள்ள தங்களது ஏஜென்டுகளைக் கொண்டு மலாலாவைத் தாக்கி பழியை தாலிபன்களின் மேல் போட்டுள்ளனர். ஆனால் தாலிபன்களை குறித்து மக்கள் நன்றாக அறிந்துள்ளதால் யாரும் அதை நம்பவில்லை. ஆனால் மக்களுக்கு பல முக்கியச் செய்திகளை அச்சமின்றி புலனாய்வு செய்து தரும்

நக்கீரனில் இப்படி ஒரு செய்தி வருவது வருத்தமளிக்கிறது. எதையும் புலனாய்வு செய்யும் தாங்கள் அமெரிக்காவின் சூழ்ச்சிகளையும், சதிகளையும் ஆய்வுக்கு உட்படுத்துங்கள், தாலிபன்களைக் குறித்து தெளிவான முறையில் புலனாய்வு செய்யுங்கள். தாலிபன்கள் பெண்கல்வியை மறுத்திருந்தால் ஆஃப்கானில் நிறைய பெண் மருத்துவர்களும் ஆசிரியர்களும் இன்றும் பல துறைகளில் வேலை செய்பவர்களும் திடீரென்று எப்படி தோன்றியிருக்க முடியும்?!

அவர்கள் பெண்களுக்கும் ஆண்களுக்கம் தனித்தனியே கல்வித் தந்தார்கள். ஏனெனில் எந்த தவறும் நிகழக் கூடாது என்று. இன்று இந்தியாவில் பார்ப்பதுபோல் கற்பழிப்புகள் அங்கு ஏன் இல்லை. பெண்களுக்கு பெண் ஆசிரியர்களைக் கொண்டு தனிப் பயிற்சி. அதேபோல் ஆண்களுக்கும்.

இங்கே பாருங்கள். பஸ்ஸில் கற்பழிப்பு, ஆசிரியர் மாணவியைக் கற்பழிப்பு, ஆசிரியை மாணவன் தகாத உறவு, பணியிடத்தில் கற்பழிப்பு, திரும்பும் இடமெல்லாம் கற்பழிப்பு. இவைகளின் ஆணி வேரான காரண என்ன? அவர்கள் முளையிலேயே தடுத்தார்கள். இதற்குப் பழி பெண் கல்வி மறுக்கப்படுவதாக கூறுவதா? பெண்கள் நிம்மதியாக வாழ முடிந்தது. இதைச் செய்த அவர்கள் பயங்கரவாதிகளா? அப்படியெனில் கற்பழிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் நமது சட்டங்களை என்ன சொல்வது?

அவர்களிடம் சரியான தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாததால் அவர்களின் மீது மேற்கத்திய நாடுகள் மேலும் மேலும் பழியை சுமத்துகின்றன. இறைவன் நாட்டத்தால் அவைகள் தவிடு பொடியாகி வருகின்றன. மலாலாவைக் கொல்ல வேண்டுமெனில் அவர்கள் முன்பே யுவானி ரெட்லியை கொன்றிருப்பார்கள். தாலிபன்களால் ஒரே ஒரு அப்பாவிக் கூட கொல்லப்பட மாட்டார். ஏனெனில் அவர்கள் ஏற்றிருக்கும் கொள்கை அப்படி.

தாலிபன்களைக் குறித்து மேலும் அறிய யுவானி ரெட்லி எழுதிய புத்தகத்தின் தமிழாக்கமாக "தாலிபனின் பிடியில்" எனும் புத்தகம் உள்ளது. தமிழில் வேர்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. வாங்கிப் படிக்கவும். அமெரிக்காவின் அவதூறு செய்திகளைத் தங்களைப் போன்ற நல்ல பத்திரிக்கைகளில் வெளியிட வேண்டாமென்றுக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

அபுஅப்துல்லா

திருப்பூர்.


இன்ஷா அல்லாஹ்....
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்துப் அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்

எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!
தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!
பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!!

மு. குலாம் முஹம்மது அவர்களின் விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
2/1 மண்ணடி தெரு, 4வது தளம்
மண்ணடி சென்னை -1
அலை: 9444239594, : 044-45566909

# நூலரங்கம்

**நூல்:** நாம் தேடும் புதிய தலைமுறை

**மூலம்:** டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி

**தமிழில்:** மௌலவி S.M. அபுல் ஹஸன் அல் ஃபாஸி

**பக்கங்கள்:** 111

**விலை:** ரூபாய் 45.00

**வெளியீடு:** சாஜிதா புக் சென்டர், 248, தம்புச் செட்டி தெரு, மண்ணடி, சென்னை - 1.

**போன்:** 91 44 25224821, 9840977758


ஆங்கிலத்தில் Smart என்றொரு சொல்லாட்சி. அதேபோல் Gentle என்றொரு சொல். இவை இரண்டுமே திறமையாளர்களைக் குறிக்கும்.

இவர்கள் எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்வார்கள். அவை எத்தனை கஷ்டமான சூழ்நிலையாகவுமிருக்கலாம் அல்லது ஆபத்தான சூழ்நிலையாகவும் இருக்கலாம்.

ஆமாம் சுற்றிப்பகை வந்து ஆளும் ஆனாலும் அவை வீழும் என வீழ்த்திக் காட்டுவார்கள் இவர்கள்.

அதில், தங்கள் பெருந்தன்மையையோ ஒழுக்க விழுமங்களையோ கிஞ்சிற்றும் விட்டுத் தந்திட மாட்டார்கள். ஜென்டில் என உயர்ந்து நிற்பார்கள்.

எதிரிகளை அவர்கள் களத்திலேயே எதிர்கொள்வார்கள், வெல்வார்கள், வாகை காண்பார்கள். என்னால் முடியும் என்பதற்காக




சிக்கலையும், சிரமங்களையும் அள்ளித் தலையில் போட்டுக் கொள்ள மாட்டார்கள். அதில் அறிவோடும் விவேகத்தோடும் நடந்துக் கொள்வார்கள். இத்தனை திறமையும் ஒருவரிடம் ஒன்றாய் அமர்ந்து அவர் அனைத்தையையும் கைமாறு கருதாமல் அல்லாஹ்வுக்காக பயன்படுத்தினால் அவரை முஸ்லிம் எனலாம். இந்த தன்மைகளைக் கொண்ட இளைஞர்களையே - இளைய தலைமுறையையே நாம் தேடுகின்றோம் எதற்கு இஸ்லாத்தை நிலைநாட்டிட என்பது நூலின் மையக் கருத்து.

நீதி அரசன் அல்லாஹ்வின் ஆட்சியும் நீதியும் அனைத்து மக்களுக்கும் கிடைத்திடச் செய்வதே நோக்கு இலக்கு!

இதற்கான இன்றைய தேவைகளையும் இன்றைய இளைஞர்கள் பெற்றிருக்க வேண்டிய தகுதிகளையும் பயிற்றுவிக்கும் பயிலரங்கமே இந்நூல்.

பயிலரங்கத்தை டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி அவர்கள் நடத்துகின்றார்கள். ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களையும் இணையாகவே பயிற்றுவிக்கின்றார் நூலில் டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி அவர்கள். புதிய தலைமுறையில் முஸ்லிம் பெண்கள் (அத்தியாயம் 5) என்ற அத்தியாயம் அவர்களுக்குரியதே.

நூலில் சொல்லப்பட்டிருப்பனவற்றை ஆளுமை மேம்பாடு (Personality Development) என்று தனிவகுப்புகளை நடத்தினால் ஆயிரக்கணக்கில் பணத்தை அள்ளி தந்து ஆஹா அபார வகுப்பு எனச் சிலாகித்துச் சொல்லியிருப்பார்கள் கலந்துக் கொள்வோர். ஏதோ தங்களுக்குள் பெரிய மாற்றம் ஒன்று வந்து விட்டது இனி எல்லாம் முடியும் எங்களால் என்ற நம்பிக்கையைப் பெறுவார்கள்.

இந்த நம்பிக்கையையும் நெஞ்சுரத்தையும் தூரப்பார்வையும் இலட்சியப் பிடிப்பையும் பெருமானார்(ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்குத் தந்ததால் தான் அவர்கள் இந்த உலகை வெற்றிக் கொண்டு வெற்றியின் நிரந்தர சொந்தக்காரர்கள் ஆனார்கள். அல்லாஹ்வின் ஆட்சியை அன்று அறியப்பட்ட அகிலத்தின் அரைப் பகுதியில் நிலைநாட்டினார்கள் என்பார் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். அவற்றை பெருமானார்(ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்கு தந்த பெரும் செல்வங்கள் எனக்கூறி புகழாரம் சூட்டுகிறார்கள். அவை ஆங்கிலத்தில் இப்படி வகைப்படுத்துவார்கள் Confident, Courage, Vision என பண்டித நேரு பட்டியல் போட்டுள்ளார்.

இதனை நாம் தேடும் புதிய தலைமுறை என்ற இந்த நூல் நீட்டிமுழக்காமல் கச்சிதமாய் பயிற்றுவிக்கின்றது.

ஆங்காங்கே அடிக்குறிப்புகள் மூலம் ஒரு வரலாற்று சுருக்கத்தையும் வகையான பாடத்தையும் பயனுள்ள படிப்பினையையும் தந்துள்ளார்கள் மொழிபெயர்ப்பாளர் அபுல் ஹஸன் அல்ஃபாசி அவர்கள். இதன் மூலம் இந்த நூலின் தகவல் மதிப்பை அதிகப்படுத்தி இருக்கின்றார்.

கொடியும், கோஷங்களுமே தீர்வு என எல்லோரும் தங்களை ஏமாற்றிட முற்பட்டு நிற்கும் நிலையில் இந்த நூல் தேடும் புதிய தலைமுறை நிச்சயம் கைகூடும் அது அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்ய புதிய தலைமுறையைக் காணும், அது செல்லும், வெல்லும் அல்லாஹ்வின் உதவியுடன். அல்லாஹ் எப்படியெல்லாம் உதவி செய்வான் என்பதையும் நம் எதிரியைக் கொண்டும் நமக்கு உதவி செய்யும் அல்லாஹ்வின் ஆற்றலையும் வகைபடுத்தித் தந்திருக்கிறார்.

பொங்கி வரும் மகிழ்ச்சி என்னவெனில் அரபு மூலத்திலிருந்து நேரடியாக தமிழுக்கு நூல்களை தரும் பெரும் பணியொன்று தமிழகத்தில் தழைகின்றது, வளர்கின்றது.

இதில் தனித்து நிற்கும் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜியின் மாணவர் மொழிபெயர்ப்பாளர் மௌலவி S.M. அபுல் ஹஸன் அல் ஃபாஸி என்பது மற்றொரு இயல்பான செய்தி. அவரும் அரபு மூலத்திலிருந்து தமிழுக்கு நூலை தந்திடுவதில் முனைப்புடன் முன்னே நிற்கின்றார். இது அவரது இரண்டாவது மொழிபெயர்ப்பு. எளிய நடை, கோர்வை குலையாமல் கவனத்தைக் கலைக்காமல் ஓடும் இனிய சொற்றொடர்கள், சிறிய வாக்கியங்கள் இவை இவரது மொழிபெயர்ப்பின் தனித்தன்மைகள். அத்தோடு யூசுஃப் அல் கர்ளாவி தேடும் புதிய தலைமுறை எப்படி இருக்க வேண்டும்? என்ற தகுதிகளின் விரவல். இவை இந்த நூலை ஒரு கருத்துபேழையாக மாற்றி விட்டது. மாஷாஅல்லாஹ்! இத்தனையும் 111 பக்கங்களில் தாம். வேகமாக ஒரு நூலைப் படித்தோம், முடித்தோம் ஒரு பெரும் மாற்றத்தைப் பெற்றோம் என முடிகின்றது நூல்.

மொழிபெயர்ப்பாளர் ஒரு சிறந்த பேச்சாளர் என்பதை பின்னர் உணர்ந்தோம். அல்ஹம்துலில்லாஹ்!

இந்த நூலை நாம் வெளியிட்டிருக்க வேண்டும் என்கின்றனர் ஒவ்வொரு இலட்சிய வீரர்களும். இது இயலாத போது நூலை பரவலாக்குவதில் பங்காற்றுவது என முடிவு செய்துள்ளோம். இஸ்லாமிய வெளியீடுகளில் முன்னணியில் நிற்கும் 'சாஜிதா புக் சென்டர்' இதனை வெளியிட்டு சிறந்ததொரு சேவையைச் செய்திருக்கின்றது. அதன் இலக்கியப் பணியில் இன்னொரு சிறப்பையும் பெற்றிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்! எல்லாம் புகழும் அல்லாஹ்வுக்கே!

******

# கர்கரேயைக் கொலை செய்தது யார்?

**(III) அஹமதாபாத் குண்டுவெடிப்புகளும் சூரத்தின் வெடிக்காத குண்டுகளும்**

*(26 July 2008)*


தொடர்

*9. கென் ஹேவுட்டின் கணிணியிலிருந்து அனுப்பப் பட்ட மிரட்டல் மின்னஞ்சலை பற்றி ஃபோரன்சிக் சயன்ஸ் லேபாரட்டரி-கலினா* (Forensic Science Laboratory - Kalina) *புர்தூ யுனிவர்சிடி ஃசைபர் ஃபோரன்சிக் லேபிடம் கருத்து கேட்டு இருந்தது. மேலும் இந்த மின்னஞ்சல் விஷயத்தை கவனிப்பதற்காகவே குஜராத் குற்றப்பிரிவை சேர்ந்த ஒரு குழு மும்பைக்கு வந்து இருந்தது. புர்தூ யுனிவர்சிடி என்ன கருத்தை கூறியது? குஜராத் குற்றப்பிரிவு குழுவினர் என்னென்னவற்றை கண்டுபிடித்தனர்?*

*10. மிகவும் திகைப்பூட்டும் விஷயம் என்னவென்றால் கென் ஹேவுட் இந்தியாவை விட்டு சென்றதும், அவ்வாறு தப்பி ஓடிச் செல்ல இருந்த ஒருவனுக்கு மும்பை காவல்துறையினரும் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையும் நற்சான்றிதழ் கொடுக்க எடுத்து கொண்ட விரைவும் ஆர்வமும். இதன் தொடர்பாக மிக அதிகமான கேள்விகள் எழுகின்றன:-*

(a) *இத்தகைய ஓர் மிக முக்கியமான வழக்கில் சென் ஹேவுட்டின் பங்கு பற்றி சந்தேகிக்கப்பட்ட வேளையில் ஏன் மும்பை காவல்துறையினர் அவன் மீது கண்காணிப்பை தீவிரப்படுத்தவில்லை?*

(b) *ஒரு நபருக்கு எதிராக கண்காணிப்பு சீட்டு கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் நாடு விட்டு நாடு செல்ல அனுமதிக்கும் அதிகாரத்தை கொண்டவர் களிடம் இரகசிய உடன்பாடில்லாமல் அந்நபர் நாட்டை விட்டு செல்ல இயலுமா? இந்தியாவை பொறுத்தவரை அந்த அதிகாரத்தை கையில் வைத்திருப்பது ஐபி என்ற மத்திய உளவுத்துறை.*




(c) *கென் (ஹேவுட்டுக்கு எதிரான விசாரணை முடிவடையாத நிலையில் அவனுடைய திடீரென்ற விமானபயணத்திற்கு இரண்டு நாட்களுக்குள் நற்சான்று வழங்க மும்பை தீவிரவாத தடுப்பு படைக்கு என்ன அவசரம்? காவல்துறையினரோ அவனுடைய கணினியிலிருந்து*

அனுப்பப்பட்ட மின்னஞ்சல் அவனுக்கு தெரியாமல் வேறு யாராவது திருடி அனுப்பினார்களா (Hacked) அல்லது அவனே தான் அந்த மின்னஞ்சலை அனுப்பினானா என்ற தீர்க்கமான முடிவிற்கு இன்னும் வராத போது, இவ்வளவு முக்கியமான மிகத் தீவிரமான பிரச்சனையில் அவனுக்கு எதிரான விசாரணை நடந்து கொண்டிருந்த போது அவன் நாடு விட்டு சென்றது மிகவும் சந்தேகத்திற்குரியது; அல்லது பன்னாட்டு உறவு என்ற போர்வையில் ஐ.பி என்ற மத்திய உளவுத் துறை நிர்ப்பந்தித்து இவ்வாறு செய்ய வைத்தார்களா?

(d) கென் ஹேவுட் இந்தியாவிற்கு திரும்பிய ஒரு மாதத்திற்கு பிறகு அவன் ஒரு தகவல் தொழில் நுட்ப (IT Trainer) பயிற்சியாளராக இருந்தும் அவனை கம்ப்யூட்டர் வல்லுனன் என்று சொல்வதை விட ஒரு ஒரு போதகன் என்று சொல்வது தான் சரியானது என வேகவேகமாக ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை ஏன் அறிவிக்க வேண்டும்? ஹேவுட்டின் வழக்கில் ஒரு தீர்க்கமான விசாரணை மேற்கொள்ளப்பட்டால் தங்களுடைய விளையாட்டு யுக்திகள் வெளிவந்து விடும் என்பதை ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை அறிந்திருந்ததாலா?

(e) அமெரிக்காவில் ஹேவுட் ஒரு மாதம் என்ன செய்தான்? அவன் மீது எழப்போகும் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்வது? மயக்க நிலை சோதனை (Narco Analysis Test) மேற்கொள்ளப்பட்டால் அதனை எப்படி எதிர்கொள்வது? இந்த சிக்கல்களிலிருந்து எல்லாம் எப்படி வெளிவருவது என ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையாலும் சில அமெரிக்க வல்லுனர்களாலும் பயிற்றுவிக்கப்பட்டானா?


இறைவனின் அழகிய வழிகாட்டுதல்
அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில்
எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக
திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப்
பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்

52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி,அறை எண் 7.
மண்ணடி சென்னை-1

இந்த இலவச விநியோகம்
முஸ்லிம்களுக்கு இல்லை.

# பெரம்பலூர் மாவட்டம் அருகில் உள்ள V.களத்தூர் என்ற ஊரில் இந்து மற்றும் முஸ்லிம் இடையே மதக்கலவரம்.

இந்தியாவில் சுதந்திரத்திற்கு பிறகு குறிப்பாக முஸ்லிம்கள் பல்வேறு வகையான சோதனைகளை சந்தித்து வந்து கொண்டு இருக்கின்றனர். இதில் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலி ஆகிஉள்ளது மட்டுமல்லாமல் பல கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதாரமாகி உள்ளன. சமீபத்தில் V. களத்தில் என்ற ஊரில் 90க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

V. களத்தூரில் இந்து மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் சண்டை தேர் முஸ்லிம்கள் வீதி வழியாக செல்வதன் காரணமாக நடைபெற்று வருகிறது. இதில் முதல் சண்டை 1951ல் இரு மதத்தவரிடையே மோதல் ஏற்பட்டு முஸ்லிம்கள் பல இழப்புகளை சந்தித்தனர். இதன் பிறகு மீண்டும் 1984-ல் ஒரு கலவரம் நடைபெற்று, பல இன்னல்களுக்கு முஸ்லிம்கள் ஆளாயினர். மீண்டும் 1990-ல் ஒரு மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு, முஸ்லிம்கள் பள்ளிவாசல் இந்துகளால் இடிக்கப்பட்டு, பள்ளிவாசல் எதிரில் இருந்த வீடு கொளுத்தப்பட்டது. பள்ளிவாசலில் இருந்த திருகுர்ஆன் துண்டுதுண்டாக கிழிக்கபட்டது.

6 மாதத்திற்கு முன்பு இது சம்பந்தமாக ஒரு வழக்கு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தீர்ப்பு இந்த மாதத்தில் ஒரு தேர் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டது. பிறகு மீண்டும் ஜமாத்தார்கள் கலெக்டர் மற்றும் DROவிடம் மனு கொடுத்தனர். ஜனவரி 3-ல் ஒரு Peace meeting வைக்கப்பட்டது. இதில் இஸ்லாமியர்கள் தேர் மற்றும் இதர பிற சமுதாய ஊர்வலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே பிப்ரவரி 3வரை எந்த ஊர்வலம் செல்ல தடைவிதிக்கப்பட்டது.

ஆனால் திருமண ஊர்வலம் என்ற போர்வையில் ஓர் ஊர்வலம் முஸ்லிம் தெரு வழியாக வந்து கொண்டிருந்தது. இதனை முஸ்லிம்கள் தடுத்தனர். திருமண ஊர்வலத்தில் பெண் மற்றும் மாப்பிள்ளை இல்லாமல் காலி வாகனம் மட்டும் ஊர்வலமாக வந்தது. இருதரப்பினரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டி இருந்தபோது அங்கு வந்த காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மாரிமுத்து மக்களை சமாதானம் செய்தார். அப்பொழுது இந்து சமுதாயத்தினர் அவரை தாக்கினர். காவல்துறை துணை கண்காணிப்பாளரை முஸ்லிம் இளைஞர்கள் காப்பாற்றி கொண்டு வந்தனர். இந்நேரத்தில் முஸ்லிம் மக்களை நோக்கி கற்களை கொண்டு தாக்கினர். இத்தாக்குதலின் 7 இஸ்லாமியர்கள் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தால் கொதிப்படைந்த முஸ்லிம்கள் காலி வாகனத்தை உடைத்தனர். பின்னர் வந்த காவல்துறை மாவட்ட DSP மற்றும் மற்ற அதிகாரிகள் முஸ்லிம்கள் செய்தது தவறு என்று கூறி முஸ்லிம்களை நோக்கி நீங்கள் தான் தவறு செய்து உள்ளீர்கள் என்று ஒரு தலைபட்சமாக பேசி உள்ளார். இதனை தொடர்ந்து 90 முஸ்லிம்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல்துறையினர் முதலில் இந்த விஷயத்தில் தீவிரமாக செயல்பட்ட இளைஞர்கள் 5பேரை தரும்படி ஜமாத்தார்களிடம் கேட்டு உள்ளனர். ஆனால் ஜமாத்தார்கள் தர மறுத்ததால், (23, 24-1-13) அன்று சுமார் 72 பேரை கைது செய்து உள்ளனர். இதில் (24-1-13) அன்று சுஃப்பு தொழுகைக்கு சென்ற பலரை கைது செய்து உள்ளனர். மேலும் கல்லூரிக்கு சென்ற மாணவர்கள் 10க்கு மேற்பட்டவரை கைது செய்து உள்ளனர். அம்மாணவர்கள் செமஸ்ட்தேர்வு எழுத சென்றவர்கள், அவர்கள் எவ்வளவோ கெஞ்சி கேட்டும் போலீசார் விடவில்லை.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 6 மாதத்திற்கு முன்போடப்பட்ட வழக்கில் வழக்கறிஞர் அப்துல்லா அவர்கள் வாதாடினார். இவ்வழக்கில் காவல்துறை முழுமையாக எதிர்தரப்பிற்கு ஆதரவாக இருந்தது. இவ்வழக்கில் பெரம்பலூர் DCP சார்பில் ஒரு மனுதாக்கல் செய்யப்பட்டது. அம்மனுவில், முஸ்லிம்கள் தரப்பில் 30பேர் வந்து ஊர்வலம்

வரலாம் என்ற ஒப்புதல் தந்துள்ளனர். அதனால் தான் நாங்கள் ஊர்வலத்திற்கு அனுமதி அளித்தோம் என்று கூறினார். இவ்வழக்கை உயர் நீதிமன்றத்தில் போட்ட 6 பேரை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துவிட்டதாக ஜமாத்தார்கள் கால்துறையினரிடம் கூறியதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜமாத்தில் ஒப்புதல் தரப்பட்ட கடிதத்தை தருமாறு நீதிபதி கேட்டார். காவல்துறை ஜமாத்தார்கள் தந்த ஒப்புதல் கடிதத்ததை இறுதி வரை அளிக்கவில்லை. இதிலிருந்து காவல்துறை நீதிமன்றத்தில் பொய்யான தகவல் தருவதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் சில நிபந்தனைகளுடன் தரலாம் என்று காவல்துறை மற்றொரு மனு தாக்கல் செய்து ஜமாத் ஒப்புதல் கடிதத்தை தராமல் இழுத்தடித்தது.

கோர்ட்டு இந்த நிபந்தனைபடி ஊர்வலம் செல்ல இந்த ஒருமுறை மட்டும் அனுமதித்தது என்ற கோர்ட்டில் மனுதாக்கல் செய்த நபர்கள் கூறினர். ஊர்வலம் வந்து கொண்டிருந்தபோது நிர்வாகி உபயதுல்லாவை, செல்வராஜ் என்பவர் கொலை செய்து விடுவதாக மிரட்டி உள்ளார். இதனை பற்றி புகார் தந்தபோது காவல்துறை எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த ஊராட்சியில் தலைவர் பதவியில் தொடர்ந்து முஸ்லிம்கள் வெற்றி பெற்று உள்ளனர். ஊராட்சி தலைவராக இருக்ககூடிய முகமது இஸ்மாயில் முஸ்லிம் சமூதாயத்திற்கு தொடர்ந்து எதிரானவராக செயல்பட்டுள்ளார். இவர் இந்து மக்களிடம் நெருக்கமானவராக உள்ளார், என்று குற்றச்சாட்டு உள்ளது.

கைது செய்யப்பட்ட முஸ்லிம்களை ஜாமினில் எடுக்க இவர் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றும் இஸ்லாமிய மக்கள் குறை கூறினர். மேலும் இந்த கலவரத்திற்க முக்கிய காரணமானவர் உடையார் இனத்தை சேர்ந்த காவியா ரவி என்பவர் என்ற குற்றச்சாட்டு உள்ளது. இவர் V. களத்தூரில் டிராவல்ஸ் ஒன்று நடத்திவருகிறார். இவர் அதிமுக V. களத்தூர் செயலாளரும், கோவில் தர்மகர்தாவாக உள்ளார். இவர் RSS உடன் நேரடி தொடர்பு வைத்திருப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. இவர் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பி தன்னுடைய வசதிவாய்ப்பை பெறுக்கிகொண்டவர். உடையார் சமுகத்தை சேர்ந்தவர்கள் வெறும் 25 முதல் 30 குடும்பம் மட்டுமே உள்ளது. இவர்கள்தான் வகுப்பு கலவரத்திற்கு முக்கியக காரணமானவர்கள் என்று ஜமாத்தார்கள் கூறினர். மேலும் காவியா ரவி ஆளுங்கட்சியை சேர்ந்தவராக இருப்பதால் அவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி முஸ்லிம்கள் மீது பொய்வழக்கு போட காரணமாகவும் இருந்ததாக ஜமாத்தினர் கூறினர்.

முஸ்லிம்கள் மீது 294(B), 147, 147, 148, 341, 324, 336, 153, 153 (A), 307 IPCL R/W, 307 PPdl Act போன்ற பிரிவுகளில் வழக்கு போடப்பட்டுள்ளது.

## காவல் துறையின் பாரபட்சம்

ஊர்வலம் என்ற பெயரில் வந்தவர்கள், வி. களத்தூரைச் சார்ந்த முஸ்லிம்களால் நடத்தப்படும். அப்துல்லிஹ்ஷா பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமான வேன் ஒன்றை அடித்து நொறுக்கினார்கள். ஆனால் பொதுவான குவலிஸ்கார் ஒன்று. (இஃது இன்னொரு சமுதாயத்திற்குச் சொந்தமானது என நம்பப்படுகின்றது). சேதத்திற்குள்ளானது. அதற்காக முஸ்லிம் இளைஞர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இஃது பிரச்னைக்குரிய கல்யாணத்தின் பெண்ணை அழைக்க வந்த கார் என்பது எதிர்தரப்பார் வாதம்.

ஆனால் முஸ்லிம்களால் நடத்தப்படும் பள்ளிக்குச் சொந்தமான வேன் கொளுத்தப் பட்டதற்கு எந்த நடவடிக்கையுமில்லை. இப்படி காவல்துறை ஒரு தலைபட்சமாகவே நடந்து வருகின்றது.

வி. களத்தூரைப் பொறுத்தவரை கடந்த 50 ஆண்டுகளாக சிறுபான்மை முஸ்லிம்கள் தொடர்ந்து நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

**இதில் வேதனை:** காவல்துறை ஆய்வாளரைக் காப்பாற்றிய முஸ்லிம் இளைஞர்கள் மீதே காவல்துறை ஆய்வாளர் தாக்கியவர்கள் என வழக்குத் தொடர்ந்துதான். ஆய்வாளரின் இந்தச் செயலைக் கண்டு முஸ்லிம்கள் விரக்தி வயப்பட்டு நிற்கின்றனர்.

தொடர்ச்சி 64ம் பக்கம்

# அஃப்சல் குரு அவசர பலி

அப்ஃசல் குருவின் தூக்கு குறித்து அருந்ததி ராய் என்ற நாடறிந்த ஆய்வாளர் ஒரு கட்டுரையை "தி ஹிந்து" நாழிதளில் 10.2.2013இல் எழுதி இருந்தார். கட்டுரையின் முக்கிய பகுதிகளை இங்கே தருகின்றோம். இந்த நீண்ட கட்டுரையில் குறிப்பிட்டிந்த பல தகவல்களை நாம்ட ஜனவரி 2013 வைகறையில் தந்திருக்கின்றோம். அதில் இடம் பெறாதவற்றை இங்கே தருகின்றோம்.

கட்டுரைக்கு நக்கலாக "ஒரு முழுமையான ஜனநாயகம்" A Perfect Democracy என குறிப்பிட்டிருந்தார். உண்மையின் இதற்கு "என்னடா இது ஜனநாயகம்" என்று பொருள்.

நமது கூட்டு மனசாட்சி திருப்தி அடைந்ததா? அல்லது நமது இரத்த தாகம் தணிந்ததா? - அருந்ததிராய் ( தி ஹிந்து 10.2.13)

அஃப்சல் குருவுக்கு எதிராக எந்த சாட்சியமும் நிரூபிக்கப்படவில்லை. அவர் காவல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நீண்ட நாள்களாக இருந்து வந்தவர். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் காவல்துறையிடம் சரணடைந்தவர். பின்னர் அவரை காவல் துறையினர் தங்களது சதித்திட்டத்தில் பயன்படுத்தினார்கள். இதுதான் உண்மை!

அஃப்சல் குருவை எப்படி கைது செய்தார்கள்? என்பதற்கு காவல் துறையினர் சொன்ன பதில் அன்று நாடாளுமன்ற தாக்குதலின் மூளை எனக்குற்றம் சாட்டப்பட்டச S.A.R ஜீலானி தான் தகவல் தந்தார் என்றார்கள்.

அதாவது ஜீலானியைக்கைது செய்தோம் அவர்தான் எங்களை அப்சல் குருவிடம் அழைத்து சென்றார் என்றார்கள். ஆனால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் அப்சல் குருவை கைது செய்திட அனுப்பப்பட்ட கைது ஆவணங்கள் S.A.R ஜீ கைது செய்யப்படுவதற்கு முன்பே அனுப்பப்பட்டு விட்டன என்பதைத் தெளிவுபடுத்தின.

நீதிமன்றத்தின் பார்வைக்கு இவற்றைக் கொண்டுவந்த போது நீதிமன்றம் இதனை a Material Contradiction அப்பட்டமான முரண்பாடு என்றது. ( இந்த அடிப்படையில் வழக்கை அது தள்ளுபடி செய்திருக்கலாம். அப்பாவிகளைத் தூக்கில் போடுவதற்கு நீதிமன்றங்களும் துணை நின்றதால் நீதிமன்றம் ஒரே சொல்லில் அதிருப்தியைத் தெரிவித்துவிட்டு விட்டுவிட்டது. இது நீதிமன்ற அநீதி.

**சிம்கார்டு :** அப்சல் குருவுக்கு "சிம்கார்டை" விற்பனை செய்தவர் என்று ஒருவரை அழைத்து வந்தார்கள். அவரது பெயர் கமல் கிஷோர். அவர் அப்சல் குருவுக்கு ஒரு சிம்கார்டை விற்றதாகவும் அது டிசம்பர் 4 2001 அன்று விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறினார். இந்த சிம்கார்டு வழியாகத்தான் நாடாளுமன்ற தாக்குதலில் ஈடுபட்ட எல்லா தீவிரவாதிகளும் ஒன்றிணைக்கப்பட்டதாக கூறினார்கள்.

ஆனால் நீதிமன்றத்தில் அரசன் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட Call Records கைப்பேசி பதிவேடுகளில் இந்த சிம் கார்டு நவம்பர் 6 2001இல் இருந்தே செயல்பட தொடங்கி இருந்தது என்பதை உறுதிபடுத்தின.

இது போன்ற போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட சாட்சியங்கள் இவை நீதிமன்றத்தில் தோலுரித்துக் காட்டப்பட்டன. ஆனால் நீதிமன்றங்கள் காவல்துறையை மிகவும் மிருதுவாக கண்டித்தன. ஆனால் பொய்யை சாட்சியமாக ஏற்றுக்கொண்டன.

**லேப்டாப் :** அப்சலிடமிருந்து இரண்டு முக்கிய தடயங்கள் அல்லது ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் காட்டப்பட்டன. அவை 1. அவருடைய லேப்டாப் 2. அவருடைய செல்போன்

இவற்றைக் கைப்பற்றியதாக எழுதப்பட்ட காகிதங்களில் கையெழுத்திட்ட சாட்சியங்கள் இரண்டு கஷ்மீர் காவல்துறையினர் தாம்.

இவர்கள் தாம் அப்சல் குருவை நீண்டநாள்கள் காவலில் வைத்திருந்தவர்கள். சித்திரவதைச் செய்தவர்கள். பணம் பறித்தவர்கள். (இந்த விவரத்தை நாம் வைகறை ஜனவரி இதழில் வெளியிட்டிருந்தோம்.)

முக்கிய ஆவணங்களை கைப்பற்றினால் அவற்றை சீல் வைத்திட வேண்டும். ஆனால் இவை எந்த நிலையிலும் சீல் வைக்கப்படவில்லை.

இந்த லேப்டாப்.ஐ அவர்கள் திறந்த போது அந்த லேப்டாப்பில் 1. உள்துறை அமைச்சகத்தின் சார்பில் நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைவதற்குத் தயாரிக்கப்பட்ட போலி நுழைவுச்சீட்டுகள் போலி அடையாள அட்டைகள் இவை மட்டுமே இருந்தன. இவை இல்லாமல் வேறெதுவுமில்லையா ? என்று கேட்டதற்கு, காவல்துறையினர், இருந்தன, ஆனால் அவை அப்சல் குருவால் அழிக்கப்பட்டு விட்டன எனக்கூறி இருந்தார்கள்.

அதாவது அப்சல் குரு தன்னை தூக்கில் போட்டிடத்தேவையான ஆவணங்களை மட்டுமே வைத்திருந்தார். மீதியை அழித்துவிட்டார் எனக்கூறி இருந்தார்கள். எப்படி இருக்கின்றது இவர்களின் நீதி பரிபாலனம்.

**வழக்கறிஞர்:** அப்சலுக்கு கீழ் நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களே வைக்கப்படவில்லை. உயர்நீதிமன்றத்தில் வைக்கப்பட்ட வழக்கறிஞர் அவரை ஒருமுறைகூட சந்திக்கவில்லை.

இவற்றிற்கெல்லாம் மேலாக.....?

நாடாளுமன்ற தாக்குதலுக்குச் சென்றவர்களுடன் அப்சல்குரு செல்லவில்லை. அப்படி குற்றப்பத்திரிக்கையும் கூட அவர் மீது குற்றம் சுமத்திடவில்லை.

“அவரால் யாரும் கொலை செய்யப்படவில்லை, ஆனாலும், அவர் தூக்கிலிடப்படுகின்றார், சிலரை திருப்திப்படுத்திட.

**உண்மை :** கிடைக்கும் சாட்சியங்களை முறையானதோர் ஆய்வுக்கு உட்படுத்தினால் உண்மையிலே நாடாளுமன்றத்தை தாகிட திட்டமிட்டவர் அதனை செயல்படுத்தியோர் இவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். அவர்களையெல்லாம் காப்பாற்றிடத்தான், அப்சல் குரு தூக்கிலிடப்பட்டுள்ளார்.

**பழியும் பாவமும்:** நாடாளுமன்றத்தை தாக்கிடவேண்டும் பழியை முஸ்லிம்கள் மீது குறிப்பாக காஷ்மீர் முஸ்லிம்கள் மீது போடவேண்டும் முஸ்லிம்களை தீவிரவாதிகளாகக்காட்டிடவேண்டும் என்பதற்காக அதனை திட்டமிட்வர்களுக்கும் செயல்படுத்தியவர்களுக்கும் STF என்ற கஷ்மீர் சிறப்புப்படையினரும் டெல்லி Special Cell சிறப்பு காவல்துறையினரும் தான்.இதனை விரிவாக வைகறை வெளிச்சம் ஜனவரி 2013 இதழ் “நாடாளுமன்றத்தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்” என்ற நூல் இவற்றில் குறிப்பிட்டிருக்கிறோம்.

-எம்.ஜி.எம்

---

62ம் பக்க தொடர்ச்சி

**பிளவுகள்:** முஸ்லிம்களின் மீது மேலும் வெறுப்பை உண்டாக்கவும், அங்குள்ள மக்களை முஸ்லிம்கள் என்றும், இந்துக்கள் என்றும் நிரந்தரமாகப் பிரிந்து வைக்கவும் சில உத்திகளைக் கையாண்டு வருகின்றார்கள். முஸ்லிம் கடைகளில் வேலை செய்துகொண்டிருந்த இந்துக்களை இனி அங்கே வேலைக்குப்போகக்கூடாது எனத் தடுத்துள்ளனர். இதில் பத்து வருடங்கள் தொடர்ந்து வேலை செய்த இந்துக்களும் உண்டு. அதேபோல் முஸ்லிம் பள்ளிக்கூடத்தில் வேலை செய்து கொண்டிருந்த இந்து ஆசிரியர்களும் கட்டாயப்படுத்தப்பட்டு வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

- வி. களத்தூரிலிருந்து நமது நிருபர் இக்பால். பி,இ.,

owned and Published by M. Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chenni - 600 001. Editor : M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street Chennai - 600 002.